இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 142 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 04 திங்கட்கிழமை 17.04.2017

## அடுத்த வாரம் கொழும்பு வருகிறார் ஜெய்சங்கர்

*2 மாதங்களில் அவரது 3ஆவது பயணம் இது*

கொழும்பு, ஏப். 17
இந்திய அயலுறவுத்துறைச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கைக்கு மீண்டும் வருகை >> 24

## நயினாதீவு நாகவிகாரையில் மைத்திரி இன்று சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 17
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்கிறார். நயினாதீவு நாகவிகாரையில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபடுவதற்கே >> 24

## போரில் மீட்ட 37.7 கிலோ தங்கம் மத்திய வங்கியின் கையிருப்பில்

கொழும்பு, ஏப். 17
போரின் இறுதியில் மீட்கப்பட்ட, ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான 37.7 கிலோகிராம் தங்கம்தற்போதும்இலங்கை மத்திய வங்கியிடம் உள்ளது.
இதற்கு மேலதிகமாக இராணுவத்தால் கடந்த ஆண்டு தங்கம் என்று கூறி கையளிக்கப்பட்ட 6 கிலோக் கிராம் பொதியும் மத்திய வங்கியிடம் தற்போதும் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக எழுப்பிய கேள்விக்கு வழங்கியுள்ள பதிலிலேயே இலங்கை மத்திய வங்கி மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டது. இது >> 24

## மத்திய வங்கியிடமுள்ள நகைகள் விரைவில் மக்களிடம் மீளளிப்பு

*பாதுகாப்பு அமைச்சு தகவல்*

கொழும்பு, ஏப். 17
போரின் இறுதியில் மீட்கப்பட்ட தங்க நகைகள் இன்னமும் இராணுவத்தினரிடம் இருக்கின்றது என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் சரத் குமார தெரிவித்தார்.
அத்துடன், மத்திய வங்கியிடம் உள்ள தங்க நகைகளை உரியவர்களிடம் மீளளிப்பது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் அடுத்த வாரம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
"மீட்கப்பட்டுள்ள தங்க நகைகளை உரியவர்களை இனம் கண்டு ஒப்படைப்பது தொடர்பில் ஆராய்ந்து திட்டம் தயாரிக்குமாறு, அரச தலைவரும், பாதுகாப்பு அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருந்தார். இதற்கமைவாக செயற்றிட்டம் >> 24




## தென்பகுதி கடற்பரப்பில் பூமியதிர்ச்சி

கொழும்பு, ஏப். 17
நாட்டின் தெற்குக் கடற்பகுதியில் நேற்று 5.7 ரிச்டர் அளவில் பூமியதிர்ச்சி உணரப்பட்டதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்தது. இந்தப் பூமியதிர்ச்சி காலி பிரதேசத்திலிருந்து ஆயிரத்து 500 கடல் >> 24

# மகிந்த, சு.க. தரப்புகளுடன் கூட்டமைப்பு விரைவில் பேச்சு

*புதிய அரசமைப்புக் குறித்து*

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில், மகிந்த அணியுடனும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் தனித்தனியே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வெகு விரைவில் இந்தப் பேச்சு நடைபெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டு வழி நடத்தல் குழு உருவாக்கப்பட்டுள்ளது. வழிநடத்தல் குழுவில் அனைத்துக் கட்சிகளும் பங்கேற்று புதிய அரசமைப்புத் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றன.
இதற்குப் புறம்பாக, ஒவ்வொரு கட்சிகளுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தி புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கு ஆதரவு திரட்டி வருகின்றது. கடந்த வாரமும் மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே.வி.பி) கூட்டமைப்பு பேச்சு நடத்தியிருந்தது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் அணியுடனும் கூட்டமைப்பு விரைவில் தனித் தனியே சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது.
இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுடன் கூட்டமைப்பு ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளது. மீளவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்தவுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன் 3 தடவைகள் பேச்சுக்கள் நடந்துள்ளன. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உடனும் பேச்சு நடைபெற்றதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

காணாமற்போனோர் அலுவலகச் சட்டம்

## பாதுகாப்புத் தரப்பின் ஆட்சேபனைகளுக்கு மைத்திரி பதில் தருவார்

*பாதுகாப்புச் செயலர் நம்பிக்கை*

கொழும்பு, ஏப். 17
காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டம் தொடர்பில் தாம் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விரைவில் பதில் வழங்குவார் என்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி 'சுடர்ஒளிக்குத்' >> 24

முச்சந்தி முரளி



அப்ப பீல்ட் மார்சல் சொன்ன தங்கத்துக்கு என்ன நடந்ததாம்...

## சூரியனின் நேர் உச்சம் விலகியது

*வளிமண்டலவியல் அலுவலகம் தகவல்*

யாழ்ப்பாணம், ஏப். 17
"சூரியன் கடந்த சில தினங்களாக இலங்கைத் தீவில் நேர் உச்சம் கொடுத்திருந்தது. மாவிட்டபுரம், வல்லிபுரம், கல்கிசை பகுதிகளில் நேற்று முன்தினம் நண்பகல் 12.10 மணியளவில் சூரியன் நேர் உச்சம் கொடுத்து, பின்னர் இலங்கையிலிருந்து விலகிச் சென்றுள்ளது. >> 24

காணி விடுவிப்புக் குறித்து

## முப்படைத் தளபதிகளுடன் கூட்டமைப்பு இன்று பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 17
வடக்கு காணி ஆக்கிரமிப்புத் தொடர்பில் ஆவணங்கள், ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு முப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்புச்செயலருடன் இன்றுபேச்சு நடத்தவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.
இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி வடக்கில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், கூட்டமைப்பு முதல் தடவையாக முப்படைத் தளபதிகளுடன் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது.
பாதுகாப்பு அமைச்சில் இன்று மு.ப. 11 மணிக்கு நடைபெறும் இந்தச் சந்திப்பில், முப்படைத் தளபதிகளும், பாதுகாப்புச் செயலரும் மாத்திரம் கலந்து கொள்வர். கூட்டமைப்பு சார்பில் கட்சித் தலைவர் >> 24

## மீதொட்டமுல்ல உறவுகளுக்கு உதவி வழங்க முன்வாருங்கள்

*எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அழைப்பு*

கொழும்பு, ஏப். 17
"மீதொட்டமுல்ல பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இடருக்கு முகம் கொடுத்துள்ள சகோதர சகோதரிகளுக்கு எமது ஒற்றுமையை வெளிக்காட்ட அனைவரும் முன்வர வேண்டும்" >> 24



யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் வாகனம் விபத்து

## ஒரே மோ. சைக்கிளில் சென்ற மூவரில் ஒருவர் உயிரிழப்பு

*பூநகரியில் நேற்று மாலை சம்பவம்*

யாழ்ப்பாணம், ஏப். 17
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 24

## இரண்டாம் தவணையிலிருந்து மாணவர்களுக்குக் காப்புறுதி

*வடக்கு கல்விச் செயலர் அறிவிப்பு*

யாழ்., ஏப். 17
இரண்டாம்தவணை ஆரம்பத்திலிருந்து, பாடசாலை மாணவர்களுக்கான 2 லட்சம் ரூபா பெறுமதியிலான காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
கொழும்பு அரசின் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட திட்டமே இவ்வாறு செயலுறுப் பெறவுள்ளது. >> 24

பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## கூடியளவு உதவிகளை விரைந்து வழங்கவேண்டும்

*அதிகாரிகளுக்கு மைத்திரி பணிப்பு*

கொழும்பு, ஏப். 17
"மீதொட்டமுல்ல குப்பை மேட்டின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தமையால் பாதிப்புக்குள்ளான மக்களுக்குக் கூடியளவு உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். >> 24

யாழ்ப்பாண வணிக வளாகத்தை

## நகரின் மையத்தில் நிறுவவேண்டும்

*வடக்கு மாகாண சபையிடம் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஏப். 17
"யாழ்ப்பாணத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள வணிக வளாகத்தை நகரின் மையத்தில் அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை முன்வர வேண்டும்"
இவ்வாறு யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.
"யாழ்ப்பாணத்தில் ஆயிரம் மில்லியன் ரூபாவில் >> 24

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பத்தலைவர் சாவு

*அடம்பனில் சனியன்று இரவு பரிதாபம்*

மன்னார், ஏப். 17
மன்னார், அடம்பன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார் என்று >> 24



### அரசு மீண்டும் ஏமாற்றினால்

# பன்னாட்டுச் சமூகத்துடன் இணைந்து கூட்டமைப்புத் தீர்மானத்தை எடுக்கும்

## புங்குடுதீவில் மாவை எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 17

"2 வருட காலஅவகாசம் இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பமாகும். அரசு எங்களை ஏமாற்ற நினைத்தால் அது உலக நாடுகளை ஏமாற்றும் செயலாகவே அமையும். அவ்வாறான நிலமை ஏற்பட்டால் நாங்கள் வெளிநாடுகளுடன் இணைந்து எவ்வாறான தீர்மானத்தை எடுப்போம் என்று எமக்கும் பன்னாட்டு சமூகத்துக்கும் தான் தெரியும்"

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் அம்பலவாணர் கலையரங்க திறப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்றையதினம் சட்டத்தரணி மு. நேமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிடைத்துள்ள கால அவகாசத்தில் இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதனைவிடுத்து மீண்டும் இந்த அரசு எங்களை ஏமாற்ற நினைத்தால், நாம் வெளிநாடுகளுடன் இணைந்து இராஜதந்திர ரீதியில் எவ்வாறான தீர்மானத்தை எடுக்கவுள்ளோம் என பன்னாட்டுச் சமூகம் நன்கு அறியும்.

எமது மக்களின் விடுதலைக்காக இலட்சக்கணக்கான உயிர்களை இழந்து விட்டோம். தமிழ் மக்களின் காணிகளை இன்றும் இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ளது. காணி விடுவிப்புத் தொடர்பாக இன்றையதினம் பாதுகாப்புத் தரப்புடன் முக்கிய கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளோம்.

புங்குடுதீவு பிரதேசத்தை நாம் மறக்கமுடியாத அளவுக்கு சில சம்பவங்கள் மற்றும் அந்த மக்களின் உதவிகள் போன்றன காணப்படுகின்றன. கடந்த காலங்களில் நாம் இந்தப் பிரதேசத்துக்கு வந்திருந்த போது ஆயுதக் குழு ஒன்று எம்மை துப்பாக்கிகளால் சுட்டும், வாள்களால் வெட்டியும் சரித்தது. அந்தக் கொடூர சம்பவத்தால் இரண்டு உயிர்களை நாம் இழந்தோம்.

குருதிக் கறையுடன் படுகாயத்துடன் இருந்த எங்களை இந்த மக்கள்தான் காப்பாற்றினார்கள். அதனை நாம் எந்தக் காலத்திலும் மறக்க மாட்டோம். எனது விடுதலைப் போராட்ட காலத்தில் நான் சிறைக்குச் சென்ற போதும் என்னுடன் இந்தப் பிரதேசத்தை சேர்ந்த சிலர் என்னுடன் இருந்தனர்.

நாங்கள் சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே வரும்போது இந்த மக்கள் தங்களின் உடலில் காயத்தை ஏற்படுத்தி அவர்களின் குருதியை எமது நெற்றியில் பூசினார்கள். அவ்வாறான போராட்டத்துக்கு முக்கிய பங்காற்றிய மக்கள்தான் இந்தப் பிரதேச மக்கள்.

இவ்வாறு எமது விடுதலைக்காக பல போராட்டங்களை மேற்கொண்டிருந்த காலத்தில் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலமை உருவாகியதால் விடுதலைப்புலிகள் அமைப்பு உருவானது. அதன் ஊடாகவும் அரசியல் ரீதியாகவும் என இரண்டாக நாம் எமது உரிமைகளை வென்றெடுக்க போராடினோம். எனினும் ஆயுதப் போராட்டம் மௌனிக்க பட்டபின்னர் நாம் அரசியல் ரீதியாக உரிமைகளை வென்றெடுக்க போராடிவருகின்றோம். ஆனால் இலட்சக்கணக்கான உயிர்களை இழந்து ஜனநாயக ரீதியில் நாங்கள் போராடிவரும் நிலையில் எமது சமூகம் போதைக்கு அடிமையாகி வருகின்றது.

போதையின் அடிமைத்தனத்துக்கு ஒரு உதாரணமாக இந்த பிரதேசத்திலும் ஒரு கொடூரமான சம்பவம் நடந்தேறியது அனைவரும் அறிந்திருப்பீர்கள். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவியை அவளது உறவினர்களே கூட்டு பலாத்காரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டி சிலர் கைது செய்யப்பட்டு வழக்கும் நடைபெற்று வருகின்றது. எமது சமூகத்தில் உறவினர்களாலேயே இவ்வாறான கொடூரம் நடைபெற்றுள்ளது என்பதைப் பார்க்கும்போது எமது சமூகம் எந்தளவுக்கு போதைக்கு அடிமையாகி வருகின்றது என்பதை உணர முடிகின்றது.

எமது மாகாணத்தில் அதிகளவான போதைப்பொருள்கள் கைப்பற்றப்படுகிறன. அவை யாருக்கு எங்கு செல்கின்றன என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. எமது பிள்ளைகள் என்ன செய்கின்றனர் என்று பெற்றோர்களும் ஆசிரியர்களும் அறிந்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

போருக்கு முன்னரும் போர்க்காலத்திலும் கல்வியில் கொடிகட்டிப் பறந்த நாம் தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ளோம். கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் ஓரளவு திருப்தியான முடிவுகளைத் தந்தாலும் கல்வியில் மேலும் உயர வேண்டிய தேவை இருக்கின்றது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் பத்தாம் தரத்துக்கு மாணவன் வரும் போதே அவர்கள் உயர்தரத்தில் எந்த துறையை தெரிவு செய்ய வேண்டும், பல்கலைக்கழகத்துக்குச் சென்று எந்தத் துறையைக் கற்க வேண்டும் என ஆலோசனையை வழங்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் உள்ள பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறுவோரில் 65 வீதமானோர் கலைப் பிரிவுப் பட்டதாரிகளாகவே காணப்படுகின்றனர். இவ்வாறான நிலமை இருந்தால் எமது பிரதேசத்துக்கு தேவையான மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்றவர்களை எவ்வாறு நியமிப்பது என்றார்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் கா.குகபாலனால் எழுதப்பட்ட தீவகத்தின் தொன்மையும் மேன்மையும் என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்த நூலை யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிகபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி வெளியிட்டு வைத்தார்.

(வ-8)

---

# சாலை விபத்துகளால் சனியன்று 12 பேர் சாவு

கொழும்பு, ஏப். 17

புத்தாண்டு கால சாலை விபத்துக்களில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாத்திரம் 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு வார இறுதி நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை, நாடு முழுவதிலும் பல்வேறு விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

(வ-5)

---

# வாகனத்தை உருமாற்றம் செய்வது தண்டனைக்குரிய சட்டமீறலாகும்

## யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவிப்பு

வாகனங்களின் வடிவங்கள், நிறம், ஒலிகள் என்பவற்றில் மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது வாகனங்களின் அதன் உற்பத்தி புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவங்களை மாற்றுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் இளைஞர்கள் சிலர் வாகனங்களை தமது விருப்பத்தின் படி வடிவங்களை மற்றும் ஒலி எழுப்பும் சாதனங்களை (கோர்ன் மற்றும் சைலன்சர்) மாற்றுவது அதிகரித்து வருகின்றது.

அவர்களின் இத்தகைய தவறுகளுக்கு சரியான விழிப்புணர்வுகள் அவர்களிடத்தே இல்லாமையே முக்கிய காரணமாகும். வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் வழிமறித்து தண்டம் விதிக்கின்ற போது இவைகளை குற்றமாக இளைஞர்கள் கருதாமல் வாக்கு வாதங்களில் ஈடுபடுகின்றனர்.

வாகனஉற்பத்திப் புத்தகத்தில் இருக்கின்ற வடிவங்கள், நிறங்கள் மாற்றுவது குற்றச்செயல்களில் ஈடுபடுவதை அதிகரிக்க செய்கின்றது. இவைகளால் பொலிஸ் விசாரணைகளில் தடை ஏற்படுகின்றது.

இதேவேளை, வாகன ஒலிகளை மாற்றுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இவைகளால் தான் வீதிகளில் விபத்துக்கள் இடம் பெறுகின்றன. வாகனங்களில் மேலதிகமான பல வர்ண விளக்குகள் பொருத்துவதும் குற்றம் என்பதால் சட்ட திட்டங்கள் தொடர்பில் உரிமையாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். இந்த நடைமுறைகளை மீறி செயற்படுபவர்கள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-ரி1)

---

# யானை தாக்கிய முதியவருக்கு ரூபா 75,000 மருத்துவ நிதியுதவி

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 17

ஒட்டுசுட்டான் பிரதேச ஒலுமடுப் பகுதியில் யானையால் தூக்கிவீசப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெறும் முதியவரின் உடனடி மருத்துவச் செலவுக்காக 75 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படுவதாக பிரதேச செயலாளர் அநிருத்தனன் தெரிவித்தார்.

ஒலுமடுக் குளத்தில் மீன்பிடிப்பதற்காக கடந்த புதன்கிழமை முதியவர் சென்றார். குளக்கரையில் நின்ற யானை அவரைத் தூக்கி வீசியது. குளத்துக்குள் வீழ்ந்ததனால் தெய்வாதீனமாக முதியவர் உயிர்தப்பினார். ஒலுமடுவைச் சேர்ந்த 79 வயதான காளிமுத்து என்ற முதியவரே இவ்வாறு படுகாயமடைந்தார். அவர் கிளிநொச்சி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

"இந்தச் சம்பவம் தொடர்பில் எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. யானையால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெறுபவர்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த நிதியிலிருந்து குறித்த முதியவரின் குடும்ப நிலமையைக் கருத்திற்கொண்டு உடனடி மருத்துவச் செலவுக்காக 75 ரூபா வழங்கப்படுகிறது" என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

(வ-101)

---

# புத்தாண்டுக் காலத்தில் ரயிலில் பயணிக்க யாழ்ப்பாண மக்கள் ஆர்வம் காட்டவில்லை

## யாழ். தொடருந்து நிலையம் தெரிவிப்பு

யாழ்பாணம் ஏப்.17

"தமிழ் புத்தாண்டை முன்னிட்டு தொடருந்து போக்குவரத்தில் யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. தற்போது நிலவும் கடும் வெயில் காராணமாக மக்கள் தொடருந்துப் பயணத்தை விரும்புவது குறைவு"

இவ்வாறு யாழ்ப்பாண தொடருந்து நிலையத்தின் பயணச்சீட்டு கருமபீடம் தெரிவித்தது.

யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்திலிருந்து கொழும்பு செல்லும் குளிரூட்டிய நகர்சேர் கடுகதி தொடருந்துக்கான ஆசனங்கள் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே முற்பதிவு செய்யப்பட்டன. வழமையாக குளிரூட்டப்பட்ட சொகுசு தொடருந்தின் ஆசனங்கள் 3 அல்லது 4 நாட்களுக்கு முன்னரே முற்பதிவுகள் செய்யப்படும்.

பண்டிகை மற்றும் விடுமுறை நாட்கள் அதிகம் என்பதால் ஒரு மாத காலத்துக்கு முன்னரே குளிரூட்டிய நகர்சேர் கடுகதி தொடருந்து ஆசனங்கள் எதிர் வரும் 23ஆம் திகதி வரை முற்பதிவு செய்யபட்டுள்ளன. ஏனைய தொடருந்தின் ஆசனப் பதிவுகள் நாளைமறுதினம் வரை முற்பதிவு செய்யபட்டுள்ளன.

இந்தப் பதிவுகளில் அநேகமானவை வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்தவர்களாவர்.

விடுமுறையை யாழ்ப்பாணத்தில் கழித்து விட்டு தமது பிரதேசத்துக்குத் திரும்பும் பயணிகளாகவே அவர்கள் உள்ளனர்" என்று யாழ்ப்பாண தொடருந்து நிலைய பயணச்சீட்டு கருமபீடம் மேலும் தெரிவித்தது. (வ-ரி)



# மரம் கடத்திய குற்றச்சாட்டில் இருவருக்கு மறியல்

கிளிநொச்சி, ஏப்.17
கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு முதிரைக் குற்றிகள் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று உத்தரவிட்டது.

கடந்த புதன்கிழமை அதிகாலை கிளிநொச்சி, தருமபுரத்தில் ஹையேஸ் வாகனத்தில் முதிரைக் மரக்குற்றிகள் கடத்தப்படுகின்றன என்று பளைப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டார தலைமையிலான குழுவினர் அதிகாலை 5.30 மணியளவில் எழுதுமட்டுவாழ் பகுதியில் ஹையல் வாகனத்தை மறித்துச் சோதனை செய்தனர். முதிரைக் மரக்குற்றிகளைக் கைப்பற்றியதுடன், இரு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-6)

# பாடசாலைகள் மூடப்படுவதை தடுப்பதற்கு முன்வரவேண்டும்

## ஆறு. திருமுருகன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.17
எம் முன்னோர்கள் கல் சுமந்து கொட்டில் இட்டுக் கட்டியதால் தான் யாழ்ப்பாணம் கல்வியில் தலைநிமிர்ந்து நின்றது. தென்னிலங்கையில் உள்ள சட்டங்களை இங்கே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இங்குள்ள பாடசாலைகளை மூட எத்தனிக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் சொஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்.

உதயன் பத்திரிகை ஏற்பாட்டில் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் புத்தாண்டு நிகழ்வு நடைபெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
ஈழத்தில் பல பத்திரிகைகள் உருவாகி மறைந்துபோயின. ஈழநாடு, ஈழகேசரி பத்திரிகைகள் தொடராக வெளிவந்து கொண்டிருந்தன. உதயன் பத்திரிகை 1985ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை யாழ்ப்பாணத்தின் குரலாக தமிழ் மக்களின் குரலாக பல கஷ்டங்களின் மத்தியில் வெளிவந்து கொண்டிருந்தது. போர்க் சூழலுக்கு மத்தியிலும் பத்திரிகையை மக்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக உதயன் நிர்வாக இயக்குநரை மக்கள் நாடாளுமன்றுக்கு அனுப்பி வைத்தனர்.

இன்று பல வானொலிகள், பத்திரிகைகள் தமிழ் சொற்களை மழுங்கடிக்கின்றன. ஆங்கில சொற்பிரயோகங்கள் அவற்றில் அதிகம். ஆனால் உதயன் பத்திரிகை தமிழ் மக்களின் பாரம்பரியத் தமிழைக் கடைப்பிடிக்கின்றது. உதயன் பத்திரிகையின் அச்சியந்திரத்தை பெரும் கிடங்கு வெட்டிக் கீழிறக்கி பணி செய்ததை மறக்க முடியாது. இரவு முழுவதும் வெடிச் சத்தம், குண்டு வீச்சு என்றாலும் பத்திரிகை வெளிவருகின்றது என்றால் பதுங்கு குழிக்குள் இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்ததுதான் காரணம். வரணியில் இடம்பெயர்ந்திருந்த காலத்தில் உதயன் பத்திரிகை மட்டையில் (பிரிஸ்டல் போட்) வெளியானது. உதயன் பத்திரிகைக்கு நான் ஒன்று கூறவேண்டும். இராமேஸ்வரத்தில் உள்ள எமது உறவுகளின் பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும். அவர்களின் கஷ்டங்களை வெளிக் கொணர வேண்டும்.

மற்றொரு முக்கியமான விடயம். கடந்த ஆண்டு 11 பாடசாலைகளை மூடியிருக்கின்றனர். கோப்பாய் பூதர்மடம் சைவத்தமிழ் வித்தியாலயம் என்று ஒரு பாடசாலை இருந்தது. அதை 5 வருடங்களுக்கு முன்பு மூடிவிட்டார்கள். இப்பொழுது அந்தப் பாடசாலையில் மாட்டுக்கு ஊசி போடுகின்றார்கள் என்றும் நாய்க்கு ஊசி போடுகிறார்கள் என்றும் அறிந்தேன். இந்த வருடத்துக்கு முதலாம் ஆண்டில் சில பாடசாலைகளில் மாணவர்கள் சேரவில்லை. அவையும் மூடப்படும் அபாயம் இருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பின்ர்கள் மற்றும் பத்திரிகைத்துறை சார்ந்தவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். எந்தவொரு பாடசாலையையும் மூட அனுமதிக்கக் கூடாது. அவை மூடப்பட வேண்டிய கதவுகள் அல்ல, அகலமாகத் திறக்கப்பட வேண்டிய கதவுகள் - என்றார். (ற-21-12)

# கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஏப் 17
கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவில் 2 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் காலை 5 மணியளவில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பளைப் பொலிஸார் பளை நகர் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்துச் சோதனையிட்டபோது ஜெல் ரின்னில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை மீட்டனர். கைது செய்யப்பட்ட நபர் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-6)

# விபத்தில் நால்வர் காயம்

சாலையில் கார் கதவைத் திறந்த போது எதிரே வந்த வந்த மோட்டார் சைக்கிள் கதவுடன் மோதியது. அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், மூன்று பிள்ளைகளும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ற-9)

# சிறப்புற நடைபெற்ற உதயன் சித்திரை புதுவருட விழா

யாழ்ப்பாணம், ஏப்.17
உதயன் தமிழ் நாளிதழ் நடத்திய சித்திரைப் புதுவருட விழா 2017 நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என விழா சிறப்பாக நடைபெற்றது.

மு.ப. 10 மணியளவில் தாச்சி சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகின. யாழ். மாவட்டத்தை சேர்ந்த தாச்சி கழகங்கள், கிராமிய விளையாட்டு கழகங்கள் பங்கு கொண்டன. கடும் வெயிலின் மத்தியிலும் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்றன.

பி.ப. 3.30 மணியளவில் சிறுவர்களுக்கான யானைக்கு கண்வைத்தல் போட்டி ஆரம்பமாகியது. பெரும்பாலான சிறுவர்கள் கலந்து கொண்டபோதும் ஒரு சில சிறுவர்களே போட்டியின் விதிமுறைகளுக்கு அமைவாக வெற்றியீட்டினர். முட்டி உடைத்தல், பலூன் ஊதுதல், பணிஸ் உண்ணுதல், போர்த் தேங்காய் உடைத்தல், தலையணைச்சண்டை என்பனவும் சிறப்பாக நடைபெற்றன.

முதியவர்களுக்கான நிகழ்வும் இடம்பெற்றது. சிறப்பு நிகழ்வாக பப்பாசிப் பழத்திலுள்ள விதைகளை சரியாக கணக்கிட்டுக் கூறுதல், அல்லது அண்ணளவான தொகையை கூறுதல் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறுவர்கள், மற்றும் பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். தொடர்ந்து பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகள், ஆண்களுக்கான கயிறிழுத்தல் போட்டிகள் நடைபெற்றன.

பி.ப. 5.30 மணியளவில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர். வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றிலில் மாலைகள் அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டார்கள். பாரம்பரிய நடனங்களான மயிலாட்டம், குதிரையாட்டம், பொம்மலாட்டம், வாத்தியகருவிகள் இசைத்தல் என்பன அதில் இடம்பெற்றன. விருந்தினர்கள் தங்களுடைய இருப்பிடங்களில் அமர்ந்ததன் பின்னர் குதிரையாட்டம், மயிலாட்டம், பொம்மலாட்டம் என்பன சிறப்பான முறையில் இடம்பெற்றன. அவை பலரை ஈர்த்தன.

கிராமிய நடன நிகழ்வுகள் போட்டி அடிப்படையில் இடம்பெற்றன. சிறுவர்கள், பெண்கள் அவற்றில் மகிழ்வுடன் கலந்து கொண்டனர். தலைமை உரையைத் தொடர்ந்து விருந்தினர்கள் உரையாற்றினர். சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெற்றது. போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இன்னிசை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். தமிழரசுக் கட்சியின் தலைவரும், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் தவராசா, செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஆகியோருடன் கல்விச் சமூகத்தினரும் கலந்துகொண்டிருந்தனர். நிகழ்வுக்கான பிரதான அனுசரணையை யவ்னா ஐசிபிரி கம்பஸ் (JAFFNA ICBT CAMPUS) வழங்கியது. (ற-21)













# இலங்கைக்கு வரும் வெளிநாட்டவருக்கு தேயிலைப் பொதி

## அரசு திட்டம்

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தேயிலைப் பொதிகளை அன்பளிப்பாக வழங்கும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேயிலைப் பொதியொன்றை வழங்கும் திட்டம் தொடர்பாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசநாயக்க அமைச்சரவைக்குப் பரிந்துரை செய்திருந்தார்.

இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சுடன் பெருந்தோட்டத்துறை அமைச்சு ஆலோசனை நடத்துமாறு அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் நாடு திரும்பும் போது, தேயிலைப் பொதிகளை வழங்கலாம் என்று சில அமைச்சர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். இல்லாவிட்டால், தேயிலைப் பொதிகளை சுற்றுலாப் பயணிகள் தமது பயணம் முழுவதும் காவிக் கொண்டு செல்ல வேண்டியேற்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தேயிலையை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் அறிமுகப்படுத்தும் நோக்கிலேயே இந்தத் திட்டத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. (வ-5)

# 1515 கி.மீ. சைக்கிள் பயணம் மட்டக்களப்பில்

இலங்கையில் வாழும் அனைத்து 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குமாறு கோரி, வவுனியாவைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதாபன் மேற்கொண்ட துவிச்சக்கரவண்டிச் சாதனைப்பயணம் மட்டக்களப்பைச் சென்றடைந்தது.

கடந்த ஒன்பது தினங்களாக அவர் மேற்கொண்டுவரும் குறித்த பயணமானது, கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பித்து நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தைச் சென்றடைந்ததுடன், நேற்றுக் காலை மட்டக்களப்பைச் சென்றடைந்தது. ஆயிரத்து 515 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கும் வகையில் இந்தத் துவிச்சக்கரவண்டிப் பயணத்தை அவர் மேற்கொண்டுள்ளார். (ஐ-21)

### மீதொடமுல்ல குப்பை மேட்டைவிட

# அரசியல்வாதிகளின் உளக் குப்பைகள் விசாலமானவை

## ஞானசார தேரர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 17

அரசியல் தலைவர்களின் உள்ளங்களில் உள்ள குப்பைகள், மீதொடமுல்ல குப்பை மேட்டை விட விசாலமானவை என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

புத்தாண்டு தினமான கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மீதொடமுல்ல இடரில் சிக்கி உயிரிழந்த 8 பேரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. கிரியைகளின் சமய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை ஆட்சி செய்த அனைத்து அரசுகளும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். அனைத்து அரசியல் வாதிகளும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். அவர்களுக்கும், இவர்களுக்கும், தற்பொழுது உள்ளவர்கள் எனவும் பிரித்து கூற முடியாது.

ஆகவே இதன் பின்னாவது இந்த கேவலமான அரசியல் முறையை நிறைவு செய்து, நீலம், பச்சை, சிவப்பு எனப் பிரித்துப் பார்க்காமல், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார். (வ-4)

# தீவிர மதப்பற்றுடையவர்களைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இலங்கை முன்னணி

உலக அளவில் தீவிர மதப்பற்றுடையவர்களைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இலங்கை முன்னணி வகிப்பதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது என்று பிரிட்டன் ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டின் மக்களும் தங்கள் மத ரீதியான உணர்வுகளைக் கொண்டுள்ளார்களா என்ற கேள்வியின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2008, 2009 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுகளில் 99 வீதமான இலங்கையர்கள் தமது மதப்பற்றை வெளிப்படுத்தியதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்கமைய, 5 நாடுகள் இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் காணப்படுகின்றன. இலங்கை, எத்தியோப்பியா, மலாவி, நைஜர், யெமன் ஆகிய நாடுகள் இவ்வாறு ஒரே இடத்தில் உள்ளன. இந்த நாட்டினரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது 99 வீதமானவர்களின் பதில் ஆம் என்றே காணப்பட்டுள்ளது.

புருண்டி ட்ஜிபவ்ட்டியால், மவுரித்தேனியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளில் 98 வீதமானோர் ஆம் எனப் பதிலளித்துள்ளனர். ஆய்வின் முடிவுக்கமைய பல தெற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மத நம்பிக்கை முக்கியமாகக் காணப்படுகின்றது. இத்தாலி நாடு 74 வீத மத உணர்வைக் கொண்டுள்ளது. கிரேக்கம் 71 வீத உணர்வையும், ஐரோப்பிய நாடுகளில் போலந்து அதிகளவான மத நம்பிக்கையைக் கொண்டுள்ளது. அங்கு 86 வீதமானோர் ஆம் என்று பதிலளித்துள்ளனர்.

இந்த பட்டியலில் ஆக குறைவான மத ரீதியான உணர்வை கொண்ட நாடுகளில் ஜப்பான், எஸ்டோனியா, சுவீடன், நோர்வே மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. அவை 7 வீதமான மதஉணர்வை கொண்ட நாடுகளாகும் - என்றுள்ளது. (ஐ-10)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகையம்மன் ஆலயங்களின் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு குருதித்தான நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. (ஐ)

# வடமராட்சி கிழக்கில் 29 குடும்பங்களுக்கு வீடு

யாழ்ப்பாணம், ஏப்.17

வடமராட்சி கிழக்கில் இந்த ஆண்டுக்கான வீட்டுத்திட்டத்தில் 29 வீடுகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அமைத்து வழங்கப்படவுள்ளன.

சமூக வாழ்வில் இணைக்கப்பட்ட 25 போராளிகளுக்கும் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய 4 குடும்பங்களுக்கும் இந்த வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்து வழங்கப்படும் என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

"மீள்குடியேற்ற அமைச்சால் 8 லட்சம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். வீடுகள் யாவும் நூறு நாள்களுக்குள் பயனாளிகளால் கட்டி முடிக்க வேண்டும். குறிப்பாக இந்த வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் இந்த மாதத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன" என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (வ-17)

# வடமராட்சி கிழக்கில் வாழ்வாதாரத் திட்டத்தில் 150 பேருக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஏப். 17

"வடமராட்சி கிழக்கில் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 150 பேருக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். திட்டத்தில் 125 கடற்றொழிலாளர்களும் 25 விவசாயிகளும் இணைத்துக் கொள்ளப்படுவர்"

இவ்வாறு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

"மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவி திட்டத்தின் கீழ் இந்த வாழ்வாதாரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் சுயதொழிலை ஆரம்பிக்கும் பொருட்டு இந்த உதவித் திட்டம் வழங்கப்படும்.

கடற்றொழிலாளர்கள் மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபடவும் விவசாயிகள் அவர்கள் சார்ந்த விவசாயம், கோழிவளர்ப்பு போன்றவற்றை முன்னெடுக்கவும், சிறு கைத்தொழிலை ஆரம்பிக்கவுள்ளோருக்கும் இந்த வாழ்வாதாரத் திட்டத் தின் கீழ் நிதி உதவி வழங்கப்படும். இதற்காக தற்போது 150 பேர் தெரிவு செய்யப்பட்டனர். சுயதொழிலை ஆரம்பிப்பதற்காக ஒரு லட்சம் ரூபா நிதி உதவி விரைவில் வழங்கி வைக்கப்படும்" என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ-17)

# மிருசுவில் சந்தியின் இருபுறமும் நிழற்குடைகளை நிறுவவேண்டும்

## வடக்கு போக்குவரத்து அமைச்சரிடம் வலியுறுத்தல்

தென்மராட்சி ஏப். 17

மிருசுவில் சந்தியின் இருபுறமும் பேருந்துத் தரிப்பிட நிரந்தர நிழற்குடைகள் அமைத்து வழங்குமாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரிடம் அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

ஏ 9 வீதி சீரமைக்க முன்னர் மிருசுவில் சந்தியின் வடக்குப் புறம் நிரந்தர கட்டட வாகனத் தரிப்பிடமும் தெற்குப் புறம் தற்காலிக தரிப்பிடமும் காணப்பட்டன. சாலை சீரமைப்பின் போது அவை அகற்றப்பட்டன. பின்னர் இதுவரை நிழற்குடைகள் அமைக்கப்பட வில்லை.

சாலையின் தெற்குப் புறத்தில் தரிப்பிடக் குறியீடு அமைக்கப்பட்டுள்ள பகுதியில் மரங்கள் எதுவும் இல்லை. யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பயணிகள் கடும் வெயில் மழை போன்ற வேளைகளில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். மிருசுவில் தெற்கு, வடக்கு, உசன் தவசிகுளம் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இந்தத் தரிப்பிடத்தில் தமது பயணங்களை மேற்கொள்ள வருகின்றனர்.

வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் பயணிகள் சந்தியில் உள்ள மரநிழலில் நிற்கவேண்டியுள்ளனர். ஆனால் அந்த இடத்தில் பொலிஸ் நடமாட்டம் காரணமாக பயணிகள் பேருந்துகள் தரிக்காமல் செல்கின்றன. இதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மிருசுவில் சந்தியில் ஏற்கனவே வாகனத் தரிப்பிடங்கள் காணப்பட்ட இடங்களில் புதிதாக நிழற்குடைகளை அமைத்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் மற்றும் பொது அமைப்புக்களிடம் கேட்டுள்ளனர்" என்று மிருசுவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். (வ-9)

# தொண்டைக்குள் கரட் சிக்கியதில் குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 17

கரட் தொண்டையில் சிக்கியதில் ஒரு வயதுக் குழந்தை ஒன்று மூச்சுத்திணறி பரிதாபகரமாக உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் அம்பலந்தொட மிரிஜ்ஜிவில பகுதியில் நேற்று இடம்பெற்றது.

"தாயார் நேற்றுக் காலை குழந்தைக்கு வழங்கிய உணவில் கரட் துண்டுகள் இருந்துள்ளன. அதனைச் சாப்பிட்டபோது, குழந்தையின் தொண்டையில் கரட் துண்டொன்று சிக்குண்டுள்ளது. குழந்தை மூச்சுத் திணறியதால் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் செல்லும் வழியில் குழந்தை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்" என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)



கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட கீழைத்தேய இசைக் கருவிகளை கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி. இராஜினிதேவி சிவலிங்கம், இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜனிடம் இருந்து பெற்றுக்கொண்டார். (ஐ)

உ
சிவமயம்

# திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையால் தீர்க்கப்படாத நிதி சம்பந்தமான விடயங்களும் சிவாலயத்தின் கட்டட திருப்பணியும்

**13-4-2017 பத்திரிகைகளில் ஆலயத்தின் இரண்டாம் கட்ட கருங்கல் திருப்பணி வரும் திங்கட்கிழமை 17-4-2017 பூசைவழிபாட்டுடன் ஆரம்பமாகும் எனவும் அடியார்களை தாராளமாக நன்கொடை தந்துதவுமாறும் திருப்பணிச்சபை வேண்டியுள்ளது.**

யாழ்ப்பாணத்து. சிவனடியார், மூலகர்த்தா **சிவதர்மவள்ளல் அமரர் விஸ்வப்பா** ஆலயத்தின் கருங்கல் திருப்பணிக்காகவே அவரின் வாழ்நாள் சேமிப்பை 1979 இல் இருந்து 1982 வரைவழங்கினார். நன்கொடையின் முழு விவரங்கள் சபை அங்கத்தவர்களுக்கு இதுவரை வெளிப்படுத்தப்பட வில்லை. நிர்வாகத்தின் அறிக்கையின் அடிப்படையில் 1982 ஆம் ஆண்டில் அவரின் நன்கொடை 74.5 இலட்சமெனவும் இதில் 5 இலட்சம் முதலீடு செய்யப் பட்டுள்ளதெனவும் கூறப்பட்டுள்ளது. இந்தமுதலீடு 32 கோடிக்கு நடக்க விருக்கும் இரண்டாம் கட்டகருங்கல் திருப்பணிக்கும் போதுமாக வுள்ளது.

**ஆலயத்தின் மகாமண்டபம், திருச்சுற்று மண்டபம்,சுற்றுக் கோயில்கள் அனைத்தையும் கருங்கல்லால் அமைப்பதற்கு தாராளமாக அள்ளிக் கொடுத்தவர் சிவதர்மவள்ளல் அமரர் விஸ்வப்பா என்பது ஆலய வரலாற்றில் இடம்பெறுவது அவசியம்.**

**முதல் கட்டகருங்கல் திருப்பணியாக** மகாமண்டப திருச்சுற்று மண்ட பங்களுக்குரியவேலைகள் 1976 ஆம் ஆண்டு ஆனி மாதம் 16 ஆந் திகதி நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்துடன் ஆரம்பமாகியது.

திருப்பதி தேவஸ்தானம் உட்பட இந்தியாவிலுள்ள பல ஆலயங்கள், காசிமடம், இந்திய மாநில அரசுகள் வழங்கிய முன்பணம் கொண்டு 1979 இல் இத்திருப்பணி இந்தியாவில், மாமல்லபுரத்தில் தொடங்கியது. உல கெங்கும் வாழ்ந்த சைவபெருமக்களும் இத்திருப்பணிக்கு தம்மால் இயன்றளவு அன்பளிப்பை செலுத்தினார்கள்.

**ஆனாலும்** இத்திருப்பணி வேலைகளை முடிப்பதற்காகவே அமரர் விஸ்வப்பாவினால் 1982 வரைஅளிக்கப்பட்ட 69.5 லட்சம் **இத்திருப்பணிக்கு பாவிக்கப்படாமல்** தவறானகையாழுகைக்கு உட்படுத்தப்பட்டதென்று 1995 யிலேயே அங்கத்தவர்களிடையே எழுந்த சந்தேகங்களை மறுக்க முடியாது.

திருப்பணி வேலைகளுக்கு பணம் அனுப்பிவைக்கப்படாததினால் ஏறத்தாள 16 வருடங்களாக இத்திருப்பணி நீடித்து **மூடுகற்களையும் தளவரிசைக்குரிய கற்களையும் தவிர** மண்டபங்களுக்கு தேவைப்பட்ட தூண்களும் சிற்பங் களும் மொத்தமாக 644 கற்கள் 2004/2005 இல் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டன.

6 வருடங்களுக்குபின், 2011 இல் மண்டபங்களை கட்டி முடிப்பதற்கு மேலதிகமாக தேவைப்பட்ட மூடுகற்கள் மற்றும் தளவரிசைகளின் கொள்வனவிற்கு வேண்டிய நிதியுதவி அளித்துமண்டபங்களை நிறுவுவதற்கும் பொறுப்பேற்றது **இந்திய அரசாங்கம்**.

இந்தியப் பணம் 2 கோடிக்குள் முடிக்கப்பட வேண்டிய கொள்வனவிற்கு 9 கோடி செலவிட்டதாக தற்பொழுது அறிந்துள்ளோம். இந்தியா கொடுக்க முன்வந்த நிதியுதவியை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேலதிகமாக தேவைப்பட்ட கற்களோடு ஏற்கனவே, 2005இல் கொண்டுவரப்பட்ட கற்களையும் சேர்த்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இவ்வாறாக அதிகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் தான் இந்திய அரசாங்கம் 13.3 கோடி (இலங்கை பணத்தில் 32 கோடி) இத் திருப்பணிக்காக ஒதுக்கியது.

இந்தியாவின் நிதி 32 கோடியும் முடிவடையும் நிலையில் முழுமை யான பலனை பெறமுடியாதுள்ளதும் துரதிஷ்டவசமாகும் :

- தரம் குறைந்த, 3ஆம் தரக்கற்கள் பாவிக்கப்பட்டுள்ளன.
- பழைய தூண்களுக்கிடையே நிமிர்த்தப்பட்டிருக்கும் புதியவை நிறத்திலும் சிற்ப வேலைகளிலும் வித்தியாசப்படுகின்றன. மேலும் புதிதாக கட்டிய மகாமண்டபத்திலும் மழை நீர் கசிகின்றது.
- பழைய மூலக்கோயிலின் அளவுகள் மாற்றப்பட்டதினால் வாஸ்து சிற்ப ஆகம முறைப்படி மண்டபங்கள் அமைந்துள்ளதா என்பதும் கேள்விக்குறியாகஉள்ளது.

நிதி நடவடிக்கைகளை கட்டுப்பாட்டுக்குள் நடத்துவதற்கு அமைப்பு விதிகளின்படி ஒவ்வொரு ஆண்டும் நடைபெற வேண்டிய உள்கணக்காய்வு 2012-2013 ஆண்டுக்கு நடத்தப்பட்டு அறிக்கையும் வெளியிடப்பட்டது. இதுவே 35 வருடங்களில் முதலும் கடைசியுமாக நடந்த ஆய்வாகும். இவ்வாறாக நிர்வாகம் செயற்படுவதால் முறைப்பாடுகள் செய்யப்பட்டு நிலுவையிலுள்ள சிலவிசாரணைகள் :

<u>10-2-2015</u> நம்பிக்கை நிதிசட்டத்தின் 102 வதுபிரிவின் கீழ் செய்யப்பட்ட குற்றச்சாட்டு மன்னார் பிரதேச செயலகத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் போது அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில விடயங்கள்:

- தங்க நன்கொடைகள்-6 வருடங்களாக (2006-2012) ஆலயக் கணக்கிற்கு கொண்டுவரப்படாதது.
- நிர்வாகத்தின் அறிக்கைக்கு முரணான பங்கு மாற்றத்திற்குரிய ஆவணம் இதனால் விசாரணையை முடக்கும் நோக்கத்துடன் மன்னார் பிரதேச செயலாளருக்கு நீதிமன்ற தடை உத்தரவை 1-4-2014 பிறப்பித்தார்கள். நிர்வாகத்தால் தொடுக்கப்பட்ட இவ் வழக்கு இரண்டு ஆண்டுகள் முடிவடைந்தும் அவர்களாலேயே **17வது** முறையாக தள்ளிப் போடப்பட்டுள்ளது.

<u>22-3-2015</u> - ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட 3 சபை அங்கத்தவர்களடங்கிய குழுவின் விசாரணையைத் திசை திருப்பும் நோக்கத்துடன் **போலியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஓர் சபைத் தீர்மானம்** பற்றிய குற்றச்சாட்டு இதுவரை கூட்டத்தில் ஆராயப்பட வில்லை. ஒருவருடமாக எதுவித நடவடிக்கையும் எடுக்காததினால் இவ்விடயம் தற்சமயம் கொழும்பு குற்றப்புலனாய்வின் விசாரணையில் உள்ளது.

<u>23-3-2016</u> - சிவராத்திரி முடிந்த பின் கன்றுகள் உட்பட 39 ஆவினங்கள், 20 பசுக்களையும் 19 மாடுகளையும் நிர்வாகம் தவறானவர்களுக்கு விற் றுள்ளார்கள் எனவும் தெரியவந்தது. அவற்றில் காப்பாற்றி மீட்கப்பட்ட 9 ஆவினங்களைத் தவிர ஏனையவை உயிருடன் இல்லை என்பதற்கு போதியளவு ஆதாரங்கள் உள்ளன. இந்துசமய அமைச்சில் இவ்விடயம் விசாரணையில் உள்ளது. விற்று கிடைத்த வருமானத்தை '<u>கோயில் செயல் பாடுகளிலிருந்து தேறிய வருமானமென</u>' 31-3-2016 ஆண்டுக் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்கள்.

<u>27-1-2017</u> மண்டபத்தில் போடப்பட்டுள்ள உத்தரங்கள் ஒருங்கமைவாக அமையாததால் அவற்றைசீராக்குவதற்காக இரும்புக் கம்பிகள் நுழைக்கப் பட்டுள்ளன. கருங்கல் கட்டடங்களுக்கு இரும்பு கம்பிகள் பாவிக்கப்படு வதில்லை. ஏற்கனவே துருப்பிடித்திருக்கும் இக்கம்பிகள் நாளடைவில் நசிந்து கற்களின் சமநிலைபாதிக்கப்பட்டு மூடுகற்கள் விழும் அபாயம் உள்ளதால் **உயிர்ச்சேதம் எதுவும் நடைபெறாமல்** தடுப்பதற்காக மாண்புமிகு இந்திய பிரதமருக்கு படங்களுடன் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஒரு கட்டட வடிவமைப்பாளரின் மேற்பார்வையில் இத் திருப்பணி நடைபெறுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 45 இலட்சம் ஒதுக்கப்பட்டது. கட்டட வேலைகள் நடைபெறும் போதே பாரதூரமான முக்கிய தவறுகள் சபைக் கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் இவை நிவர்த்தி செய்யப்படாமல், கருங்கல் கட்டடமாக பார்வைக்கு காட்சியளித்தால் போதுமென்று கூறி அவசர அவசரமாக இவ்வேலைகளை முடித்துள்ளார்கள். இந்நிலையில் 32 கோடி செலவிடப்படவிருக்கும் இரண்டாம் கட்ட கருங்கல் திருப்பணியை மேற்பார்வையிடவும் அதே நிறுவனத்தை 50 இலட்சத்திற்கு நிர்வாகம் நியமித்துள்ளது !

**36 வருடங்களாகநீடித்த இத்திருப்பணி இந்திய நிதியுதவியுடன் முடிவுற்று கும்பாபிஷேகம் நடைபெற வேண்டிய வேளையில் திடீரென 26 சன்னதிகள் கொண்ட சுற்றுக் கோயில்கள் உடைக்கப்பட்டுவிட்டன. கருவறைகளில் 1903 இல் பிரதிஷ்டை செய்யப்பட்டு அருள் பாலித்துக் கொண்டிருந்த மூலவரும் கௌரியம்பாளும் 2015 முதல் பூட்டப்பட்ட நிலையில் இன்னும் எத்தனைஆண்டுகள் இருப்பது?**

அன்பர்களே !

சிவதர்மவள்ளல் விஸ்வப்பாவின் நன்கொடை சம்பந்தமாக 1995 லேயே எம் முன்னோர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் தீரக்கப் படாமல் மூடிமறைக்கப்பட்டது. ஆலயம் 480 கோடி சொத்துக்களை இழந்து நிற்கின்ற நிலையில் நாங்களும் அதே தவறை செய்ய விரும்பாமையால் எம்மிடமுள்ள விவரங்களை ஆவண ஆதாரங் களுடன் மக்களுக்கு அறியப்படுத்த முயற்சிக்கிறோம்.

மேல்கூறப்பட்ட நிதி சம்பந்தமான குழப்பங்களுக்கு முழுமையாக தீர்வுகாணும் முன் மக்களிடம் நன்கொடை வேண்டி நிற்பதுபார தூரமானதவறாகும்.

17-4-2017

ஆட்சிக்குழு அங்கத்தவர்கள்.
சிவகுமார் நமசிவாயம் (0712723045),
த.கணநாதலிங்கம் (0773762755)

# கதலி வாழைப்பழத்தின் விலை குடாநாட்டில் சடுதியாக உயர்வு

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கதலி வாழைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. கிலோ 150 ரூபா முதல் 180 ரூபா வரைக்கும் விற்கப்பட்டது. குறிப்பாக புத்தாண்டு தினத்தில் வாழைப்பழத்துக்கு அனேகமான இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

நீர்வேலி வாழைக்குலை விற்பனை சந்தையில்கூட போதியளவு வாழைக்குலைகள் வந்து சேராததனால் அங்கும் அவற்றின் விலை அதிகரித்துக் காணப்பட்டது.

கதலி வாழைக்குலைகளுக்கே பற்றாக்குறை ஏற்பட்டது. கதலி வாழைகள் கூடுதலாக பாதிக்கப்பட்டதனால்தான் அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

சித்திரை புத்தாண்டு மற்றும் ஆலய வருடாந்தத் திருவிழாக்கள் போன்றவற்றுக்கு வாழைப்பழம் கூடுதலாக பயன்படுத்துவதால் அவற்றுக்கு பெரும் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

வியாபாரிகள் வியாபார நோக்கத்துக்காக பிஞ்சு வாழைக்குலைகளை வெட்டி அவற்றுக்கு மருந்து விசிறி பழுக்கவைத்து விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர் என்று பொதுமக்கள் தரப்பால் குற்றஞ் சாட்டப்பட்டது. (வ-17)

# ஆரியகுளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

"யாழ்ப்பாண நகரில் உள்ள ஆரிய குளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையை மாநகர சபை முன்னெடுத்துள்ளது. குளத்தில் தேங்கிக் காணப்பட்ட பெருமளவு பிளாஸ்ரிக் சோடாப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன. அதனை விட குளத்தைச் சுற்றி காணப்பட்ட செடிகள், புல், பற்றைகள் என்பவனவும் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன"

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

"ஆரியகுளத்தில் காணப்படும் சல்பினியா தாவரங்களும் விரைவாக அகற்றப்படும். குளம் மாசடைவதையும் மற்றும் அதை அழிவில் இருந்து காப்பாற்றவும் பொதுமக்கள் முன்வர வேண்டும்.

குளப்பகுதியில் தேவையற்ற கழிவுகளை வீசிவிட்டு செல்வது உடனடியாகத் தவிர்க்க வேண்டும். குளக்கரையில் கழிவுப் பொருள்களை சேகரிப்பதற்காக கழிவு சேகரிப்பு கூடுகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குள் பிளாஸ்ரிக், சோடா போத்தல்கள், பொலித்தீன் பைகள், இளநீர் கோம்பைகள் உட்பட ஏனைய கழிவுப் பொருள்களைப் போட்டு பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் உதவவேண்டும்.

இப்படியான கழிவுப் பொருள்கள் குளத்தின் கரைப் பகுதிகளில் வீசிவிட்டுச் செல்வதால் அவை காற்றினால் குளத்துக்குள் தூக்கி வீசப்படுகின்றன. இதன் காரணத்தால் குளத்தின் தண்ணீர் மாசடைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது" என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ-17)

# விளையாட்டு விழாவை நடத்த ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்பு

## பொலிஸ் பாதுகாப்புடன் நடந்தன போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 17

வடமராட்சி, வதிரிபொம்மேர்ஸ்விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விளையாட்டு விழாவில் ஒரு தரப்பினர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதனால் பொலிஸாரின் பாதுகாப்புடன் போட்டிகள் இடம்பெற்றன. வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டு கழகம் தமது வருடாந்த விளையாட்டு விழாவை முறைப்படி நடத்தவில்லை என்று குற்றஞ்சாட்டியே விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டு கழகம் பொதுக் கூட்டத்தை நடத்தி புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்த பின்னரே முறைப்படி விளையாட்டு விழாவை நடத்த வேண்டும்" என்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விளையாட்டுப் போட்டி தொடர்பாக பொது மக்களுக்கு உரிய முறையில் அறிவிக்கவில்லை என்றுகூறி அப்பகுதியைச் சேர்ந்த அதிகமானவர்கள் போட்டியில் பங்குபற்றவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கழக உறுப்பினர்கள் சிலர் பதாகைகள் ஏந்திய வண்ணம் மைதானத்தில் உள்நுழைந்து அமர்ந்திருந்தனர்.

"விளையாட்டுப் போட்டி நடத்துவது தொடர்பான கூட்டம் கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் 4 பேர் மாத்திரம் சமுகம் தந்திருந்தனர். இதனால் வீடு வீடாகச் சென்று பணம் சேகரித்து போட்டியை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படியே உறுப்பினர்களிடம் பணம் சேகரித்து போட்டி நடத்தப்பட்டது" என்று பொம்மேர்ஸ் விளையாட்டு கழக த்தினர் தெரிவித்தனர்.

குழப்பம் ஏற்படாதிருக்க நெல்லியடிப் பொலிஸார் குறித்த மைதானத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். (வ-4-108-422)

# முதியவர் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஏப். 17

தோட்டத்துக்குள் சென்ற முதியவர் ஒருவர் அங்கு மறைந்திருந்தவர்களால் மோசமாகத் தாக்கப்பட்டார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் பருத்தித்துறை சாலையை அண்டியுள்ள தோட்டத்தில் இடம்பெற்றது.

உடையார்கட்டு தெற்கைச் சேர்ந்த செல்லப்பா குமாரசாமி (வயது-63) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-9)

அழைப்பு
கிராம அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்
மாகாணக் கண்காட்சி
"கிராமிய வளர்ச்சியே உயர்ச்சி"
இடம் : யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை யாழ்ப்பாணம்
காலம்: 18.04.2017 பிற்பகல் 2.00 - 6.00 மணிவரை
19.04.2017 காலை 10.00 - 4.00 மணிவரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிராம அபிவிருத்திணைக்களம் வடக்கு மாகாணம்.
பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்.




நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும்
சிறப்பு இசையரங்கும்
கலைஞர் ஒன்று கூடலும்

காலம் - 17.04.2017 திங்கள் மாலை 5 மணி
இடம் - நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்

**நிகழ்ச்சிகள்**

மாலை 5 மணிக்கு - ஈழத்தின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்கள் இணைந்து வழங்கும் சிறப்புத்தவில், நாதஸ்வர கச்சேரி

**6 மணிக்கு சிறப்பு இன்னிசையரங்கம்**

**பாட்டு - இன்னிசை வேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம்**
**வயலின் - திரு. அ. ஜெயராமன்**
**மிருதங்கம் - நல்லை க. கண்ணதாஸ்**
**கெஞ்சிரா - திரு. ஞா. வசந்**
**முகர்சிங் - திரு. ந. சதீஸ்குமார்**

குறிப்பு - இன்று மாலை 4.30 மணியளவில் இளங்கலைஞர் மன்ற நிறுவுனர் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்து மூத்த இளைய கலைஞர்களை சந்தித்து உரையாடவுள்ளார். எனவே இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அனைத்துக் கலைஞர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

செயலாளர்,
இளங்கலைஞர்மன்றம்.

# நல்லை ஆதீனத்தில் குருத்துவ முழுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 17

நுணாவில் விளைவேலி ஆதீனம் பிரம்ம ஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள் மயூர சர்மாவுக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆச்சாரிய முழுக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

குருமார்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் தீட்சையின் உயர் படிநிலையான ஆச்சாரிய முழுக்கை மயூர சர்மாவுக்கு யாழ்ப்பாணத்தின் முதன்மைக் குருமார்கள் ஒன்று சேர்ந்து நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)


சிவன் ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்
076 585 9977 , 077 835 7307
துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்
மெய்யன்பர்களே !
இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.
100% உத்தரவாதம்
இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

ஆசிரியர் தேவை
குருநாகல் மாவட்டத்தின் பிரபல
தமிழ்மொழிமூல தேசிய
பாடசாலையான
மதீனா தேசிய பாடசாலையில்
க.பொ.த. உயர்தரத்தில்
உயிரியல் பாடம் கற்பிக்க பட்டதாரி
ஆசிரியர் ஒருவர் தேவை.
தகைமையுள்ளவர்கள் உடன்
தொடர்புகொள்ளவும்
077 895 9790, 072 412 1750,
071 815 6287, 076 564 6053

# இழுவை மடி மூலம் இறால் பிடித்தவர்கள் தீவகத்தில் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்ப்பாணம், தீவகம் கடற்பரப்பில் இழுவை மடி மூலம் இறால் பிடிப்பில் ஈடுபட்ட 8 பேர் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டனர்

"கடற்றொழில் நீரியல்வள திணைக்கள பரிசோதகர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தீவகக் கடற்பரப்பில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

புங்குடுதீவு மற்றும் வேலணை கடற்பகுதியில் படகில் இழுவை மடியைப் பயன்படுத்தி இறால் பிடிக்கும் பணியில் ஈடுபட்ட நான்கு படகுகளும் அதில் தொழிலில் மேற்கொண்ட 8 மீனவர்களும் சிக்கிக் கொண்டனர். 8 பேரும் கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இழுவை மடியைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதால் கடல் உயிரினங்கள் அழிக்கப்படுகின்றன. இதன் காரணத்தால் இழுவை மடி இறால் பிடிப்புக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது" என்று கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)

## முதலையிடம் சிக்கியவர் மீட்பு

மட்டக்களப்பு துறை நீலாவணை 6ஆம் வட்டாரம் பகுதியில் நேற்று அதிகாலை மீன்பிடிக்கச் சென்ற ஒருவர், 14 அடி நீள மான இராட்சத முதலையின் பிடியில் அகப்பட்டார். அவர் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் குறித்தநபர், குளத்தில் தோணியில் இருந்து மீன்பிடித்துள்ளார். அவ்வேளையில் தோணியின் அடிப் பாகத்தை உடைத்துக் கொண்டு வந்த முதலை, அவரது காலைப்பிடித்து இழுத்துள்ளது. அப்போதுதோணி இரண்டாக உடைந்தது. அதற்குள் நீர் நிரம்பியதால் அவரும் நீருக்குள் மூழ்கியுள்ளார்.

எனினும் முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட அவர் பலமணிநேரம் முதலையுடன் போராடியுள்ளார். பின்னர் பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் ஏனைய மீனவர்களால் அவர் காப்பற்றப்பட்டார். (ஐ-ய)


## கண்ணீர் அஞ்சலி



14.04.2017 அன்று காலமாகிய
இணுவில் மேற்கை சேர்ந்த
திருமதி **துவாரகை ஜெயக்குமார்**
அவர்களுக்கு எமது
கண்ணீர் அஞ்சலியை
தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

திருமதி நாகேஸ்வரி - குடும்பம்
திருமதி பூலோகராணி - குடும்பம்
திரு. பரமலிங்கம் - குடும்பம்
திரு. திரவியராஜா - குடும்பம்
திரு. திருச்செந்தூர் தேவன் - குடும்பம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15 . 09 . 1936



விண்ணில்
28 . 04 . 2016

**அமரர் இராசா அருணகிரி**
(A-40/CL - 29 கார் உரிமையாளர்)
திதி: ஷஷ்டி

குடும்ப வம்ச விளக்காய் ஒளிர்ந்து உறவுகளை வாழ வைத்த தெய்வமே...
ஆண்டொன்று சென்றாலும் - என்றும் எமது ஈர்விழிகளின் நீர் வற்றும்வரை...
சொரிந்து சொரிந்து - தம் வாழ் நினைவுகளை மீட்டு - எமது
வாழ்வைத் தீட்டி மெரு கூட்டுவோம்!
"ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்"

அரசடி வீதி,
இருபாலை கிழக்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்
021 223 0706

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18 . 12 . 1932



இறப்பு
28 . 04 . 2016

**அமரர் சின்னட்டி மார்க்கண்டு**

ஆண்டு ஒன்று ஆனதுவோ ஐயா
நீங்கள் இறைவன் அடி சேர்ந்து
மீண்டும் ஒரு முறை வர மாட்டீரோ
என்று ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கள் இதயங்களில் ஏற்றி வைத்த
அன்பு என்னும் தீபம்
காலம் காலமாய் கண்ணீரில்
சுடர் விட்டுக் கொண்டே இருக்கும்
உருவம் தான் எங்களை விட்டு பிரிந்ததே தவிர உள்ளத்தில்
என்றும் வைத்து பூஜிக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

"அட்ஷய பவனம்"
ஆனைக்குட்டி மதவடி,
தெல்லிப்பழை

உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பெறாமக்கள்

# துயர் பகிர்வு

மண்ணில்
15.07.1928

விண்ணில்
06.04.2017



சித்திரை மாத நிலவு
ஈரமற்றுப்போன காற்று
தென்னை வனத்திலே
உன்னை விதைத்தோம்

நெல்வயல் வரப்பு
நீ உலாவின பரப்பு
திக்கற்று திசை மாறி எம் தவிப்பு

செருப்பறியாய்
கால்களினால்
நட நடவென நடப்பாய்
சிரித்துச் சிரித்து துயரைக் கடந்தாய்

எட்டு பிள்ளைகள் ஆளாக
தேய்ந்தாய் அம்மா
காலத்தை தேய்த்தாய் அம்மா
கணவனை இழ(ள)ந்தாய்
இளவயதில்
கண்ணகியானாய்
பின்பு
வறுமையென்னும் பாண்டியனை
உன் உழைப்பால் கொன்று
பிள்ளைகளில் பெருமையுற்றாய்
போர்க் காலம் சூழ்ந்த நீண்ட நெடியுகத்தில்
வீரர்களின் முகமானாய்
போராளிகளின் தாயானாய்
பளையம்மா பளையம்மா எனப் பெயரெடுத்து
அவர்கள் இதயத்தில் நீயானாய்

யார் மறந்தாலும் நீ வளர்த்த
தென்னை பனை மறவாது
தேங்கு வயல் தூங்காது

உன் சீவியத்தில் நேசித்தோம்
எங்கள் சீவியம் வரை மறவோம்
நித்தியத்தில் இளைப்பாறம்மா

**திருமதி அக்னஸ் யோசேப்**
(பளையம்மா, டொக்கம்மா)

அன்னை இல்லம்
புலோப்பளை, பளை.

செல்வம் அருளானந்தம் - மருமகன்
(காலம் சஞ்சிகை ஆசிரியர்) கனடா.

# கதலி வாழைப்பழத்தின் விலை குடாநாட்டில் சடுதியாக உயர்வு

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கதலி வாழைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. கிலோ 150 ரூபா முதல் 180 ரூபா வரைக்கும் விற்கப்பட்டது. குறிப்பாக புத்தாண்டு தினத்தில் வாழைப்பழத்துக்கு அனேகமான இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

நீர்வேலி வாழைக்குலை விற்பனை சந்தையில்கூட போதியளவு வாழைக்குலைகள் வந்து சேராததனால் அங்கும் அவற்றின் விலை அதிகரித்துக் காணப்பட்டது.

கதலி வாழைக்குலைகளுக்கே பற்றாக்குறை ஏற்பட்டது. கதலி வாழைகள் கூடுதலாக பாதிக்கப்பட்டதனால்தான் அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

சித்திரை புத்தாண்டு மற்றும் ஆலய வருடாந்தத் திருவிழாக்கள் போன்றவற்றுக்கு வாழைப்பழம் கூடுதலாக பயன்படுத்துவதால் அவற்றுக்கு பெரும் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

வியாபாரிகள் வியாபார நோக்கத்துக்காக பிஞ்சு வாழைக்குலைகளை வெட்டி அவற்றுக்கு மருந்து விசிறி பழுக்கவைத்து விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர் என்று பொதுமக்கள் தரப்பால் குற்றஞ் சாட்டப்பட்டது. (வ-17)

# ஆரியகுளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## *ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,ஏப்.17

“யாழ்ப்பாண நகரில் உள்ள ஆரிய குளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையை மாநகர சபை முன்னெடுத்துள்ளது. குளத்தில் தேங்கிக் காணப்பட்ட பெருமளவு பிளாஸ்ரிக் சோடாப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன. அதனை விட குளத்தைச் சுற்றி காணப்பட்ட செடிகள், புல், பற்றைகள் என்பவனவும் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன”

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

“ஆரியகுளத்தில் காணப்படும் சல்பினியா தாவரங்களும் விரைவாக அகற்றப்படும். குளம் மாசடைவதையும் மற்றும் அதை அழிவில் இருந்து காப்பாற்றவும் பொதுமக்கள் முன்வர வேண்டும்.

குளப்பகுதியில் தேவையற்ற கழிவுகளை வீசிவிட்டு செல்வது உடனடியாகத் தவிர்க்க வேண்டும். குளக்கரையில் கழிவுப் பொருள்களை சேகரிப்பதற்காக கழிவு சேகரிப்பு கூடுகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குள் பிளாஸ்ரிக், சோடா போத்தல்கள், பொலித்தீன் பைகள், இளநீர் கோம்பைகள் உட்பட ஏனைய கழிவுப் பொருள்களைப் போட்டு பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் உதவவேண்டும்.

இப்படியான கழிவுப்பொருள்கள் குளத்தின் கரைப் பகுதிகளில் வீசிவிட்டுச் செல்வதால் அவை காற்றினால் குளத்துக்குள் தூக்கி வீசப்படுகின்றன. இதன் காரணத்தால் குளத்தின் தண்ணீர் மாசடைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது” என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ-17)

# விளையாட்டு விழாவை நடத்த ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்பு

## *பொலிஸ் பாதுகாப்புடன் நடந்தன போட்டிகள்*

யாழ்ப்பாணம், ஏப். 17

வடமராட்சி, வதிரிபொம்மேர்ஸ்விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விளையாட்டு விழாவில் ஒரு தரப்பினர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதனால் பொலிஸாரின் பாதுகாப்புடன் போட்டிகள் இடம்பெற்றன.

வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டு கழகம் தமது வருடாந்த விளையாட்டு விழாவை முறைப்படி நடத்தவில்லை என்று குற்றஞ்சாட்டியே விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

“வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டு கழகம் பொதுக் கூட்டத்தை நடத்தி புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்த பின்னரே முறைப்படி விளையாட்டு விழாவை நடத்த வேண்டும்” என்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விளையாட்டுப் போட்டி தொடர்பாக பொது மக்களுக்கு உரிய முறையில் அறிவிக்கவில்லை என்றுகூறி அப்பகுதியைச் சேர்ந்த அதிகமானவர்கள் போட்டியில் பங்குபற்றவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கழக உறுப்பினர்கள் சிலர் பதாகைகள் ஏந்திய வண்ணம் மைதானத்தில் உள்நுழைந்து அமர்ந்திருந்தனர்.

“விளையாட்டுப் போட்டி நடத்துவது தொடர்பான கூட்டம் கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் 4 பேர் மாத்திரம் சமுகம் தந்திருந்தனர். இதனால் வீடு வீடாகச் சென்று பணம் சேகரித்து போட்டியை நடத்துவது எனத்தீர்மானிக்கப்பட்டது. இதன்படியே உறுப்பினர்களிடம் பணம் சேகரித்து போட்டி நடத்தப்பட்டது” என்று பொம்மேர்ஸ் விளையாட்டு கழக த்தினர் தெரிவித்தனர்.

குழப்பம் ஏற்படாதிருக்க நெல்லியடிப் பொலிஸார் குறித்த மைதானத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். (வ-4-108-422)

**அழைப்பு**

**கிராம அபிவிருத்தி திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**

**மாகாணக் கண்காட்சி**

“கிராமிய வளர்ச்சியே உயர்ச்சி”

இடம் : யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை யாழ்ப்பாணம்

காலம்: 18.04.2017 பிற்பகல் 2.00 - 6.00 மணிவரை

19.04.2017 காலை 10.00 - 4.00 மணிவரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிராம அபிவிருத்திணைக்களம்
வடக்கு மாகாணம்.

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்.

# முதியவர் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஏப். 17

தோட்டத்துக்குள் சென்ற முதியவர் ஒருவர் அங்கு மறைந்திருந்தவர்களால் மோசமாகத் தாக்கப்பட்டார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் பருத்தித்துறை சாலையை அண்டியுள்ள தோட்டத்தில் இடம்பெற்றது. உடையார்கட்டு தெற்கைச் சேர்ந்த செல்லப்பா குமாரசாமி (வயது-63) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-9)




# நல்லை ஆதீனத்தில் குருத்துவ முழுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 17

நுணாவில் விளைவேலி ஆதீனம் பிரம்ம ஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள் மயூர சர்மாவுக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆச்சாரிய முழுக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

குருமார்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் தீட்சையின் உயர் படிநிலையான ஆச்சாரிய முழுக்கை மயூர சர்மாவுக்கு யாழ்ப்பாணத்தின் முதன்மைக் குருமார்கள் ஒன்று சேர்ந்து நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)



**சிவன் ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள

**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**

**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு. காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள். பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.

தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

# இழுவை மடி மூலம் இறால் பிடித்தவர்கள் தீவகத்தில் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்ப்பாணம், தீவகம் கடற்பரப்பில் இழுவை மடி மூலம் இறால் பிடிப்பில் ஈடுபட்ட 8 பேர் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டனர்

“கடற்றொழில் நீரியல்வள திணைக்கள பரிசோதகர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தீவகக் கடற்பரப்பில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

புங்குடுதீவு மற்றும் வேலணை கடற்பகுதியில் படகில் இழுவை மடியைப் பயன்படுத்தி இறால் பிடிக்கும் பணியில் ஈடுபட்ட நான்கு படகுகளும் அதில் தொழிலில் மேற்கொண்ட 8 மீனவர்களும் சிக்கிக் கொண்டனர். 8 பேரும் கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இழுவை மடியைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதால் கடல் உயிரினங்கள் அழிக்கப்படுகின்றன. இதன் காரணத்தால் இழுவை மடி இறால் பிடிப்புக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது” என்று கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)

**நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும்**
**சிறப்பு இசையரங்கும்**
**கலைஞர் ஒன்று கூடலும்**

காலம் - 17.04.2017 திங்கள் மாலை 5 மணி

இடம் - நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்

**நிகழ்ச்சிகள்**

மாலை 5 மணிக்கு - ஈழத்தின் பிரபல நாதஸ்வர. தவில் வித்துவான்கள் இணைந்து வழங்கும் சிறப்புத்தவில், நாதஸ்வர கச்சேரி

**6 மணிக்கு சிறப்பு இன்னிசையரங்கம்**

**பாட்டு - இன்னிசை வேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம்**

**வயலின் - திரு. அ. ஜெயராமன்**

**மிருதங்கம் - நல்லை க. கண்ணதாஸ்**

**கெஞ்சிரா - திரு. ஞா. வசந்**

**முகர்சிங் - திரு. ந. சதீஸ்குமார்**

குறிப்பு - இன்று மாலை 4.30 மணியளவில் இளங்கலைஞர் மன்ற நிறுவுனர் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்து மூத்த இளைய கலைஞர்களை சந்தித்து உரையாடவுள்ளார். எனவே இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அனைத்துக் கலைஞர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**செயலாளர்,**
**இளங்கலைஞர்மன்றம்.**

**ஆசிரியர் தேவை**

குருநாகல் மாவட்டத்தின் பிரபல
தமிழ்மொழிமூல தேசிய
பாடசாலையான
மதீனா தேசிய பாடசாலையில்
க.பொ.த. உயர்தரத்தில்
உயிரியல் பாடம் கற்பிக்க பட்டதாரி
ஆசிரியர் ஒருவர் தேவை.
தகைமையுள்ளவர்கள் உடன்
தொடர்புகொள்ளவும்

077 895 9790, 072 412 1750,
071 815 6287, 076 564 6053

## தொண்டர் ஆசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.17
வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
அதில் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் இ.ஜெயராஜ் தெரிவித்தார். (ற-7)

## டெங்குத் தொற்று கட்டுப்பாட்டுக்குள்

யாழ்ப்பாணம், ஏப்.17
யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் தற்போது டெங்குத் தொற்றுக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்த ஆண்டின் கடந்த 3 மாத காலப்பகுதியில் 314 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஜனவரி மாதத்தில் 153 பேரும், பெப்ரவரி மாதத்தில் 89 பேரும், மார்ச் மாதத்தில் 72 பேரும், இந்த மாதத்தின் கடந்த இரு வார காலத்தில் 25 பேரும் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.
டெங்குத் தொற்று இனங்காணப்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன—என்று சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை தெரிவித்தது. (ற-17)



## 47 நாள்கள் கடந்து கேப்பாபிலவில் தொடர்கின்றது போராட்டம்

முல்லைத்தீவு, ஏப்.17
கடற்படை கையகப்படுத்தியுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி கேப்பாபிலவு மக்கள் நடத்தி வரும் தொடர் அறவழிப் போராட்டம் நேற்று 47ஆவது நாளாகவும் தொடர்ந்தது.
கேப்பாபிலவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்தி இராணுவத்தினரின் முல்லைத்தீவு மாவட்ட தலைமைக்காரியாலாயம் அமைக்கப்பட்டுள்ளது. தங்கள் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி 138 குடும்பங்கள் கடந்த மார்ச் மாதம் 1ஆம் திகதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
கேப்பாபிலவு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களை நேற்று யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் நேரில் சென்று சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். பொதுமக்களுடன் இணைந்து போரட்டத்திலும் கலந்து கொண்டனர்.
"இராணுவம் மாற்றிடத்துக்குச் சென்று நாங்கள் எங்கள் காணிகளுக்குள் சென்று மீள்குடியேறும் வரைக்கும் இந்த தகரக் கொட்டகையிலேயே எம் வாழ்க்கை. மக்களை ஜனநாயக ரீதியில் சுகந்திரமாக வாழ வைப்பது தான் அரசின் கடமை. கூட்டு அரசு அதனை செய்துள்ளதா?" என்று ஆதங்கத்துடன் தெரிவித்தனர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள். (ற-7)

இழுவைமடி தொழிலை தடுக்கும் நோக்கில்

# வடக்கு மீனவருக்கு ஆழ்கடல் படகுகள்

### கொழும்பு மீன்பிடி அமைச்சு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.17
இழுவைமடித் தொழிலைத் தடை செய்யும் நோக்கில் ரோலர் படகுகளுக்கான மாற்றீடாக நீண்ட நாள் தொழில்ப் படகுகளை வடக்கு மாகாண மீனவர்களுக்கு வழங்க கொழும்பு மீன்பிடி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.
வடக்கு மாகாண மீனவர்கள் இழுவைமடித் தொழிலால் தொடர்ச்சியாகப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அதற்கு மாற்றீடாக ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு ஏற்ற வகையில் 100 நீண்ட நாள் படகுகளை வழங்க கொழும்பு அரசு தீர்மானித்துள்ளது.




இந்தத் திட்டத்தின் கீழ் படகுகளை விநியோகிப்பதற்குரிய ஒப்புதலை மத்திய மீன்பிடி அமைச்சு வடக்கு மாகாண சபையிடம் கோரியுள்ளது.
இந்தத் திட்டத்தின் மூலம் இழுவைமடித் தொழிலைத் தடுக்க முடியும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
மாகாண சபையின் திட்டமிடல் கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ள நிலையில் இது தொடர்பாக அதில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-101)

## மாணவர் நலத்திட்டங்களுக்கே ஊதியத்தை பயன்படுத்துகிறேன்

### கே.கே.மஸ்த்தான் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஏப்.17
எனது மாதாந்த ஊதியத்தை மக்களின் நலத் திட்டத்துக்குச் செலவு செய்வேன் என்று தேர்தலின் போது வாக்குறுதியளித்தேன். அதை இன்றுவரை நிறைவேற்றுகின்றேன்.
இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி வன்னி அமைப்பாளருமான கே.காதர் மஸ்த்தான் தெரிவித்தார்.
வவுனியா, குருமன்காட்டு அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை பொருளாதாரத்தில் நலிந்த மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்க வேண்டும். அரசு வழங்கும் வளங்களைச் சரியாகப் பயன்படுத்தி உயர்ந்த நிலைக்குச் செல்ல வேண்டும். எனது ஊதியத்தை நான் எடுப்பதில்லை. மாவட்டத்தில் உள்ள மாணவர்களின் கல்வி நலத் திட்டத்துக்காகப் பயன்படுத்துகின்றேன்.
சிரமத்தின் மத்தியிலேயே உங்கள் பெற்றோர்கள் உங்களைக் கற்பிக்கின்றனர். அதை உணர்ந்து எதிர்காலத்தில் உங்கள் வீட்டுக்கும், நாட்டுக்கும் பயன்படும் வகையில் கற்க வேண்டும் என்றார்.
கனகராஜன்குளம், மாதர் பணிக்கர் மகிழங்குளம், நானாட்டான், பாலமோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)



முச்சக்கர வண்டி தடம் புரண்டதில் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியாவிலிருந்து பூந்தோட்டம் செல்லும் சாலையில் நடந்துள்ளது. முச்சக்கர வண்டியின் முன்சக்கரத்தில் ஏற்பட்ட கோளாறே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-21)

## முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தவேண்டும்

### முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.17
முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.
"முல்லைத்தீவு மாவட்டத்தில் பல கிராமங்களுக்குப் போக்குவரத்துச் சேவைகள் இல்லை. அது தொடர்பாகப் பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கைகள் விடுவிக்கப்பட்டும் பயனில்லை. அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் முச்சக்கர வண்டிகளையே நம்பியுள்ளனர். அவை அதிக கட்டணங்களை அறவிடுகின்றன. கட்டணங்களை எழுந்தமானமாக அறவிடுகின்றனர்.
மாவட்டத்தில் உள்ள முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் சேவையிலீடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர்கள் பொருத்தப்படவுள்ளன என்று அறிகின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்திலும் அது நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்" என்று மக்கள் தெரிவித்தனர். (ற-7)

# நிலம் மீட்கும்வரை ஓயாது போராட்டம்

## முள்ளிக்குளம் மக்கள் உறுதி

மன்னார், ஏப்.17
"இது நாங்கள் வாழ்ந்த மண். இந்த மண்ணை மீட்க நாங்கள் எத்தனை நாள்கள் என்றாலும் தொடர்ந்து போராடுவோம்."
இவ்வாறு உறுதியுடன் தெரிவித்தனர் முள்ளிக்குளத்தில் தொடர் போராட்டம் நடத்தும் மக்கள்.
மன்னார், முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டது முள்ளிக்குளம் கிராமம். அங்குள்ள தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை கடற்படை கையகப்படுத்தி முகாம் அமைத்துள்ளது. அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கிராம மக்கள் கடந்த 25 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.
"நாம் அனைவரும் கிறிஸ்தவர்கள். இன்று (நேற்று) உயிர்த்த ஞாயிற்றுப் பெருவிழா. அதைக் கொண்டாடும் மகிழ்ச்சியான மனநிலையில் நாங்கள் இல்லை. எமது பூர்வீக நிலங்கள் எமக்கு வேண்டும். ஆண்டவன் இயேசு உயிர்த்த இந்த நாளில் எமது வேண்டுதல்களும் உயிர்ப்படையும் என்று நம்புகின்றோம்.
எங்கள் நிலங்கள் எமக்குக் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும். இந்தப் போராட்டத்தை எந்தக் காரணத்துக்காகவும் கைவிடமாட்டோம்." என்று அவர்கள் உறுதிபடத் தெரிவித்தனர்.
மக்களின் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்குகின்றனர். அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், ஏனைய கிராம மக்கள் எனப் பல தரப்பினர் போராட்டக் களத்துக்கு வந்து ஆதரவு தெரிவிக்கின்றனர்.
அதேவேளை, முசலிப் பிரதேசத்தில் உள்ள மறிச்சுக்கட்டிக் கிராம முஸ்லிம் மக்களும் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். தமது பூர்வீக நிலங்களை வன எல்லைப் பகுதிகளாக அறிவித்து வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற வேண்டும் என்று கோரியே அவர்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.
அந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமது பூர்வீக நிலங்களை அபகரிக்கச் சதி முயற்சி நடக்கின்றது என்று குற்றஞ்சாட்டும் மக்கள், வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். (ற-21,12)



பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழா திருப்பலி நடைபெற்றது. உயிர்த்த இயேசுவின் திருச்சொருப பவனியும் நடைபெற்றது. (ற-23)

## காணி அளவீடு நடந்தாலே போராட்டத்தை நிறுத்தலாம்

முல்லைத்தீவு, ஏப்.17
காணி அளவீடுகள் ஆரம்பித்து, காணிகள் வழங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்தனர் கொத்தியாகும்பம் கிராம மக்கள்.
"முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காணிகள் அற்ற ஆயிரம் குடும்பங்களுக்கு காணிகள் வழங்க வேண்டும், கொந்தியாகும்பம் கிராம விசாலிப்புத் திட்டக் காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும், நாகஞ்சோலை கிராம விசாலிப்புத்திட்டத்துக்காக 56 தமிழ் குடும்பங்களுக்கும், 46 முஸ்லிம் குடும்பங்களுக்கும் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்க வேண்டும்'' என்று வலியுறுத்தி நீராவிப்பிட்டி பள்ளிவாசலுக்கு முன்பாக 17 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்தப்படுகின்றது.

> நாகஞ்சோலை கிராம விசாலிப்புத் திட்டத்துக்காக 56 தமிழ் குடும்பங்களுக்கும், 46 முஸ்லிம் குடும்பங்களுக்கும் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தில் நீரா விப்பிட்டி பள்ளி வாசலுக்கு முன்பாக 17 நாள்களாகத் தொடர்போராட்டம் நடத்தப் படுகின்றது.

"மீள்குடியமர்ந்த பின்னர் முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட காணிப் பிரச்சினைகளுககுத் தீர்வு காணப்படவில்லை. எமது பிரச்சினைகளை அதிகாரிகள் மட்டத்தில் தீர்த்திருக்க முடியும். இழுத்தடிக்கப்பட்டதால் போராட்டம் நடத்தும் நிலைமைக்குத் தள்ளப்பட்டோம்.
தற்போது கொத்தியாகும்பம் காணிகளுக்குக் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.
காணிகள் அளவீடு செய்யும் பணிகள் ஆரம்பித்தால் மட்டுமே போராட்டம் முடிவுக்குக்கொண்டு வரப்படும்.
ஏனைய பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் மக்கள் தெரிவித்தனர். (ற-7)






## சமூகப் பணிகளின் மூலம் உயர்ந்துள்ளான் உதயன்

### யாழ். மாவட்ட செயலர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஏப்.17
"ஊடகத்துக்கு அப்பால் சென்று சமூகத்துக்கு ஆற்றுகின்ற சமூகப் பணிகளால் உதயன் உயர்ந்து நிற்கின்றான்.
இவ்வாறு யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். உதயன் பத்திரிகையின் ஏற்பாட்டில் தொல்புரம், வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய வளாகத்தில் நேற்றுமுன்தினம் புத்தாண்டு நிகழ்வு நடைபெற்றது.
அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
உதயன் பத்திரிகை ஊடகம் என்பதைத் தாண்டி மக்களுடன் இணைந்து சமூகப் பணிகளை மேற்கொள்வது வரவேற்கக் கூடிய விடயம். அச்சுறுத்தலுக்கு அஞ்சாது மக்களுக்கு சேவை வழங்கிய ஊடகம் உதயன் பத்திரிகை. இவ்வாறான நிகழ்வுகள் மூலம் மக்களின் திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன." என்று யாழ்.மாவட்டச்செயலர் மேலும் தெரிவித்தார். (ற-21,12)

## சிவில் பாதுகாப்புப் பண்ணையில் பணியாளர்களிடம் பணம் அறவீடு

### அதிகாரிகள் விசாரணைக்காக கொழும்புக்கு அழைப்பு

கிளிநொச்சி, ஏப்.17
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பண்ணைப் பணியாளர்களிடம் முறையற்ற விதத்தில் பணம் அறிவிடப்படுகின்றது என்று செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பண்ணையின் அதிகாரிகள் விசாரணைக்காகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டனர் என்று தெரியவருகின்றது.
போர் நிறைவடைந்த பின்னர் மக்களும், மறுவாழ்வு வழங்கப்பட்ட போராளிகளும் மீள்குடியமர்த்தப்பட்டனர். அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் இந்தப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பணியாற்றுபவர்களிடம் மாதாந்தமும், வருடாந்தமும் பல்வேறு காரணங்களைக் கூறிப்பணம்அறவிடப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.
வருமானப் பணம் 3 ஆயிரம் ரூபா, நாள்பதிவுப் புத்தகத்துக்கு (டயறி) 250 ரூபா, பொங்கலுக்கு 500 ரூபா, சிவில் பாதுகாப்புத் திணைக்கள ஆண்டு விழாவுக்கு ஆயிரம் ரூபா, எரிபொருளுக்கு (டீசல்) 250 ரூபாவும், அதிர்ஸ்ட இலாபச் சீட்டுக்கு 600 ரூபா, சந்தை வியாபாரத்துக்கு 500 ரூபா, நியமனக் கடிதம் தருவதற்கு 500 ரூபா, விடுமுறை எடுப்பதாயின் ஒரு நாளைக்கு 300 ரூபா, பணம் செலுத்தி வீட்டில் நின்று வேலை செய்ய ஆயிரம் ரூபா எனப் பல வகையாகப் பணம் அறவிடப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.
இது தொடர்பாகக் கேள்வி கேட்டால் வேலையில் இருந்து நீக்கி விடுவோம் என்று அதிகாரிகள் அச்சுறுத்துகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
பணியாளர்களிடம் முறையற்ற விதத்தில் பணம் அறவிடப்படுவது தொடர்பாகக் கொழும்பு தலைமையகத்துக்கு முறைப்பாடு அனுப்பப்பட்டது. அதையடுத்து மேற்பார்வைக் குழு பண்ணைக்கு வந்தது. பணியாளர்களுக்கு கூட்டம் நடத்தி பணம் அறவிடப்படுவது தொடர்பாக கேட்டறிந்துள்ளது. பணம் அறவிடப்படுவது தொடர்பாகப் பணியாளர்களிடம் கடிதம் ஒன்றில் கையொப்பம் பெற்றுக் கொண்டதுடன், திணைக்களத்தால் எந்த விதப் பண அறவீடும் செய்யப்படுவதில்லைஎன்றும்கூறியுள்ளது.
சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு அண்மையில் சென்ற சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் பணியாளர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.
பண்ணையின் அதிகாரிகள் கொழும்புக்கு விசாரணைக்கென அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கு சென்று வந்து பணியாளர்களில் யார், யார் முறைப்பாட்டில் கையொப்பம் இட்டுள்ளனர் என்பதை மேற்பார்வைக் குழு (ஓடிற்) காட்டியது என்று கூறியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
"பண அறவீடுகள் தொடர்பாக முறைப்பாடு கிடைத்துள்ளது. இது தொடர்பாக மேற்பார்வைக் குழு மற்றும் எமது தரப்பாலும் விசாரணைகள் நடைபெறுகின்றன. விசாரணை முடிந்ததுமே அது தொடர்பில் கூற முடியும். சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் இவ்வாறான பண அறவீட்டுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. மீறி பண அறவீடு மேற்கொள்ளப்பட்டால் 0112588116 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும்." என்று சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் மேஜர் குமாரதுங்க தெரிவித்தார். (ற-6)

# தேர்தல் இழுத்தடிப்புக்கு பொறுப்புக் கூறவேண்டும்

## தினேஸ் குணவர்தன வலியுறுத்து

கொழும்பு, ஏப். 17
உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும், தேர்தல் ஆணைக்குழுவும் பொறுப்புக் கூற வேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.
கொழும்பு வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:



உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் அதிகாரிகளுக்கு காரணிகளுக்கு அடிபணிந்திருக்காது, தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாகத் தீர்மானங்களை எடுப்பது மிகவும் பொருத்தமானதாக அமையும்.
பொலிஸ் ஆணைக் குழு, அரச சேவை ஆணைக்குழு போன்றன பணிகளைச் செய்து வரும் நிலையில், தேர்தல் ஆணைக்குழு இவ்வாறு செயற்படுவது வருத்தமளிக்கின்றது. தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுவதனால், உள்ளூராட்சி சபை அதிகாரிகள் மக்கள் பணத்தை சட்டவிரோதமான முறையில் செலவிட்டு வருகின்றனர்.
மாநகர சபைகள், உள்ளூராட்சி சபைகளின் கட்டளைச் சட்டங்களை மீறி அதிகாரிகள் செயற்படுகின்றனர். பல்வேறு காரணங்களைக் கூறி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசு முனைப்புக் காட்டி வருகின்றது.
உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதனை ஊகிக்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது-என்றார். (ஐ-10)

## தாய்வானுக்கான நுழைவிசைவில் சலுகைகள்

கொழும்பு, ஏப். 17
இலங்கை உட்பட்ட ஆசிய நாடுகளுக்கு நுழைவிசைவு நடைமுறையில் பல சலுகைகளை வழங்குவதற்கு தாய்வான் அரசு முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நியூ சௌத் பௌண்ட் கொள்கையை மேம்படுத்தும் வகையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.
இலங்கை, தாய்லாந்து, புருனை, மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கான நுழைவிசைவு முறையை இலகுபடுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அயலுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
இதன்கீழ் இந்தியா, வியட்நாம் மியன்மார், கம்போடியா போன்ற நாடுகளின் பயணிகளுக்கு கட்டணமின்றிய நுழைவிசைவை தாய்வான் அறிவித்துள்ளது. (ஐ-10)

## சென்னை விமானநிலையத்தில் இலங்கைப் பயணி சாவு

கொழும்பு, ஏப். 17
சென்னை வானூர்தி நிலையத்தில் இலங்கை செல்ல இருந்த பயணி மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சென்னையில் இருந்து இலங்கைக்குச் செல்ல இருந்த 26 வயதான ஒருவர் இவ்வாறு உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.
இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் நேற்று ஒருநாள் பார்வையாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. (ஐ-10)

## இரட்டைக் குடியுரிமையுள்ள எம்.பிக்களுக்குச் சிக்கல்

கொழும்பு, ஏப். 17
இரட்டைக் குடியுரிமை உள்ள மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் சிலர், கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க விடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளனர்.
நாடாளுமன்றத் தேர்தல்களின் போது இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என அர. சமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது. இரட்டைக் குடியுரிமை உள்ள மாகாணசபை உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள் தற்போது பதவியில் உள்ளவர்கள்
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களின் போது இவ்வாறானவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படக் கூடாது என்று தொகுதி அமைப்பாளர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் யோசனை முன்வைக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## மைத்திரிக்குச் சிறப்பு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ரணில் தயார்

கொழும்பு, ஏப். 17
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குச் சிறப்பு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்குத் தயாராகி வருகிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வருடத்தின் எதிர்காலப் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சிறப்பு அறிக்கை வழங்கப்படவுள்ளது. சிறப்பு அறிக்கை தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
உலக வங்கி பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் காவார்ட் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான மத்திய நிலையம் ஆகியவற்றின் ஆலோசனை வழிகாட்டல்களின் அடிப்படையில் இந்தச் சிறப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக அரசியல் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-10)

## மது நஞ்சானதில் குடும்பத் தலைவர் சாவு

கொழும்பு, ஏப். 17
காலியில், மதுபானம் நஞ்சானதில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துதார். என்று தெரிவிக்கப்பட்டது.
நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த 30 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே சம்பவத்தில் உயிரிழந்தார்.
உயிரிழந்தவரின் உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று முன்தினம் காலி கராபிட்டிய வைத்தியசாலையில் நடைபெற்றது. மதுபானம் நஞ்சானதிலேயே அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சில வேளைகளில் மதுபானம் இவ்வாறு நஞ்சாகக் கூடிய சாத்தியம் உண்டு என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.
குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதே உயிரிழந்திருந்தார் என மருத்துவமனைத் தகவல் கள் தெரிவிக்கின்றன. (ஐ-10)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 17
அம்பலன்தொட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"எலேகொட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் சென்ற இனந் தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில், அம்பாந்தோட்டைப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கூரிய ஆயுதங்களால் தாக்கியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
கடுவலை கொத்தலாவல சந்தியில் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.
இந்த நிலையில் தற்போது அம்பலன்தொட்டையில் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. (ஐ-10)

## சுகாதார சேவைக்கான ஒழுங்குமுறைச் சபையை ஆரம்பிக்கத் திட்டம்

கொழும்பு, ஏப். 17
தனியார் சுகாதார சேவைக்கான ஒழுங்குமுறைச் சபை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பான சட்ட வரைவுத் திருத்தம் செய்வதற்கு, மூவர் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.
இது தொடர்பான அறிக்கை ஒரு மாத காலத்துக்குள் தயார் செய்யப்பட்டு, சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.
இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக, தனியார் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஒருவரும், சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவுப் பணிப்பாளரும் நியமித்துள்ளது.
பிரிட்டன் அரசால் தயார் செய்யப்பட்டுள்ள தனியார் சுகாதார சேவைக்கான ஒழுங்கு முறை சபை அறிக்கையை கருத்தில் கொண்டு, இந்தச் சட்ட வரைபைச் சீரமைக்குமாறு சுகாதார அமைச்சரால் அந்தக் குழுவுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## ஆதிவாசிகளுக்கு வசதிகளை வழங்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப். 17
சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆதிவாசிகள் சமூகத்துக்குக் குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் ஆதிவாசிகளின் தலைவர் ஊறுவரிகே வன்னிலா அத்தோவுக்கும் இடையே நட்த்திய சந்திப்பில் இது தொடர்பில் ஆராயப்பட்டது என்று நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலர் சரத் சந்திரவிதான தெரிவித்தார்.
"ஆதிவாசிகளின் தலைவர் இந்தச் சந்திப்பின்போது, தமது சமூகம் பற்றிய புள்ளி விவரங்களை முன்வைத்தார். 6 மாவட்டங்களைச் சேர்ந்த 57 கிராமங்களில் ஆதிவாசி மற்றும் கலப்பு குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சம் பேர் வரை வசிக்கிறார்கள். அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைளைத் தீர்க்கும் வகையில், குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் வழங்கப்படும். இது தொடர்பான அறிக்கையொன்றை, அமைச்சர் ஹக்கீம் உலக நீர் மாநாட்டில் சமர்ப்பிக்கவுள்ளார்" என்று அமைப்பின் செயலாளர் மேலும் தெரிவித்தார் (ஐ-10)

## சிறப்பு தேவையுடைய இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் முன்னுரிமை

கொழும்பு, ஏப். 17
சிறப்புத் தேவையுடைய இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு அரச பாடசாலைகளில் முன்னுரிமை வழங்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சுற்றறிக்கை மூலம் அறித்தார்.
பாடசாலைகளுக்கு தரம் 1 இற்கு பிள்ளைகளைச் சேர்க்கும் போது இந்த முன்னுரிமையை வழங்க வேண்டும் எனவும் அறிவித்தார் குறிப்பிடப்பட்டுள்ளார். (ஐ-10)

## மகிந்த அணியின் மே தினக்கூட்டத்துக்கு பிரபல வர்த்தகரால் ரூ.10 மில்லியன் நிதியுதவி

கொழும்பு, ஏப். 17
மே தினக் கூட்டத்தை நடத்துவதற்காக மகிந்த அணிக்கு பிரபல வர்த்தகர் ஒருவர் 10 மில்லியன் ரூபா பணத்தை வழங் கியுள்ளார் என்று சுதந்திரக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவடையச் செய்யும் நோக்கில் இந்தப் பணம் வழங்கப்படுகின்றதா? என்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பணம் வழங்கிய வர்த்தகர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் மிகவும் நெருக்கமான தொடர்புகளைப் பேணுபவர் எனத் தெரியவந்துள்ளது. மேலும் சில வர்த்தகர்கள் மகிந்த அணியின் மே தினக் கூட்டத்துக்காக பணம் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீவிர கவனம் செலுத்தி வருவதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் கண்டி கட்டம்பே மைதானத்திலும், மகிந்த அணியின் மே தினக் கூட்டம் கொழும்பு, காலி முகத்திடல் மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (ஐ-10)



# மீதொட்டமுல்ல இடர்
# உயிரிழந்தோர் 23ஆக உயர்வு

கொழும்பு, ஏப். 17
கொலன்னாவ மீதொட்டமுல்லவில் உள்ள குப்பைமேடு சரிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக அதிகரித்துள்ளது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.
கொலன்னாவ மீதொட்டமுல்லவில் உள்ள 300 அடி உயரமுள்ள குப்பை மேட்டின் உச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டது. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கொளுத்தப்பட்ட பட்டாசால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.
தீ விபத்தை அடுத்து, குப்பை மேடு சரிந்து அருகில் இருந்த வீடுகளுக்கு மேல் விழுந்தது. அந்தப் பகுதியில் இருந்த 100 வீடுகளில் 50 வீடுகள் குப்பைக்குள் புதைந்து போயுள்ளன.
புதைந்து போன வீடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
நேற்று முன்தினம் இரவு இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டன. இதுவரை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இன்னமும் சுமார் 20 பேர் வரையில் குப்பை மேட்டுக்குள் சிக்கியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. காணாமற் போயுள்ளவர்களின் சரியான எண்ணிக்கை தெரியவரவில்லை.



இராணுவத்தினரும், சிறப்பு அதிரடிப்படையினரும் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-10)

## நகர அபிவிருத்தி அதிகார சபைதான் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்

*முதல்வர் இசுறு தேவப்பிரிய தெரிவிப்பு*



கொழும்பு, ஏப். 17
மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிவுக்குரிய முழுப் பொறுப்பையும் நகர அபிவிருத்தி அதிகார சபையே பொறுப்பேற்க வேண்டும் என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்தார்.
கொலன்னாவ மீதொட்ட முல்லப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை குப்பை மேடு சரிந்ததில் ஏற்பட்ட இடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
குப்பைகள் தொடர்பிலான பொறுப்பு உள்ளூராட்சி சபைக்கும், மாகாண சபைக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நகர அபிவிருத்தி அதிகார சபை அந்தப் பொறுப்பில் கையாடல் செய்து வந்தது.
மீதொடமுல்ல குப்பை மேடு தொடர்பில், கடந்த காலத்தில் மேல் மாகாண சபை யோசனையொன்றை முன்வைத்தது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்பு இன்மையால், இந்த யோசனை செயற்படுத்த முடியாமல் போனது" என்றார். (ஐ-10)

## மீதொட்ட முல்லவில் இனி குப்பைகள் கொட்டப்படாது

கொழும்பு, ஏப். 17
மீதொட்ட முல்லப் பகுதியில் இனி குப்பைகள் கொட்டப்படமாட்டாது. தற்காலிக அடிப்படையில் குப்பைகள் சில இடங்களில் மட்டும் கொட்டப்படவுள்ளன என்று பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்தார்.
குப்பைமேடு சரிந்ததில் ஏற்பட்ட இடர் தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
"மீதொட்ட முல்லப் பிரதேசத்திலிருந்து வெளியேறுமாறு அங்கு வசிக்கும் மக்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டது. ஆனால் மக்கள் அதனை உதாசீனம் செய்துவிட்டனர். இடர் நடப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் வேறு இடங்களுக்கு மாறிச் செல்வதற்காக பணமும் வழங்கப்பட்டது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.
(ஐ-10)

## ஜப்பான் அவசர உதவி

மீதொட்டமுல்ல குப்பை மேட்டு இடரில் உயிரிழந்தவர்களுக்கு ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். அதேவேளை, இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான சகல விதமான உதவிகளையும் ஜப்பான் வழங்கத் தயாராகவுள்ளதாகவும் ஜப்பான் தலைமை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள சிறப்பு செய்தியறிக்கையிலே அவர் இவற்றைத் தெரிவித்துள்ளார்.
இந்த இடர் குறித்து ஆய்வு செய்வதற்கு ஜப்பானில் இருந்து தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, மீதொட்டமுல்ல இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.
மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் இனிமேல் குப்பை போடுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்றும், அவ்வாறு மீறிக் குப்பை கொட்ட வந்தால், தராதரம் பாராது வாகனத்தில் வருபவரையும் சேர்த்து தீ வைத்து கொழுத்துவோம் எனவும் மீதொட்டமுல்ல இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## இடர்ப் பகுதிகளில் திருட முயன்ற 23 பேர் சிக்கினர்

கொழும்பு, ஏப்.17
மீதொட்ட முல்ல குப்பைமேடு சரிந்து விழுந்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் சொத்துக்களைத் திருடுவதற்கு முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் 23 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
"மீதொட்ட முல்லப் பகுதியில் இரவு நேரத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் சொத்துக்களைப் பாதுகாக்க சிறப்பு பொலிஸ் குழுவொன்று தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில் குப்பைமேடு இடரில் 23 பேருடைய உடலங்கள் மீட்கப்பட்டுள்ளது டன், இதில் 5 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். சம்பவத்தில் காயமடைந்த 13 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது" என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (ஐ-10)

## கிரிக்கெட் அணித்தலைவர் அனுதாபம்

மீதொடமுல்ல குப்பை மேடு சரிவு இடரில் முகம்கொடுத்த சகலருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களை இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அஞ்ஜலோ மத்தியூஸ் தெரிவித்தார். அவர் தனது கீச்சகப் பக்கத்தில் இந்த அனுதாபச் செய்தியைப் பகிர்ந்துள்ளார். இடர் நிலைமைகள் மிக விரைவாக சீராகி மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்று தான் பிரார்த்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## நாடு முழுவதுமுள்ள மக்களின் குப்பைகளே கொட்டப்பட்டன

*இப்படிக் கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க*



கொழும்பு, ஏப். 17
மீதொட்ட முல்லயில் கொட்டப்படும் குப்பைகள் கொழும்பு வாழ் மக்களுடையது மட்டுமல்ல. மாறாக அது நாட்டு மக்கள் அனைவருடையதும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
குப்பைமேடு சரிந்ததில் ஏற்பட்ட இடர் தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மீதொடமுல்ல குப்பை முகாமைத்துவம் தொடர்பில் 2 பத்தாண்டுகளுக்கு முன்னர் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதற்குப் பல இடங்களிலுமுள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.
கொழும்புக் குப்பைகள் எமக்கு வேண்டாம் என்று முன்னர் மக்கள் கோசம் எழுப்பத் தொடங்கியிருந்தனர்.
உண்மையில் இங்கு சேருகின்ற குப்பைகள் கொழும்பு மக்களுக்கு மட்டும் உரியதல்ல.
கொழும்பு நகரில் வசிப்பவர்களின் எண்ணிக்கை சுமார் ஆறரை லட்சம் பேர்.
ஒவ்வொரு நாளும் வெளியிடங்களிலிருந்து கொழும்புக்கு வருபவர்களின் எண்ணிக்கை சுமார் 10 லட்சம்.
இவ்வாறு வரும் பத்து லட்சம் பேரும் பயன்படுத்தும் குப்பைகளும் இதில் அடங்குகின்றன. யாரும் இதனைக் கொழும்பு மக்களின் குப்பைகளாகக் கருத முடியாது-என்றார். (ஐ-10)




வவுனியாவில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 4 பேர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஈரப்பெரியகுளம், கனுகொள்ளமடுவ பகுதியில் விபத்து இடம்பெற்றது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் மீது புத்தளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் மோதியது. வானில் பயணித்தவர்கள் காயமடைந்தனர். விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-21)

## ஊடகவியலாளர் என்று கூறிவிட்டு ஒளிப்படமெடுத்தார் புலனாய்வாளர்

### போராட்டத்தில் இருந்தோர் கூறுகின்றனர்

கிளிநொச்சி, ஏப்.17

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அங்கு போராட்டத்தில் ஈடுபடுபவர்களை ஊடகவியலாளர் என்று தெரிவித்த புலனாய்வாளர் ஒளிப்படம் எடுத்தார் என்று கூறப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் புதுவருட தினத்தன்று கறுப்பு ஆடை அணிந்து கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு வந்த ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் ஒளிப்படம் எடுத்துள்ளார். அங்கிருந்த மக்கள் ஏன் ஒளிப்படம் எடுக்கின்றீர்கள் என்று கேட்டுள்ளனர். அவர் தான் ஊடகவியலாளர் என்று கூறியுள்ளார். மக்கள் அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்க அவர் தயங்கியவாறு நின்றுள்ளார்.

அங்கிருந்தவர்கள் அவரின் கைபேசியில் இருந்த படங்களை அழிக்க முயன்றபோது, அதற்கு பாதுகாப்புக் குறியீடு போடப்பட்டதால் முடியவில்லை. பின்னர் அவர் தான் சி.ஐ.டி. என்று கூறியுள்ளார். அதற்கான அடையாள அட்டையைக் கேட்டபோது, அதுவும் தன்னிடம் இல்லை என்று கூறியுள்ளார். அங்கிருந்தவர்கள் அவரைச் சுற்றிவளைத்து நின்றுள்ளனர்.

பின்னர் அவர் மன்னிப்புக் கேட்டதுடன், படங்களை அழிக்கின்றேன் என்று கூறியுள்ளார். அதையடுத்து அவர் விடுவிக்கப்பட்டார். பின்னர் அங்கு வந்த பொலிஸ் புலனாய்வாளர்களிடம் தெரிவித்தபோது இது தொடர்பாக உயரதிகாரிகளுக்கு தெரியப் படுத்துகின்றோம் என்று கூறினார்கள் எனறு அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். (ற-6)

# செல்பி எடுப்பதைத் தவிர்த்து உணர்வுடன் இணையுங்கள்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

வவுனியா, ஏப்.17

இங்கு வந்து "செல்பி" எடுப்பதைத் தவிர்த்து போராட்டத்தில் உணர்வுடன் கலந்து கொள்ளுங்கள். உங்கள் உறவுகளை மீட்பதற்கு ஆதரவு தாருங்கள். இவ்வாறு ஆதங்கத்துடனும், கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி வடக்கில் 4 மாவட்டங்களிலும், கிழக்கிலும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. வவுனியாவிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.

"எங்கள் பிள்ளைகள் திரும்பி வர வேண்டும். அதற்காக 100 நாள்கள் கூட நாங்கள் போராட்டம் நடத்தத் தயார். எமக்கு ஒரு முடிவு வேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டத்தை தொடருகின்றோம். எம்மிடம் இழப்பதற்கு இனி எதுவுமில்லை, எங்கள் உயிர்களைத் தவிர.

எங்கள் பிள்ளைகள் திரும்பி வர வேண்டும், ஒப்படைக்கப்பட வேண்டும். ஓமந்தைச் சோதனைச் சாவடியில் எவ்வாறு அவர்களைக் கையளித்தோமோ அவ்வாறு அவர்கள் திரும்பி வர வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றபோது உங்கள் பிள்ளைகள் ஒருநாள் புலிகள் அமைப்பில் இருந்தாலும் எம்மிடம் ஒப்படையுங்கள், 6 மாதங்கள் மறுவாழ்வழிக்கப்பட்டு ஒப்படைக்கப்படுவார் என்று இராணுவத்தினர் அறித்ததாலேயே நாம் பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்தோம். ஆனால் அவர்கள் திரும்பி வரவில்லை.

பல வாக்குறுதிகளை நம்பி ஏமாந்தோம். கூட்டரசில் நம்பிக்கை கொண்டிருந்தோம். அவர்களும் எங்கள் விடயத்தில் அக்கறையற்றுள்ளனர். அரசியல் கைதிகளை விடுவிப்பதில் தாமதம் ஏற்படும் என்று புனர்வாழ்வு அமைச்சர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறுகின்றார். பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று காத்திருந்த நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

அண்மையில் கொழும்பு அமைச்சர் ராஜித சேனாரத்த இங்கு வந்து எம்மைச் சந்தித்தார். அவர் வெளிநாட்டில் இருந்து வந்தவர் போன்று எம்மிடம் துருவித் துருவி விசாரித்தார். நீங்கள் உங்கள் பிள்ளைகளை யாரிடம் ஒப்படைத்தீர்கள்?, ஆதாரம் இருக்கின்றதா? என்று எம்மிடம் கேட்கின்றார்.







கடந்த 50 நாள்களாக நாம் இங்கு போராட்டம் நடத்துகின்றோம்.

வவுனியா மக்கள் மத்தியில் எமக்கு ஆதரவு கிடைக்கவில்லை. வீதியால் செல்லும் போது "செல்பி" எடுத்துச் செல்கின்றனர். எம்முடன் இணைந்து போராட்டத்துக்கு ஆதரவு தருவோர் மிகக் குறைவு.

எங்களுடன் இணைந்து எங்கள் பிள்ளைகளை மீட்டெடுக்க ஆதரவு வழங்க வேண்டும்." என்று அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளி நொச்சியில் 56ஆவது நாளாகவும், வவுனியாவில் 52 நாளாகவும், முல்லைத்தீவில் 40 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 33 நாளாகவும், திருகோண மலையில் 43 நாளாகவும் நேற்றுப் போராட்டங்களைத் தொடர்ந்தனர். (ற-21,7,6,35)



# ரூ. 3,000 மில்லியனில் வடக்கில் 3 திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.17

வடக்குமாகாணத்தில்ஜெயிக்கா நிறுவன நிதிப் பங்களிப்புடன் 3 திட்டங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளன. அவற்றுக்காக 3 ஆயிரத்து 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தத் திட்டங்கள் 3 ஆண்டுகளில் நிறைவு செய்ய வேண்டியவை. கிராமிய வீதித் திருத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. நீர் சேமிப்புத் திட்டம் மற்றும் குடிதண்ணீர் விநியோகம் என 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்கள் தேவைகளின் அடிப்படையில் வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் பகிரப்பட்டுள்ளன. வீதித் திருத்தத்துடன் நீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் நீர் நிலைகள் அபிவிருத்தியும், தூய குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின்கீழ் குடி தண்ணீர் அற்ற பிரதேசங்கள் இனங் காணப்பட்டு அவற்றுக்கான குடி தண்ணீர் விநியோகத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும். ஆயிரத்து 883.11 மில்லியன் ரூபா நிதி வீதித் திருத் தத்துக்கும், 695.39 மில்லியன் ரூபா நிதி நீர்த் தேக்கத் திட்டத்துக் கும், 431.5 மில்லியன் ரூபா நிதி குடிதண் ணீர் விநியோகத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீதிச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வடக்கின் 5 மாவட்டங்களிலும் 279 கிலோமீற்றர் நீளமான வீதி சீரமைக்கப்பட வுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகூடிய அளவில் அதாவது 279 கிலோமீற்றர் வீதி சீரமைக்கப்படும். யாழ்ப்பாணத்தில் 69 கிலோமீற்றர் வீதியும், மன்னாரில் 49 கிலோமீற்றர் வீதியும், வவுனியாவில் 41 கிலோமீற்றர் வீதியும் சீரமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களை இந்த ஆண்டின் இறுதியில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், சகல ஏற்பாடுகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளன- என்றார். (ற-101)

Facebook :
Twitter : U

## விவசாயிகளுக்கு ஆதரவாக உணவு ஒறுப்பு

தமிழக விவசாயிகளின் போராட்டத்துக்கு ஆதரவாக சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாணவர்கள், இளைஞர்கள் இணைந்து நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
டெல்லி ஜந்தர்மந்தரில் கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில், அந்தச் சங்கத்தின் தலைவர் அய்யாகண்ணு தலைமையில் காலவரையற்ற போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. காவிரி மேலாண்மை அமைப்பு, பயிர்கடன்தள்ளுபடி,நதிகள்இணைப்பு, வறட்சி நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வித்தியாசமான போராட்டங்களில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் இந்த அறப்போருக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகிவரும் நிலையில் வள்ளுவர் கோட்டத்தில் இளைஞர்கள், மாணவர்கள் இணைந்து உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தினர். (ம)



## ஓ.பி.எஸ். இ.பி.எஸ். கைகோர்ப்பு

### இந்திய ஊடகங்கள் பரபரப்புத் தகவல்



அ.தி.மு. கழகத்தில் இரு பிரிவாக பிரிந்துள்ள முன்னாள் முதல்வர் ஓ.பன்னிர்செல்வம் தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் ஆதரவாளர்கள் தற்போது இணைவது தொடர்பில் திரைமறைவில் பேச்சில் ஈடுபட்டு வருகின்றனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஆர்.கே. நகர இடைத்தேர்தலில் வாக்குகளை விலைக்கு வாங்குவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பெரும் தொகைப் பணம் தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கரின் வீட்டில் மீட்கப்பட்டது. இதையடுத்து தேர்தல் கைவிடப்பட்டது. இது தொடர்பில் மத்திய புலனாய்வுத்துறை விரைவில் விசாரணை நடத்தவுள்ளது.
விஜயபாஸ்கரை அ.தி.மு. கழகத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று அந்தக் கழகத்துக்குள்ளேயே எதிர்ப்புக் குரல்கள் வலுப்பெற்றன. ஆனால் அ.தி.மு. கழகத்தின் துணைப்பொதுச் செயலாளர் தினகரன் அதற்கு உடன்படிவில்லை. இதனால் தினரனையும் விஜயபாஸ் கரையும் அ.தி.மு. கழகத்தில் இருந்து வெளியேற்றும் நோக்கில் இந்தப் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது என்று இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)





### பேருந்துத் தொடரணி மீது அலெப்போவில் தாக்குதல்

# மீட்புக்காகக் காத்திருந்த 100 பேர் பரிதாபச் சாவு

டமஸ்கஸ், ஏப். 17
சிரியாவின் அலெப்போநகரில் இருந்து பொதுமக்களை மீட்க வந்திருந்த பேருந்துத் தொடரணியை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 100 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று சிரிய பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சிரிய அதிபர் அல் அசாத்தை பதவியில் இருந்து இறக்குவதற்காக அங்கு ஆயுதமேந்தி கிளர்ச்சிக் குழுக்கள் போராடி வருகின்றன. கிளர்ச்சிக் குழுவின் பிடியில் அலெப்போ நகர் இருந்தது. அது சில மாதங்களின் முன்னர் அரச படையால் மீட்கப்பட்டது. அலெப்போவின் எல்லைப் புறங்களில் தற்போது போர் நடைபெற்று வருகிறது. அரச கட்டுப்பாட்டுக்குள் மக்களை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த பேருந்துகளை இலக்குவைத்து நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 100 பேர் உயிரிழந்தனர். சுமார் 70 பேர் காயங்களுடன் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## ஈரானில் வெள்ளப்பெருக்கு; 25 பேர் உயிரிழப்பு

டெஹ்ரான், ஏப். 17
ஈரானின் வடமேற்கு பகுதியை சுழற்றியடித்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கில் 25 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஈரானின் அஜர்பைஜான் மாகாணத்தில் கடந்த 24 மணிநேரமாக இடைவிடாத கனத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக, இங்குள்ள அஜப்சிர் மற்றும் அஸர்ஹர் மாவட்டங்களில் பெய்த பெருமழையால் அங்குள்ள ஆறுகளின் வழியாக பாய்ந்தோடிய வெள்ளம், கரையை உடைத்துகொண்டு ஊருக்குள் புகுந்ததில் 25 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு உடகங்கள் செய்தி வெளியிட்டன. குறித்த பகுதியில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (ம)





கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழா உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் மற்றும் கத்தோலிக்கர்களால்
நேற்று வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஈராக்கின் மேற்கு மோசூலில் ஐ.எஸ்.ஐ.எஸ்
அமைப்பின் பிடியில் இருந்து மீட்கப்பட்ட குவாரஸ் தேவாலயத்தில் கட்ட இடிபாடுகளுக்குள்ளு
போரின் எச்சங்களுக்குள்ளும் நேற்றுமுன்தினம் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஈராக
இராணுவச் சிப்பாய்கள் உள்ளிட்ட பலர் அதில் கலந்துகொண்டனர். (ம)

## 19ஆம் நூற்ற
## 117ஆவது வ

உரோம், ஏப். 17
உலகின் மிகவும் வயதாண பெண்ண
நூற்றாண்டின் இறுதிப் பெண்ணாக
சம்பவங்களுக்கு நேரடிச் சாட்சியாக இருந்துவந்த எம்மா மொரனோ, தனது 117 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் உலகை விட்டுப் பிரிந்து சென்றார். இவரின் மறைவுடன் 19 ஆம் நூற்றாண்டில் பிறந்த எவரும் இனி இல்லை என்பது கிட்டத்தட்ட உறுதியானது.
1899 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி பிறந்தார் எம்மா, கடந்த வருடம் தனது 117 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். 19, 20, 21என மூன்று நூற்றாண்டுகளைப் பார்த்தவர், தனது வாழ்நாளில் இரண்டு உலகப் போர்களைப் பார்த்தவர், இத்தாலியில் 90



## உலகின்
## அணுகு

வொஷிங்டன், ஏப். 17
உலகின் மிக அபாயகரமான 'ஸ்மார்ட்' அ
மாதிரி சோதனையை அமெரிக்க வி
நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக நடத்
அமெரிக்காவிடம் 7 ஆயிரத்து 200 க்கு
அணுகுண்டுகள் உள்ளன. இதில் 2 அ
மேற்பட்ட அணுகுண்டுகள் தயார் நி
வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குண்டுக
94 போர் விமானங்களும் தயார் நி
உள்ளன. இவை தவிர அணுஆயுத
சுமந்து செல்லும் திறன் படைத்த 40
மேற்பட்ட ஏவுகணைகளும் உள்ள
இராணுவத் தளபாடங்கள் போதா
மிகவும்சக்திவாய்ந்த அணுகுண்டை அ
நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சோ

# ற்றாண்டின் இறுதிப் பெண் வயதில் சனியன்று மறைவு

ண்ணாகவும், 19 ஆம் னாகவும் உலகின் பல ஆட்சி மாற்றங்களைப் பார்த்தவர் என பல்வேறுபட்ட சம்பவங்கள் மற்றும் பதிவுகளுக்கு நேரடிச் சாட்சியாக இருந்த அவர் நேற்றுமுன்தினம் உலகை விட்டுச் சென்றார். (ம)



# சிகரெட் பிடிப்பவர்கள் சீனாவில் அதிகரிப்பு



புகைப்பவர்களின் எண்ணிக்கை சீனாவில் நாளுக்கு நாள் மிகையாக அதிகரித்து வருகிறது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றிலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது. சீனாவின் மொத்த சனத்தொகையில் 45 முதல் 50 சதவீதமானவர்கள் புகைப்பிடிக்கின்றனர். புகைப்பிடிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் மிகையாகவே அதிகரித்துச் செல்கிறது. கடந்த 2015 ஆம் ஆண்டில் மட்டும் புகையிலை மூலம் சீனா, இலங்கை மத்தியில் 2.5 லட்சம் கோடி ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது. இதேநிலை நீடித்தால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் மட்டும் 20 கோடி சீனர்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ம)

# வடகொரியாவின் ஏவுகணை சோதனை முயற்சி தோல்வி

## தென்கொரியா வெளிப்படுத்தல்

பியாங்யாங், ஏப். 7 வடகொரியாவின்புதிய ஏவுகணை முயற்சி தோல்வியில் முடிந்தது என்று அதன் அயல்நாடான தென் கொரியா தெரிவித்தது.

பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது ஆயுத மற்றும் அணுவாயுத சோதனைகளை நடத்தி வருகிறது. கடந்த மாதம் ஒரே தடவையில் நான்கு ஏவுகணைகளை சோதித்து வடகொரியா பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்த நாடு மற்றொரு ஏவுகணைச் சோதனைக்குத் தயாராகி வருகிறது என்ற கருத்துக்கள் அண்மையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையில் வடகொரியா, ஹோம்கோயிங் மாகாணத்தில் சின்போ பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இந்தச் சோதனை தோல்வியில் முடிந்தது என்று தென்கொரியா தெரிவித்தது. அமெரிக்காவும் இதை உறுதிப்படுத்தியது. ஏவுகணை விவகாரத்தில் வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் கடும் பகையும் போர்ப் பதற்றமும் நிலவுகிறது. இதனால் தனது மிகப் பெரும் விமானம் தாங்கி போர்க் கப்பலான வின்சன் உள்ளிட்ட சில கப்பல்களையும் போர் விமானங்களையும் ... சீனக் கடல்பரப்... அமெரிக்கா நி... நிறுத்தியுள்ளது.



# ன் மிகவும் அபாயகரமான தண்டை அமெ. சோதனை

ட்' அணுகுண்டு விஞ்ஞானிகள் நடத்தினர்.
க்கும் மேற்பட்ட 2 ஆயிரத்துக்கு ர் நிலையில் டுகளை வீச ர் நிலையில் யுதங்களை 400க்கும் ளன. இந்த தாதென்று அமெரிக்கா சோதித்தது.

நிவேடா பாலைவனத்தில் நடத்தப்பட்ட இந்தச் சோதனை வெற்றிபெற்றது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்தனர். பி 61-12 என்று பெயரிடப்பட்ட இந்த அணுகுண்டு எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் இணைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஜப்பானின் ஹிரோசிமா நகர் மீது அமெரிக்க போர் விமானம் உலகப் போரின்போது வீசிய 'லிட்டில் போய்' அணுகுண்டை விட இந்தக் குண்டு 20 மடங்கு சக்தி வாய்ந்தது என்று அமெரிக்க அணு விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ம)



ால்
ஸ்.
ளும்
ராக்
(ம).

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா
சிவப்பிரகாசம் [சிவம் ஐயா]
(அம்பாள் குறோசறீஸ், பண்டத்தரிப்பு)

அன்னை மடியில் 27.04.1940
ஆண்டவன் அடியில் 29.04.2016
திதி: 18.04.2017

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்வில் வழிகாட்டியாய்
மாபெரும் சிவதொண்டனாய்
உள்ளம் கவர் முதலாளியாய்
அரை நூற்றாண்டுக்கும்
மேலாக தொழில் கொடுத்து
வாழ்நாள் தொழிலாளியுமாய்
இதயம் நிறைந்த எம்மவரே உம் ஆத்மா சாந்தியடைய
இறைவன் தாழ் பணிகின்றோம் தினம் தினம்

18.04.2017 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் இடம் பெறும் வேளை அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.
பணிப்புலம், பண்டத்தரிப்பு.



# உலகின் முதல்தர மின் உபகரணங்களின் புதிய மாதிரிகள் சந்தைக்கு அறிமுகம்

"புத்தாண்டில் அபான்ஸ் வழங்கும் உற்பத்திகளை வட்டியில்லாத தவணை முறையில் பெற்றுக்கொள்ள முடியும்"




குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், தொலைக்காட்சிகள், ஹோம் தியெட்டர்கள், வக்கியூம் கிளீனர்கள், மைக்ரோவேவ் அவன்கள், எயார் ஸ்பிறேயர்கள், பிறீஸ்டான்டிங் குக்கர்கள், பில்ட் இன் அவன், குக்கர் ஹொப் மற்றும் குக்கர் ஹூட், கையடக்கத் அலைபேசிகள், அப்பிள் தயாரிப்புகள், வளிச் சீராக்கிகள், மடிக் கணினிகள் உள்ளிட்டதான பல உற்பத்திகளை அபான்சிடமிருந்து விசேட விலைக்கழிவுகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையின் முன்னணிச் சந்தைப் பங்காளர் நிறுவனமாக திகழும் அபான்ஸ் உலகின் முதல்தர இலத்திரனியல் மற்றும் வீட்டு மின் உபகரணங்களின் புதிய மாதிரிகளை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படிவாடிக்கையாளர்கள்தங்களுக்கு தேவையான சகல உற்பத்திகளையும் வட்டியில்லாத தவணைக் கொடுப்பனவு முறையின் கீழாக பெற்றுக்கொள்ளக்கூடியதான சலுகைகளை நாடு முழுமைக்குமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

குறிப்பாக சமையலறைக்கு நவீனத்துவத்தை அறிமுகப்படுத்தும் விதமாக மைக்ரோவேவ் அவண் உள்ளிட்ட பயன்தரு சமையலறை உபகரணங்கள் பலவற்றைப் பெற்று உணவின் புத்து ணர்வைப் பாதுகாத்து ஆரோக்கியமாக சமைத்திடுவதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது.

அதேபோன்று கண்களுக்கு விருந்தளிக்கும் உலகத் தரம் வாய்ந்த தொலைக்காட்சிகளை வெவ்வேறான திரை அளவுகளில் பெற்றுக்கொள்ள முடிகிறது.

அத்துடன் செவிகளுக்கு இனிமையான ஹோம் தியேட்டர்கள், குடும்பத்துக்குச் சௌகரியத்தையும், மகிழ்ச்சியையும்பெற்றுத்தருவதான மின்சாரத்தை சேமித்து குளிர்ச்சியான காற்றைவழங்கும்நவீன இன்வெர்டர்தொழில்நுட்பத்திலானவளிச் சீராக்கிகள், இன்றைய காலகட்டத்தில் மறுக்கமுடியாதசாதனமாகஎல்லோர்கரங்களையும் தொழில்நுட்பதிறன்கொண்டு கையாளும் அதிதிறன்பேசிகள் மற்றும் மடிக்கணினிகளையும் வட்டியற்ற தவணைமுறைக் கொடுப்பனவுச் செலுத்துகை மூலம்வாடிக்கையாளர்கள்பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அபான்ஸ் நிறுவனம் வழங்கியுள்ளது. தவிர, எச்.எஸ்பி.சி கடனட்டை உரிமையாளர்கள் 20 வீத தள்ளுபடியுடன்24மாதங்கள்வரையான வட்டியற்ற தவணைமுறைத் திட்டத்தில் தமக்குத் தேவையான சகல தயாரிப்புகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சலுகைகள் அபான்சிடம் கிடைக்கப்பெறுகிறது.

நாடுமுழுமையுமாகவுள்ளதானஅபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில்இந்தச்சலுகைகளைபெற்றுக்கொள்ள முடிகிறது.

## வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சி கண்டுள்ளது

இலங்கையின் பன்னாட்டுக்கான நேரடித்தன்மைவாய்ந்தமுதலீடுகள் கடந்த2015ஆம்ஆண்டுடன்ஒப்பிடுகையில் 45.6 சதவிகிதம் வீழ்ச்சியடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்தொகைமதிப்பீடுஎன்பதுஅண்ணளவாக 300 மில்லியன் அமெரிக்கடொலர்களாகப்பதிவாகியுள்ளது.

இதேவேளைகடந்த2016ஆம்ஆண்டில் இந்தத் தொகையானது 658 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையிலே 2015ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும்கொள்கைமாற்றங்களும் இந்த வீழ்ச்சியில் பிரதான பங்களிப்பைவழங்கியிருந்ததாகஅறிவிக்கப்பட்டுள்ளது. அரசு 5 பில்லியன் அமெரிக்கடொலர்களைமுதலீடாகப் பற்றிக்கொள்வதற்கானநிர்ணயங்களைக் கொண்டிருந்தபோதும் அந்த இலக்கை அடைவதற்குப் போதிய ளவுவழிகாட்டல்களைஅரசுவழங்கவில்லை என முதலீட்டுச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் கருத்துரைத்தனர்.

மேலும் வரி விதிப்புகளிலும் உறுதியற்ற தன்மைகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினர்.

## 'வைபை சேவை'

### முகநூல் தனது பயனாளர்களுக்கு வழங்கத் திட்டம்




உலகின்மிகப்பிரபலசமூகவலைத்தளநிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் முகநூல் தனது பயனாளர்களுக்கு என 'வைபை' சேவையை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதன்படிஎக்ஸ்பிறஸ்வைபை(Experss Wifi) எனும் புதிய திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதை முகநூல் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இணைய சேவை இல்லாத பல கிராமங்களை நோக்கி இணைய வசதியை நகர்த்து தல் என்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகக் காணப்படுகிறது.

அதேவேளைஇணையஇணைப்பைஅதிகரிப்பது தொடர்பிலானஇந்தசேவையைவழங்குவதற்கான ஏற்பாடுகளின்முன்னோட்டமாகமுகநூல்பறக்கும் விமானங்களில் 'லேசர் ட்ரான்ஸ்' என்பதான தொழில்நுட்பத்தினை பயன்படுத்திச் சோதனை முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

அத்துடன்இந்தத்திட்டத்துக்காகவென இந்தியாவில் உள்ள இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் முகநூல் பேச்சு நடத்தி வருவதான தகவலும் வெளியாகியுள்ளது.

இந்த வசதி அறிமுகம் பெற்றதும் முகநூலில் உள்வாங்கப்படும் பிரத்தியேகச் செயலிகள் மூலம் வைபை வசதியை எளிதில் பெற்றுக்கொள்ளலாமென முகநூல் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.




## இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது

புள்ளிவிவரவியல்திணைக்களம்தகவலுரைப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது நடப்பாண்டின் கடந்த அரையாண்டு காலப்பகுதியில் 2.6 வீதமாக அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது. மொத்ததேசியஉற்பத்திதொடர்பானநடப்பாண்டின்முதல் 9 மாத காலத்துக்குரியதான விடயங்கள் மேற்படி அறிக்கையில் தகவல்களாக குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

2015ஆம்ஆண்டின்முதல்9மாதகாலப்பகுதியில்நாட்டின்மொத்ததேசிய உற்பத்தியானது 2.1 ரில்லியன் தொடக்கம் 8 ரில்லியன் டொலர்களாக பதிவாகியிருந்தமை நோக்கத்தக்கது.



**2016 ஆம் ஆண்டு**
மொத்தத் தேசிய உற்பத்தியோடான பொருளாதார வளர்ச்சி
ஜூன்- நவம்பர் - 2.6 வீதம்

**2015 ஆம் ஆண்டு**
மொத்தத் தேசிய உற்பத்தியோடான பொருளாதார வளர்ச்சி
ஜனவரி - செப்ரெம்பர் - 2.1 ரில்லியன் - 8 ரில்லியன் டொலர்கள்

சி.நற்குணலிங்கம்



# கல்விக்கான கொடையே சிறந்த கொடை

> இளமைக் கல்வி தொலைந்து போனால் இனியயாரு வாழ்வு இல்லை. வாழ்வுகள் தொலைந்த மண்ணில் கல்விக்கான கொடை ஊடாக வாழ்வை நாம் காத்திட வேண்டும். மாணவ குடும்பங்க ளின் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், சோதனைகள் அவர்தம் வாழ்வின் சாபமல்ல.

மனிதன் மனிதனாக வாழக் கல்வி அவசியம். கல்வி என்பது வாழ்க்கையின் ஒரு வளமான வழிகாட்டி. அறிவுமையச் சமூகத்தில் வாழவும், செயலாற்றவும் கல்வி அவசியம். கல்வி என்பது உடலில், உள்ளத்தில் ஆன்மாவிலிருந்து நல்லவற்றை வெளியே கொண்டு வருவதற்கு உதவும் கருவியாகும் என மகாத்மா காந்தி கூறியுள்ளார். ""எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்இரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றார் வள்ளுவர். இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட கல்வியானது வறுமை காரணமாகத் தடைப்படக்கூடாது. எனவே கல்விக்கான கொடையே சிறந்த கொடை எனக்கருதி கல்விக்கானதானம் செய்ய மனமுள்ளோர் முன்வரவேண்டும், முன்வந்தும் உள்ளார்கள்.

இளமைக் கல்வி தொலைந்து போனால் இனியொரு வாழ்வு இல்லை. வாழ்வுகள் தொலைந்த மண்ணில் கல்விக்கான கொடை ஊடாக வாழ்வை நாம் காத்திட வேண்டும். மாணவ குடும்பங்களின் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், சோதனைகள் அவர்தம் வாழ்வின் சாபமல்ல. கல்விக்கான கொடை உள்ளம் படைத்தவர்கள் ஒன்று சேர்ந்தால் வெல்வது கடினமல்ல.

மாணவன் பெற்ற பண உதவியால் அவன் பெற்ற சிறந்த பெறுபேற்றால் அவனும் அவன் குடும்பத்தாரும் அடைந்த உள்ளப் பூரிப்பு அவர்களது உள்ளத்திலிருந்து வரும் நன்றிகள் மகிழ்ச்சி இவைதான் கல்விக் கொடையாளிகளை வாழவைக்கும் தூண்கள்.

வரும்போது ஒன்றும் கொண்டு வந்ததும் இல்லை, போகும் போது ஒன்றும் கொண்டு போகப் போவதுமில்லை இதுதான் வாழ்வின் தத்துவம். பணம் படைத்தவர்களே உங்களுக்கான அடையாளங்களை விட்டுச் செல்லுங்கள். அதுதான் வாழ்வின் சிறப்பு. அப்துல்கலாம் கூறியது போல், பிறப்பு சம்பவமாக இருக்க இறப்பு சரித்திரம் படைக்கட்டும். உனக்கு மேலே இருப்பவனை எட்டிப்பார்க்காதே கீழே உள்ளவனைக் குனிந்து பார். உன் வாழ்வும் சிறக்கும் மற்றவரது வாழ்வும் சிறக்கும். ""ஒருமைக் கண் தான் பெற்ற கல்வி ஒருவருக்கு எழுமையும் ஏமாப்பும் உடைத்து" என்றார் வள்ளுவர். ஏழு பிறப்புக்களுக்கும் கொண்டு செல்லப்படும் கல்விச் சிறப்பானது வறுமையால் தடைப்படாதிருக்க நீங்கள் செய்யும் கல்விக்கான பணி ஏழு பிறப்புக்கும் கொண்டு செல்லப்படும் பணியாகும், இது எல்லோர்க்கும் கிடைக்காத கல்விக்கான தானமாகும்.

மனிதர்களைப் பொறுத்தவரை நன்மைகளைச் செய்வதற்கு கடவுள் பல வழிகளைத் தந்துள்ளார். அதில் பிரதானமானது நாம் அடுத்தவருக்கு செய்யும் உதவியாகும். காலன் எம் உயிர் கவருமுன் நாம் சேர்த்த சொத்துக்களின் ஒரு பகுதியை இல்லாதோர்க்குக் கொடுத்து நற்பயனை சேர்த்தல் வேண்டும். ஏழேழு பிறவிக்கும் எம்மைக் காக்கவல்ல தர்மத்தை செய்வதே மேலான தர்மமாகும்.

உங்களது நல்லெண்ணமும் நற்செய்கையும் தான் வசதியற்றவர்களின் கல்வித்தேவையை நிறைவு செய்யப்போகின்றது. உண்மையில் ஒருவன் இந்த உலகில் நன்கு வாழ்ந்தமைக்கு எடுத்துகாட்டு அவனது நற்பணியே ஆகும். உள்ளதைப் பலருக்கு பகுத்துக் கொடுத்து வாழ வேண்டும். அப்படிப்பட்ட வாழ்வு அல்லாமல் உயிருக்கு ஊதியம் என்பது வேறுயாதும் இல்லை. கல்வி கற்க யார் எமக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள் என தவிக்கும் மாணவச் செல்வங்களின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பதுதான் புண்ணியம்.

எத்தனையோ வள்ளல்கள் மனமுவந்து கல்விக்கான பண உதவிகளை பொருள் உதவிகளை வழங்கி வருகிறார்கள். புலம்பெயர் உடன்பிறப்புக்களும் உதவிகளை வழங்கி வருகிறார்கள். அவர்கள் உண்மையில் போற்றப்பட வேண்டியவர்கள், உள்ளத்தில் இருத்தப்பட வேண்டியவர்கள். அவர்களிடமிருந்து கல்விக்கான கொடையை பெறுபவர்கள் அதனை இழிவாக எண்ணாது, மனம் கூசாது, வெட்கப்படாது பெற்றுக் கொள்ள வேண்டும். பிச்சை புகினும் கற்கை நன்றே என்பார்கள்.

இடருற்றுள்ள எதிர்காலச் சந்ததியின் வெற்றிகரமான வாழ்க்கைக்கான அத்திபாரத்தை இடவேண்டிய பெரிய பணியைக் கல்விக் கொடை ஊடாக ஆற்றி வருபவர்களுக்கும் ஆற்றவுள்ளோருக்கும் எல்லோரும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். எல்லோரும் இணைவதன் மூலம் எமது பிரதேசத்தின் மிகப்பெரிய சவாலாகவுள்ள கல்விப் பின்னடைவை உடைத்து எறியலாம்.

---

# காதலன் தீண்டும் போது கைகளை மன்னிக்காதீர்கள்!



கே.எஸ்.சிவஞானராஜா

மனித உடலில் கைகள் ஆற்றும் சேவைகளைப் போலத் தர்மம் செய்யக் கூடிய அங்கம் வேறொன்றுமே இருக்க முடியாது. துன்பப்பட்ட வர்களை அரவணைத்து ஆறுதல் படுத்தக்கூடியது கைகளேயாகும். இதயமானது எதையயதை உபகரிக்க எண்ணுகிறதோ அதையதைப் பவ்வியமாக வழங்குவதும் அதுவேயாகும்.

கோடான கோடி வருடங்களை தாண்டி இந்த உலகம் ஒரு படிமானத்துக்கு வந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம் கைகளின உழைப்பேயாகும். சைகை, குறியீடு, வரிவடிவம், எழுத்து வடிவம், எண்வடிவம், மொழிக்கட்டமைப்பு, உரை, பாடல், நூல், படைப்பு என எண்ணற்ற அறிவுப் பொக்கிசங்களை இந்த உலகத்துக்கு வழங்கிய பணிகளுக்குச் சொந்தக்காரராகக் கைகளே மிளிர்கின்றன.

மேலும் சொல்வதானால், கோடானகோடி மக்களது வயிற்றுப் பசிக்குத் தீனிபோடுவதும், அவர்களுக்கான உணவுப் பயிர்களைப் பயிரிட்டு வழங்குவதும் கரங்களே.

மண்ணையும், விண்ணையும் தொட வைத்து ஆசையை வளர்ப்பதும் இந்தக் கரங்களேயாம். அணுவைப் படைத்து ஆக்கத்துக்கும், அழிவுக்கும் வழிசெய்ததும் இந்தக் கைகள் தான். யப்பானில் குண்டு போட்டு இரண்டு இலட்சம் பேரைக் கொண்டதும் இந்தக் கைகள் தான்.

மகாபாரதம், இராமாயணம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள், பகவத்கீதை, பன்னிரு திருமுறைகள், யாழ்நூல், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு மற்றும் ஏனைய சமய நூல்கள் இன்னும் பலவற்றை ஆசை தீரக் காட்டித் தந்ததும் இந்தக் கரங்களேயாகும்.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆலயங்களையும், சிற்பங்களையும் படைத்த பெருமையும் இந்தத் திருக்கரங்களுக்கே உரியதாகும்.

**இஸ்ரோ**

உலக சாதனையாக மிக அண்மையில் பதிவு செய்யப்பட்ட இந்தியாவின் 104 செயற்கைக் கோள்கள், விண்வெளியில் பவனிவருமாறு அனுப்பப்பட ஆவனபுரிந்ததும், இந்தக் கரங்களேயாம். உலகத்தைச் சின்னக் கைகளுக்குள் கொண்டு வந்ததும் ஓயாத இந்தக் கரங்களே.

**நவீனம்**

எதையுமே எப்படியும் செய்யலாம் என்ற தோறணையில் போன் கலாசாரம், முகப்பு நூல் கலாசாரம், இணையத்தளக்கலாசாரம், சும்மா பழகும் கலாசாரம், சுமந்து பழகும் கலாசாரம், சினிமாக் கலாசாரம், சீண்டும் கலாசாரம், அச்சுறுத்தும் கலாசாரம், ஆடை குறைப்புக் கலாசாரம் என பலப்பல கலாசார நெருக்குதல்கள் இந்தக் கரங்களினாலேயே நிறைவேற்றப்படுகின்றன. இதை விட ஆயுதக் கடத்தல், கள்ளக்கடத்தல், ஊழல் விவகாரம், பதுக்கல் விவகாரம், குழிபறிப்பு விவகாரம், பலாத்கார விவகாரம் யாவுமே கைகளே அறிந்து செய்கின்றன.

"கைகாள் கூப்பித் தொழீர்" என
அப்பரும், பாரதியாரோ கண்ணன் பாட்டில்
தீக்குள் விரலை வைத்தால்
நந்தலாலா நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதையா!

எனவும், "குரலில் ஆயிரம் விரலில் ஆயிரம் கோடியின்பம் வைத்தாய்" என நம் நாட்டுக் கவிஞரும், இறைவனிடம் கையேந்துங்கள் என்று சகோதர இனத்தவர்களும் கரங்களை வரமாக்குவது அதன் புனிதம் கருதிய மகிமையே காரணமாகும். ஆகவே கைகளை மனிதகுல ஆக்கத்துக்கே பயன்படுத்த வேண்டும். இல்லையேல் வீட்டுக்கு வீடு வாசல்படியாகவே கலியுகம் கால் பதிக்கும்.

**காதல்**

மனித குலத்தின் மாண்புக்கும், அதேவேளை வீழ்ச்சிக்கும் அடிநாதமாக அமைந்து தொந்தரவு பண்ணுவது காதலாகும். பாமரர்கள் தொடக்கம், பிரபல்யங்கள் வரை (எல்லோருமல்ல! நீங்களுமல்ல) காதலில் அகப்படாதவரென்று யாரேனும் இருந்தால் நாம் செய்த புண்ணியந்தான். ஆனால் அப்படியாருமில்லையே! இனிவரும் முனிவரும் கூடத்தடுமாறும் கனிமரங்களினால் காயப்பட்டவர்களை இப்போதும் காணலாம். காதலர்கள் காலனாகக் கூட வருவார்கள் எந்தவொரு தகைமையும், வயதும் இல்லாமல் இலவசமாகக் காதலிப்பவர்களும், இலவசமாக அனுபவிக்கும் வயதுக்கு மூத்தவர்களும் பருவங்களின் வனப்புக்களை அன்போடும், பதிலுக்குப் பதிலாகவும் தீண்டும்போது தயவுகூர்ந்து கைகளை மன்னிக்காதீர்கள்! காரணம் சமுதாயப் போலிகள் அவர்கள்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் அதனால்தான் இந்த அசமந்தம்

"மைத்திரி உத்தரவிட்டு ஒருவருடமாகியும் காணி விடுவிப்பில்லை. இதை வருத்தத்துடன் அவரே இதை ஒத்துக் கொண்டுள்ளார்" என்ற தலைப்புடனான செய்தியைப் படித்த இந்த நாட்டின் எந்த ஒரு குடிமகனும் அசந்து போய் இருப்பான் என்றால் அது மிகையாக இருக்காது. இந்த நாட்டின் அரச தலைவரா? இப்படி தனது இயலாமையை வெளியிட்டு விசனப்பட்டிருக்கிறார் என்ற வியப்பில் அவன் ஆழ்ந்து போயிருப்பான்.

தமிழ் மக்களின் காணிகளையும் தமிழ்க் கைதிகளையும் எப்போது எப்படி விடுவிக்கப் போகிறீர்கள் என்று அறியத்தரும்படி கேட்டிருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை என்று தம்மைச் சந்தித்துப் பேசிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவரிடம் கூறியுள்ள அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன, இப்போது அவர்கள் படைத்தளபதிகளுடன் பேசப்போவதால் மீண்டும் அது பற்றி தாம் அவர்களுக்கு அறிவிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அவரைச்சந்தித்துப் பேசிய போது மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டதாக அந்தச் செய்தி கூறுகின்றது.

அரச தலைவரின் அதிகாரங்களில் சில 19ஆவது அரசமைப்புத்திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளமை உண்மைதான். ஆனால் அவருடைய கோரிக்கை அல்லது கட்டளை எதுவானாலும் அதற்கு செவி சாய்க்காமல் அதிகாரிகள் உதாசீனம் செய்யலாம் என்று அர்த்தமாகாது.

இருந்த போதும் தமிழ் மக்களின் மீள் குடியமர்வு, காணி விடுவிப்பு, கைதிகள் விடுதலை மற்றும் இவை போன்ற பிரச்சினைகளே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாக இருக்கும் நிலையில் அரசதலைவர் உத்தரவிட்டும் அது செயற்படுத்தப்படாமல் இருப்பதும் அதன் அவசியத்தை உணர்ந்து அதிகாரிகளைத் துரிதப்படுத்தாமல் அரசதலைவர் காலம் கடத்தியிருப்பதும் கவலையளிப்பதாகும். தமிழ்பேசும் மக்களின் உயிர்ப்பிரச்சினைகளை ஓரங்கட்டும் போக்கு ராஜபக்ச காலத்திலிருந்தே நீடித்து வருவதையே இதுவும் எடுத்துக்காட்டுகின்றது.

உண்மையில் அரசதலைவர் உத்தரவிட்டால் அதிகாரிகள் அசமந்தமாக இருந்து விட முடியாது. அப்படியானால் இதில் எங்கோ ஒரு கோளாறு இருப்பது தெரிகிறதல்லவா?

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரே கூறிக் கொள்வது போல் அரச தலைவரானவர் தமக்குரிய அதிகாரத்தை இறுக்கமாகப் பயன்படுத்த விரும்பவில்லை. அவரின் இந்தவித தளர்வுப்போக்கைப் படைத்தளபதிகள் போன்ற உயர்மட்ட அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றவாறு கருதுவதற்கு இது இடமளிக்கின்றது.

அண்மையில் வடக்குக்கு வருகை தந்திருந்த போது படைவீரர்கள் ஒருவரையும் போர்க்குற்றத்துக்காக நீதிமன்றத்தின் விசாரணை குறித்து விட மாட்டார் என்று மிகக் கண்டிப்பான தொனியில் படையினருக்கு பதிலளித்திருந்த மைத்திரிபால சிறிசேனவால் போரின் கொடுமையால் இராணுவத்தின் கண்மூடித்தனமான செயற்பாடுகளால் போர் முடிந்து எட்டு ஆண்டுகள் கழிந்த பிறகும் பாதிக்கப்பட்ட அந்த வடுக்கள் நீங்கப் பெறாமல் இப்போதும் தவித்துக் கொண்டிருக்கும் மக்களின் சார்பில் முழுமையாக திருப்தி கொள்ளும் படியாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட முடியாமல் இருப்பதை என்னவென்று கூறுவது? போரை நடத்தி முடித்தவர்கள் போரின் ஆட்சியாளர்களும் பேரினப்படையாளிகளுமே. போரால் பாதிக்கப்பட்டவர்கள் சிறுபான்மையினர் தமிழ்பேசும் மக்கள் அதனாலேயே இந்த நிலைமை நீடிக்கின்றது என்று கூறுவதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

# அமெரிக்கா – இலங்கை இடையில் வலுப்பெறும் பாதுகாப்பு உறவுகள்

ஆங்கிலத்தில் - ரெய்லர் டிபோர்ட்
தமிழில் - நித்தியபாரதி

இலங்கை ஒரு சிக்கலான நாடாகும். ஜனவரி 2015இல் மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இலங்கையின் அயலுறவுக் கோட்பாட்டில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என நிலாந்தி சமரநாயக்க தனது அண்மைய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

குறிப்பாக அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் வலுவடைந்து வருவதாகவும் இதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவு வலுப்பட்டுள்ளமையானது, இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்த வேண்டும் என்ற தனது நீண்ட கால நலன்களை அடைந்து கொள்வதற்கான அமெரிக்காவின் திட்டத்துக்கும், இலங்கைத் தீவில் நிலையான அமைதி எட்டப்பட வேண்டும் என்கின்ற நோக்கத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

ஒரு கொடிய உள்நாட்டு யுத்தத்திலிருந்து இலங்கை தற்போதும் மீண்டெழுந்து வருகிறது என இக்கட்டுரையில் குறிப்பிடப்படவில்லை. ஒரு நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் மற்றும் தீர்க்கப்பட முடியாத இன முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதைத் தெளிவாக ஆராயாதவிடத்தும் குறிப்பாக அந்த நாட்டின் பாதுகாப்பு உறவுநிலைகள் குறித்து ஆராயாதவிடத்து குறித்த நாட்டின் தற்போதைய நிலைப்பாட்டைத் துல்லியமாகக் கணிக்க முடியாது.

இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையுடன் பேணப்பட்ட உறவை விட தற்போது அமெரிக்காவானது இலங்கையுடன் நல்லுறவைப் பேணிவருகிறது. இலங்கையின் புதிய அரசானது கடந்த அரசை விடக் குறைந்தளவு அதிகாரத்தையே கொண்டுள்ளது. ஆகவே இந்த அரசானது முன்னைய அரசை விட மேலும் சமவலுவான வெளியுறவுக் கோட்பாட்டைப் பேணி வருகிறது என்பது உறுதியானதாகும். எனினும், இலங்கையின் தற்போதைய அரசானது தனது உள்நாட்டு அரசியல் மற்றும் அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாடு ஆகிய இரண்டிலும் சில குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

### ஊழல் மோசடிகளுக்கு எதிராக

ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல் மற்றும் புதிய அரசியல் யாப்பை வரைதல் ஆகிய விடயங்கள் உட்பட சில சீர்திருத்தங்களை மேற்கொள்வதாக இலங்கையின் புதிய அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. குறிப்பாக நாட்டில் இடைக்கால நீதியை ஏற்படுத்துவதாகவும் இதன் மூலம் உள்நாட்டுப் போரின் போது ஏற்பட்ட வடுக்களை ஆற்றுவதற்கு முயல்வதாகவும் அரசு உறுதிவழங்கியது.

ஆனால் இலங்கையின் தேசிய அரசானது தனது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகிறது. சமரநாயக்க தனது கட்டுரையில், ராஜபக்ச 2015 அதிபர் தேர்தலில் தோல்வியுற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் ராஜபக்ச மிகக் குறுகிய காலத்தில் அதாவது 2015 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் தொடர்ந்தும் இலங்கை அரசியலில் போட்டி போடக் கூடிய வலுவைக் கொண்டுள்ளார்.

2015 ஏப்ரல் மாதம் இலங்கையின் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சீர்திருத்தம் காரணமாக ராஜபக்ச மீண்டும் நாட்டின் அரச தலைவராக வரமுடியாது. அதாவது ஒருவர் இலங்கையின் அரச தலைவராக இரண்டு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்க முடியும். எனினும், ராஜபக்ச தலைமை மந்திரி (பிரதமர்) பதவிக்குப் போட்டியிடலாம். அத்துடன் ராஜபக்ச அரச தலைவராக இருந்த போது நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் செயலராகப் பதவி வகித்தவரும் ராஜபக்சவின் சகோதரர்களில் ஒருவருமான கோத்தபாய ராஜபக்ச போன்றோர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியும். இலங்கை நாடாளுமன்றில் 225 ஆசனங்களின் பெரும்பான்மைப் பலத்தை ராஜபக்ச தன்வசம் கொண்டிருக்காவிட்டாலும் கூட, ராஜபக்சவும் அவரது கூட்டணியினரும் நாட்டின் பலம்மிக்க எதிர்க்கட்சியாக உள்ளனர். சிறிசேன அரசின் மீதான நம்பிக்கை குறைவடையும் நிலை அதிகரித்துள்ள நிலையில் வரும் ஆண்டுகளில் ராஜபக்சவின் ஆட்சி மீண்டும் ஏற்படாது என்பதை நிச்சயமாகக் கூறமுடியும்.

ராஜபக்ச மற்றும் சிறிசேன ஆகியோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாவர். இந்தக் கட்சியைச் சேர்ந்த பலர் இன்றும் ராஜபக்சவின் விசுவாசிகளாக உள்ளனர். அத்துடன் உள்ளூராட்சி அரசிலும் ராஜபக்சவுக்கு அதிக ஆதரவுகள் உள்ளன. பயங்கரவாத அமைப்பை எதிர்த்து போர் புரிந்து வெற்றிபெற்ற போர்கதாநாயகனாகவே ராஜபக்ச மதிக்கப்படுகிறார்.

இவற்றுக்கும் அப்பால், அம்பாந்தோட்டையானது ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் சார் பலமான கோட்டையாகத் திகழ்கிறது. அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்ட துறைமுகம் தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களுக்கும் ராஜபக்சவே காரணம் எனக் கூறப்படுகிறது.

### மகிந்தவின் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கை

ராஜபக்ச தனது ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் நல்லுறவு பேணப்படாத நிலையில் இதுவே இவரது அதிகாரத்துவம் அதிகரிக்கக் காரணமாகி



யது. 2007இன் இறுதிப்பகுதியில் இலங்கைக்கான அமெரிக்காவின் இராணுவ உதவியானது முற்றிலும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் சீனாவிடம் அமெரிக்காவை ஒத்த கொள்கை காணப்படவில்லை.

சீனாவால்இலங்கைக்குஒருபில்லியன் டொலர் நிதி வழங்கப்பட்டது. அத்துடன் பத்து மில்லியன்கள் பெறுமதியான இராணுவ ஆயுத தளபாடங்கள் சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டதுடன் இலங்கை விமானப்படைக்குஎவ்7 ஜெட் போர் விமானங்கள் ஆறு சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்டன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் ஐ.நா பாதுகாப்புச் சபையிலும் இலங்கைக்குச் சீனா ஆதரவு வழங்கியது உட்பட ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்குச் சீனாவானது பல்வேறு இராஜதந்திர உதவிகளை வழங்கியிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது திட்டமிடப்பட்ட வகையில்பல்வேறுதாக்குதல்கள்மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக வைத்தியசாலைகள் மீதான திட்டமிட்ட எறிகணைத் தாக்குதல்கள், எவ்வித பாரபட்சமுமின்றி பொதுமக்கள் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்பட்டமை, பாலியல் வன்முறைகள் போன்ற பல்வேறு மீறல்களை இலங்கை அரச படைகள் மேற்கொண்டன.

தமிழ்ப் புலிகளும் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை, சிறுவர்களை போரில் ஈடுபடுத்தியமை, போர் வலயத்தை விட்டு மக்கள் வெளியேறுவதற்கு தடை விதித்தமை உட்பட பல்வேறு மீறல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

தனது பாதுகாப்புத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதில் இலங்கை எவ்வித ஆர்வமும் காண்பிக்கவில்லை. போர்க்குற்றங்களில்ஈடுபட்ட இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலர் அண்மையில் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.- இலங்கை இராணுவ வீரர்களால் இழைக்கப்பட்ட குறிப்பாக சிறிசேன அதிபராகப் பதவியேற்ற பின்னரும் இடம்பெற்ற பல்வேறு மீறல் சம்பவங்கள் 'சித்திரவதைகளிலிருந்து சுதந்திரம்' மற்றும் 'அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்' ஆகியன அண்மையில் வெளியிட்ட ஆவணங்களில் சாட்சியங்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**உள்நாட்டுப் போர்**

இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுஎட்டுஆண்டுகள்கடந்தநிலையிலும் தற்போதும் இராணுவ மயமாக்கல் தொடர்கின்றது. பொதுமக்களின் நிலங்களை இலங்கை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதுடன் அதில் விவசாயம், சுற்றுலாத்துறை, கல்வி போன்ற பல்வேறு துறைகளை விருத்தி செய்து தமக்கான வருவாயை ஈட்டிக்கொள்கின்றனர் என்பதை கடந்த ஆண்டு நான் இலங்கைக்குப் பயணித்த போது நேரில் பார்த்தேன்.

குறிப்பாகப் போர் இடம்பெற்ற வடக்கு மற்றும் கிழக்கில் இந்த நிலை மேலும் மோசமாகக் காணப்படுகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பைக் கொண்ட நிழல் அரசின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்பது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கில் தற்போதும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பரவலாக இடம்பெறுகின்றன.

இவ்வாறான சூழல் நிலவும் இலங்கைக்குச் செல்லும் அமெரிக்க இராணுவத்தினர் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. அதாவது இலங்கையர்களுடன் நல்லுறவைப் பேணும் தோற்றப்பாட்டை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் சமூக ஊடகங்களில் பதிவுசெய்து வருகிறது. ஆனால் சிங்களவர்கள் செறிந்து வாழும் அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் வாழும் மக்களுடன் அமெரிக்கா நல்லுறவைப் பேணுவதை உறுதிப்படுத்த முடியாது.



'அமெரிக்க இராணுவமானது இலங்கையில் மக்களுடன் நடந்து கொள்ளும் விதமானது குழப்பத்தை உண்டுபண்ணுகிறது' என மனித உரிமைச் செயற்பாட்டாளரும் தமிழருமான செரின் சேவியர் அண்மைய செவ்வியில் விளக்கமாகத் தெரிவித்திருந்தார்.

'அமெரிக்க இராணுவமானது இலங்கையில் வாழும் பொதுமக்களுடன் நடந்து கொள்ளும் விதமானது குழப்பத்தை உண்டுபண்ணுகிறது' என மனித உரிமைச் செயற்பாட்டாளரும் தமிழருமான செரின் சேவியர் அண்மைய நேர்காணல் ஒன்றில் விளக்கமாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் இலங்கை இராணுவ வீரர்கள் தலையீடு செய்ய முடியாது. இவர்கள் பொதுமக்களுக்குப் பாதகமான வகையில் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது. பொதுமக்களுக்கான வேலை வாய்ப்புக்களைத் தட்டிப்பறிக்கக் கூடாது. ஆகவே இந்த நிலையில் இலங்கையிலுள்ள பொதுமக்களின் விடயங்களில் அமெரிக்க இராணுவம் ஈடுபடும் போது மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். அதாவது இலங்கையில் இராணுவமயமாக்கல் இடம்பெறுவதற்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்குவதாகக் காண்பிக்கும் எந்தவொரு செயற்பாட்டிலும் அமெரிக்கா ஈடுபடக்கூடாது.

மனிதாபிமான மீறல்கள் இடம்பெறும் போதும் பெரும்பான்மை சமூகமான சிங்கள சமூகம் அதிகாரத்துவத்துடன் ஈடுபடுவதையும் அமெரிக்கா வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இலங்கை அரசு தனது நாட்டில் நம்பகமான இடைக்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் தவறினால், ஒருபோதுமே தீர்க்கமுடியாத அளவிற்கு வன்முறைகள் தொடரப்படும்.

பராக் ஒபாமா அமெரிக்காவின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகும் போது, சிறிசேன அரசுக்கு உந்துதலைக் கொடுக்கும் விதமான செயற்பாட்டில் ஈடுபட்டது. குறிப்பாக சிறிசேன அரசானது நாட்டில் அரசியல் மற்றும் ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அழுத்தங்களை வழங்கியது. ஆனால் பராக் ஒபாமாவின் இந்த ஆதரவானது இலங்கையில் நிலையான அமைதியை எட்டுவதற்கு பயன்படவில்லை.

**அமெரிக்காவின் பாதுகாப்பு நலன்கள்**


மாறாக, அமெரிக்கப் பாதுகாப்பு நலன்கள் இலங்கை மீது ஈடுபடக் காரணமாகியது. இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் இன, மத மற்றும் எவ்வித பின்னணிகளுமின்றி தாம் சமமாக மதிக்கப்படுகிறோம் என நியாயமான வகையில் நம்பக்கூடிய விதமாக இலங்கையுடன் பலமான பங்களிப்பை உருவாக்குவதற்கான வழிவகையை அமெரிக்கா தேடவேண்டும். இலங்கையில் மீண்டுமொரு மோதல் ஏற்பட்டால் இது இந்தப் பிராந்தியத்திற்கோ அல்லது அமெரிக்கா தனது மூலோபாய நலன்களை அடைந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கமாட்டாது.

அமெரிக்காவின் தற்போதைய அதிபரான டொனால்ட் ட்ரம்பின் வெளியுறவுக் கோட்பாடானது வெளிப்படையாகத் தெரியவில்லை. வரும் ஆண்டுகளில் இவ்வாறான இராணுவ சார் உறவு நிலை தொடரும் போக்கு காணப்படுகிறது. இரு நாடுகளும் இணைந்து இராணுவப் பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தி வரும் நிலையில் இலங்கையானது பாதுகாப்புத் துறையை விருத்தி செய்வதுடன் இராணுவமயமாக்கலையும் நீக்கும் போது மட்டுமே அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் அடிக்கடி இலங்கை துறைமுகங்களுக்கு வருகை தரும் நிலைமை குறைவடையும். இலங்கையானது தொடர்ந்தும் பல்வேறு நாடுகளுடன் மூலோபாய உறவுகளை வலுப்படுத்துவதற்குத் தயாராக உள்ளது{ என சமரநாயக்க தனது பத்தியில் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் ஒழுக்கமான உறவைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் புரிந்துணர்வையும் இலங்கையின் அரசியல் உயர்மட்டத்தினர் கொண்டுள்ளனர்.

இலங்கையின் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட கடந்த இரண்டு ஆண்டுகளாக, பொதுவாகத் தான் நம்பியதை விட இலங்கையுடனான தனது வெளியுறவுக் கோட்பாட்டில் அமெரிக்கா தளர்வைக் காண்பித்து வருகிறது.

**அமெரிக்காவின் பணி**

ஆகவே இனிவருங் காலங்களில் அமெரிக்கா இலங்கை தொடர்பில் சிறந்த பணியை ஆற்ற முயற்சிக்க வேண்டும். இதற்காக நீண்ட கால நோக்குடன் கூடிய நடைமுறைக்குப் பொருத்தமான வகையில் இலங்கையுடன் நல்லுறவைப் பேணுவதுடன் மனித உரிமை விடயங்கள் மற்றும் இடைக்கால நீதிப் பொறிமுறை தொடர்பில் இலங்கை மீது அழுத்தத்தை ஏற்படுத்துவதையும் கருத்திற் கொண்டு சமவலுவுடன் கூடிய உறவுநிலையில் அமெரிக்கா ஆர்வம் காண்பிக்க வேண்டும்.



# வாசகர் திருமுகம்

## தமிழ்மொழியின் சிறப்பு

தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர் எனப்
பாடியுள்ளார் பாவேந்தர் பாரதி
தாசன். மேலும் தமிழ்
என்பது இனிமை என்ற
பொருளையும் தருகின்றது.
தமிழ்மொழி திராவிட
மொழிக் குடும்பங்களுள்
ஒன்று எனக் கூறப்படுகின்றது.
இதனை மொழி ஆராய்ச்சி
யாளர்கள் உறுதி செய்துள்ளனர்.
தமிழ் மொழி தொன்மை
யானது என்பதுடன் அதனைத்
தாய் மொழியாகக் கொண்ட
தமிழர்கள் உலகில் மூத்த
குடிமக்கள் எனக் கருதப்படுகின்ற
னர்.
தமிழ்த் தாயின் ஆபரணங்களாக
ஐவகைக் காப்பியங்கள்
கூறப்படுகின்றன. அவையாவன
சீவகசிந்தாமணி, குண்லகேசி,
வளையாபதி,
மணிமேகலை, சிலப்பதிகாரம்
என்பனவாகும்.
தமிழ்மொழி இலக்கியச் சிறப்பு
மட்டுமன்றி இலக்கணச் சிறப்பும்
உடையது. இலக்கணம் பற்றிப்
பேசுகையில் அதுவும் ஐவகை
இலக்கணங்களாக
வகுக்கப்பட்டுள்ளன. எழுத்து,
சொல், பொருள், யாப்பு, அணி
என்பனவே அவையாகும்.
தமிழ் இலக்கண நூல்களுள்
தொல்காப்பியம், நன்னூல்,
வீரசோழியம் போன்றன சிறப்பிடம்
பெறுகின்றன.
தமிழ்மொழி இயல், இசை, நாடகம்
என மூன்று பிரிவுகளை
உடையது. இவற்றையே
முத்தமிழ் என அழைப்பர்.
மன்னர் ஆட்சிக்காலத்தில்
தமிழகத்தின் ஒரு பிரிவான
பாண்டிய நாட்டிலே முதற்சங்கம்,
இடைச்சங்கம், கடைச்சங்கம் என
சங்கம் அமைத்துத் தமிழ்
வளர்க்கப்பட்டது.
இத்தகைய சிறப்புக்களைக்
கொண்ட தமிழ்த் தாய்
காலத்துக்குக் காலம் புவிபோற்றும்
புலவர்களையும், பார்போற்றும்
பாவலர்களையும்,
நாடு போற்றும் நாவலர்களையும்,
அகிலம் போற்றும் அறிஞர்
பெருமக்களையும் ஈன்று பெரும்
கொண்டாள்.
சிறப்பு மிக்க தமிழ் மொழியை
தாய் மொழியாகக் கொண்ட
நாம் தலைநிமிர்ந்து நிற்போமாக.

*செல்வி சோபிதா மனோகரன்*
*தில்லைகட்டி*
*சுன்னாகம்*

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | 5 | | | | 6 |
| 9 | 2 | | 6 | | | | | 7 |
| 6 | | | 9 | | | | 3 | 1 |
| | | 2 | 8 | | 6 | | | 4 |
| | 9 | | | 1 | | | 6 | |
| 8 | | | | | 3 | 1 | | |
| 4 | 3 | | | | 9 | | 1 | |
| 2 | | | | | 4 | | 7 | 5 |
| | | | | 2 | | 6 | 4 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 1 | 4 | 9 | 7 | 8 | 6 | 2 |
| 9 | 6 | 4 | 5 | 2 | 8 | 7 | 1 | 3 |
| 7 | 2 | 8 | 1 | 3 | 6 | 4 | 5 | 9 |
| 8 | 9 | 7 | 3 | 5 | 4 | 1 | 2 | 6 |
| 3 | 1 | 5 | 6 | 7 | 2 | 9 | 4 | 8 |
| 6 | 4 | 2 | 9 | 8 | 1 | 3 | 7 | 5 |
| 1 | 7 | 9 | 8 | 6 | 5 | 2 | 3 | 4 |
| 4 | 5 | 3 | 2 | 1 | 9 | 6 | 8 | 7 |
| 2 | 8 | 6 | 7 | 4 | 3 | 5 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

* மச்சக்காரன் ™ *

மரங்களை வெட்டியதற்கு தண்டனையாக மண்டையில் வெயிலால் அடித்து, பதிலடி தருகிறது இயற்கை

கடிகாரத்துக்கு நேரத்தை மட்டுமே காட்டத் தெரியும்...



அதை நல்ல நேரமாகவும் கெட்ட நேரமாகவும் மாற்ற மனிதனால் மட்டுமே முடியும்...!

வெள்ளைக்காரன் குளிர்சாதனக் பெட்டியைக் கண்டு பிடிக்கிறதுக்கு முன்னாடியே



மண்பானையில் குடிதண்ணீர் குடிச்சவங்க நாங்கள்

அடிக்கிற வெயில்ல வெள்ளைகாரன் கூட கருப்பாயிடுறான்...




வெள்ளை முடி மட்டும் கறுப்பாக மாட்டேங்குதே...

# மைனா நந்தினி தலைமறைவு

கணவர் கார்த்திக் தற்கொலை விவகாரத்தில் பிணை மனு நிராகரிக்கப்பட்டதால் பொலிஸாரின் கைதில் இருந்து தப்பிக்க நடிகை நந்தினி தலைமறைவாகியுள்ளார். நந்தினியின் கணவர் கார்த்திக் அண்மையில் தற்கொலை செய்து கொண்டார். தன்னுடைய இறப்புக்கு மனைவி நந்தினியின் அப்பாதான் காரணம் என எழுதிவைத்துவிட்டு அவர் தற்கொலை செய்துகொண்டார். கார்த்திக் ஒரு ஜிம் மாஸ்டர். நந்தினியும் அவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். திருமணமாகி சில மாதங்களிலேயே இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இருவரும் பிரிந்து வாழ்ந்துள்ளனர்.



கார்த்திக், மனைவியைத் தன்னுடன் சேர்ந்து வாழ பல முறை அழைத்தும், அவர் மறுத்ததால் விரக்தியடைந்த கார்த்திக் தற்கொலை செய்து கொண்டார். அப்போது எழுதிய கடிதத்தில் தனது இறப்புக்கு நந்தினியின் அப்பாதான் காரணம் என கார்த்திக் குறிப்பிட்டிருந்தார். மேலும் கார்த்திக்கின் அம்மா, தனது மகனது இறப்புக் குறித்து சென்னை விருகம்பாக்கம் காவல்நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதையடுத்து நந்தினியும் அவரது அப்பாவும் பொலிஸார் தங்களை கைது செய்யாமல் இருக்க நீதிமன்றத்தின் முன் பிணை கோரி வழக்கு தொடர்ந்தனர். ஆனால் நீதிமன்றம் மனுவை நிராகரித்தது. அதையடுத்து, நந்தினியையும் அவரது அப்பாவையும் பொலிஸார் கைது செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதை அறிந்த நந்தினி தலைமறைவாகிவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

**காதலன் :** உன் வீட்டுக்கு போயிருந்தேன், இனி மேலும் நமக்கு கல்யாணம் ஆகும்னு எனக்குத் தோணல.



**காதலி:** என்னோட அப்பாவ பார்த்தீங்களா?

**காதலன்:** இல்ல உன் தங்கச்சியப் பார்த்தேன் அதான்...

காதலி : ????





**மேடம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகலாம். தொழில், வியாபாரத்தில் திடீர் பொறுப்பு அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.



**இடபம்:** பொறுப்பை உணர்ந்து செயல்படுவீர்கள். அவமதித்தவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணியை நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.



**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். நண்பருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**கடகம்:** சிலரது பேச்சால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள், பிள்ளைகளின் வழியில் செலவு செய்வர்.



**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்தநிலையைச் சந்திப்பீர்கள். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமையைச் சந்திப்பர்.



**கன்னி:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடிப்பர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**துலாம்:** முக்கிய பணி நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்பநலனுக்காகப் பாடுபடுவர்.



**விருச்சிகம்:** மனதில் நேர்மை எண்ணம் மேலோங்கும். தொடங்கும் பணி தடையின்றி நிறைவேறும். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி பெறும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும்.



**தனுசு:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையால் திண்டாடுவர். கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும்.



**மகரம்:** சமுகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். சேமிக்கும் வகையில் தாராள பணவரவு உண்டு. காணாமல் தேடிய பொருள் கை வந்து சேரும்.



**கும்பம்:** வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். சமுக விடயத்தில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.



**மீனம்:** மறைமுக எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.




ராசிகளுக்கான

# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

## விருச்சிகம்

நடப்புத் தொடக்கமே உங்களுக்கு உற்சாகத்தைத் தரும். நினைத்த காரியத்தில் வெற்றியைப் பெற்றுத் தரும் 11ஆம் இடத்தில் குரு பகவான் அமர்ந்திருப்பது உங்களின் எண்ணங்களை நிறைவேற்றும். சனி பகவானின் ஜென்ம சஞ்சார நிலையும் உங்களுக்கு சாதகமான பயன்களைப் பெற்றுத் தரும். திட்டமிடுதலின் மூலம் வெற்றி கண்டு வருவீர்கள். கொண்ட இலட்சியத்தை அடையும் வரை விடாமுயற்சியுடன் செயற்படுவீர்கள். நெடுநாள்களாக மனதில் இருந்த கனவுகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தேறும். ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்கக் கூடுதல் அலைச்சலைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஒரு சிலருக்குத் தொழில் முறையில் அந்நிய தேசத்துக்கு சென்று வரும் வாய்ப்பு உண்டாகும். மனதில் தத்துவ சிந்தனைகள், இரக்க குணம், தியாகம் இடம்பிடிக்கும். தெளிவான சிந்தனை மற்றும் கருத்துகள் மூலம் நற்பெயர் காண்பீர்கள். உங்களது ஆலோசனையின்படி செயற்படுபவர்கள் சிறப்பான வெற்றி காண்பார்கள். பிரச்சினைக்குரிய விடயங்களை விவேகத்துடன் கையாள்வீர்கள். விளையாட்டு விடயங்களில் ஈடுபாடு கூடும். சூதாட்டங்கள் போன்ற விடயங்களில் மனம் லயிக்கும். வீண் விரயத்தைச் சந்திக்க வேண்டியுள்ளதால் மனதைக் கட்டுப்படுத்துவது நல்லது.

தாயார் வழி உறவினர்களால் பொருளாதார ரீதியான பிரச்சினைகள் வரும். சிக்கன நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள். உதவி கேட்டு வரும் உறவினர்களுக்கு உதவி செய்ய இயலாமல் போகும். மிகவும் நெருக்கமான நபர் ஒருவரோடு கருத்து வேறுபாடு கொள்ள நேரிடும். பிள்ளைகளின் உடல், மன நிலையில் கவனம் அவசியம். சில நேரத்தில் அவர்களது பிடிவாதமான செயல்கள் உங்களுக்கு தர்மசங்கடமான நிலையை உருவாகக் கூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி அவர்கள் பெயரில் புதிய சொத்துகளை வாங்க காலநேரம் சாதகமாக இருக்கும்.

மாணவர்கள் கல்வியில் சிறப்பான முன்னேற்றம் காண்பார்கள். மின், மின்னணு, கணினி விஞ்ஞானத் துறையைச் சார்ந்த மாணவர்களும், இரசாயனம், இயற்பியல், புவியியல் துறை சார்ந்தவர்களும் சாதனைகள் புரிவார்கள்.

பெண்கள் ஏழரை சனியின் தாக்கத்தால் அவ்வப்போது குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். ஆயினும் விவேகமான அணுகுமுறையினால் எளிதில் சமாளித்து குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழலை உண்டாக்குவீர்கள். கணவரின் மனநிலையைப் புரிந்துகொண்டு செயற்படுவீர்கள். தெளிவான முடிவெடுக்க இயலாத சூழலில் அவரது ஆலோசனைகள் வெற்றி பெற்று தரும். அதே நேரத்தில் கணவர் வழி உறவினர்களோடு கருத்து வேறுபாடு தோன்றும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவது நல்லதல்ல.

பணியாளர்களுக்கு அவ்வப்போது தற்காலிக இடமாற்றம், முகாம், தொற்று என அலைச்சல் கூடும். காகிதாதிகள், பத்திரிகை, காப்புறுதி, தகவல்தொடர்பு, வாகன சேவைகள் என தொழில்கள் முன்னேற்றம் தரும். பொதுவாக புத்தாண்டில் சாதக பாதகங்களை சமாளித்து வெற்றி காண உள்ளீர்கள்.

**பரிகாரம்:** புதன்கிழமை தோறும் பெருமாள் கோயிலுக்கு சென்று வழிபடுவது நல்லது. இயலாதவர்கள் இருந்த இடத்திலிருந்தே பெருமாளை தியானிப்பதும், பாராயணம் செய்வதும் நன்மை தரும்.

பெண்கள் தம்மை அலங்கரிப்பதில் அலாதிப் பிரியமுடன் இருப்பார்கள். அந்த வகையில் தலை அலங்காரத்துக்கு என நவீன வடிவிலான கிளிப்புகள் சந்தைக்கு வந்துள்ளன. இவை 290 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.




## எந்தெந்த உணவு சாப்பிட்டால் பால் சாப்பிடக்கூடாது என்பது தெரியுமா?

பால் என்பது மனிதனுக்கான முக்கிய உணவுகளில் ஒன்று. பாலில் இருந்து கிடைக்கும் தயிர், நெய் ஆகியவையும் உடலுக்கு நன்மை பயக்கும் பொருள்கள். பாலினால் உடல் ஆரோக்கியம் மேம்படும் என்றாலும் பாலுடன் ஒருசில உணவுகள் கலந்து சாப்பிடக்கூடாது. அவ்வாறு கலந்தால் விசத்தன்மையாக மாறிவிடும் அபாயமும் உள்ளது.

இரவில் பால் குடிக்கும் பழக்கம் பலருக்கு இருக்கும். ஆனால் இரவில் ஒருசில குறிப்பிட்ட உணவுகளை எடுத்து கொண்டால் அன்றையை தினம் பால் குடிக்கக்கூடாது என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். எந்தெந்த உணவுகளைச் சாப்பிடும்போது பால் சாப்பிடக் கூடாது என்பதைப் பார்ப்போம்.

1. பால் சாப்பிடும்போது அதனுடன் பழங்கள், இறைச்சி, தேங்காய், தயிர், முட்டை, கொள்ளு, பருப்பு வகைகள் ஆகியவற்றை சேர்த்து உண்ணக்கூடாது. அவ்வாறு சாப்பிடும்போது, சமிபாட்டுச் செயலில் ஈடுபட்டிருக்கக்கூடிய என்சைம்களின் செயலைத் தடுத்து, உடலில் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.
2. முள்ளங்கி, உள்ளி, கீரைகள், முருங்கைக்காய் ஆகியவற்றால் ஆன உணவுகளுக்குப் பின், பாலைக் குடிக்கவே கூடாது.
3. பால், தயிர் ஆகியவற்றோடு பழங்களைச் சேர்த்து சாப்பிடவே கூடாது. பழங்கள் ஆரோக்கியமானவைதான். ஆனால் அவற்றை பிற எந்த உணவுகளோடும் சேர்த்து சாப்பிடக் கூடாது. அது நம்முடைய சமிபாட்டு மண்டலத்தை பலவீனமாக்கும். உடலில் தலைப்பாரம், பித்தம் பான்றவற்றை உண்டாக்கிவிடும்.



## வரலாற்றில் இன்றைய தினம்

### 17.04.2017

1961–கியூபாவில் பிடல் கஸ்ரோவை அகற்று முகமாக சிஐஏயால் பயிற்றுவிக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்பட்ட குழுவொன்று பிக்ஸ் குடாவில் தரையிறங்கியது.

1970 –அப்பலோ திட்டம் அப்பலோ 13 விண்கலம் பல சவால்களைச் சந்தித்த நிலையில் பத்திரமாக பூமிக்குத் திரும்பியது.

1997–கயிறு இழுத்தலில் தோற்றவர்கள் திருகோணமலை அபயபுர இன்னிசை நிகழ்வில் கைகலப்பில் ஈடுபட்டனர். பொலிஸாரால் துப்பாக்கிச் சூடும். போட்டியில் பொலிஸார் தோல்வியடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

2006–பலஸ்தீனிய தற்கொலைக்குண்டுதாரியால் குண்டுவெடிக்க வைக்கப்பட்டதில் டெல் அசிவ் உணவகமொன்றில் 11பேர் உயிரிழந்ததுடன் 70 பேர் காயமடைந்தனர்.

2014– பூமி அளவிலான வேறொரு கிரகம் மற்றொரு நட்சத்திரமான மக்கள் குடியிருக்கத்தக்க வலயத்தில் நாசா கெப்லர் தொலை நோக்கியால் கண்டுபிடிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

2016–விசுவாசமாகச் செயலாற்றினால் இந்த ஆண்டுக்குள் தீர்வு என யாழ்ப்பாணத்தில் சம்பந்தன் தெரிவிப்பு.

2016– பொருத்து வீடு மக்களுக்குப் பொருத்தமானதாக இல்லையெனக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைச் சம்பந்தன் தெரிவிப்பு.

2016 - மகிந்த ஆட்சி தொடர்ந்திருந்தால் தமிழ் மக்களின் நிலை படுமோசமென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு.

2016 - ஈழத்தமிழர் மீதான இன அழிப்புக்கு பன்னாட்டு விசாரணை அவசியமானதெனக் கனேடிய எதிர்க்கட்சி வலியுறுத்து.

### நாளை

**சித்திரை-05**

செவ்வாய்க்கிழமை -18.04.2017

திதி: ஸப்தமி மு.இ.11.45

நட்சத்திரம்: பூராடம் மு.இ.07.30

சுபநேரம்:10.33-12.03 வரை

ராகுகாலம்:03.03-04.33 வரை

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நுண்ணுயிரிகள்.!

## தாவரங்களின் தோள்கொடுக்கும் தோழன்


டிலாவேர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுள்ள அண்மைய ஆராய்ச்சியின் போது ஒரு முக்கியமான உண்மை வெளியாகி உள்ளது. தாவரங்களின் இலைகள் நோய்க்கிருமிகளால் தாக்கப்படும் சந்தர்ப்பங்களில் வேர்ப்பாகத்துக்கு உதவிகோரியதான ஓர் அவசரச் செய்தி அனுப்பப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்தச் செய்தியை வேர்கள் ஏற்றுக்கொண்டு மெலிக் என்னும் அமிலத்தைச் சுரக்கின்றது. வேரிலிருக்கும் நன்மை செய்யக்கூடிய ஒரு பக்றீரியா இந்த அமிலம் மூலமாக பாதிக்கப்பட்ட பகுதிக்கு மேல்நோக்கி அனுப்பப்படுவதாகக் கூறுகின்றனர்.

தாவரங்கள் எப்போதும் 'குந்தித்தின்பவை' என்னும் கருத்தின் வெளிப்பாடு இதன்மூலமாக தகர்க்கப்பட்டிருக்கிறது. மனிதர்களையும் விலங்குகளை யும்போலவே தாவரங்களிலும் தூண்டல், துலங்கல் விளைவுகள் காணப்படுகின்றன என்பது உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. அதனையும் தாண்டி தாவரங்களுக்கு அதிகமான புத்திசாலித்தனம் இருக்கிறது என்ப தையும் இந்த ஆய்வுகள் நிரூபித்திருக்கின்றன.

தாவரங்களின் வேர்கள் மண்ணுக்குள் புதையுண்டு இருப்பதால் அவைகளால் நகரமுடியாது என்று நாம் நினைக்கிறோம்.நினைத்துக்கொள்கி றோம். ஆனால், இருந்த இடத்தில் இருந்துகொண்டே தாவரங்கள் புற உலகிலிருந்து உதவியைக் கேட்டுப்பெறுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.இந்த செயல்நிலைகள் இயற்கையின் விநோதம்.விந்தை என்பதைவிட வேறு எப்படிச் சொல்ல முடியும்.

அறபிடோபிசிஸ் தலீன (Arabidopsis thaliana) என்ற தாவரத்தின் இலைகளை சியூடோமோனஸ் சிறிஞ்சே (Pseudomonas syringae) என்னும் நோய்க்கிருமியால் தாக்கமுறச் செய்தனர். சில நாள்களின் பின்னர் நோயின் தாக்கம் காரணமாக இலைகள் மஞ்சளாகிப் போயிருந்தது. நோயின் அறிகுறிகளும் தாவரத்தில் தெரிய ஆரம்பித்தன. ஆனால் பசிலஸ் சப்ரில்ஸ் (Bacillus subtilis) என்னும் நன்மை செய்யும் நுண்ணியிரியை வேர்ப்பகுதியில் செலுத்திய தாவரங்கள் மட்டும் நோயின் அறிகுறிகள் எதுவுமின்றி ஆரோக்கியமாக இருந்ததை காண முடிந்ததாக தாவரவியலாளர்கள் ஆய்வின் அடிப்படையில் கூறுகின்றனர்.

ஆக,பசிலஸ் சப்ரில்ஸ் என்னும் நுண்ணியிரியை விவசாயிகள் இப்போதும் தாவரங்களின் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்க பயன்படுத்துகிறார்கள். தாவரங்களின் வேர்களைச்சுற்றிலும் ஒரு படலமாக இந்த நுண்ணியிரி படர்ந்துகொள்கிறது. தாவரங்களின் இலைகள் அவசர உதவி கோரத்தொடங்கியதும் வேர்கள் மெலிக் என்னும் கரிம அமிலத்தை சுரக்கின்றன.




மெலிக் அமிலம் பசிலஸ் சப்ரில்ஸ் நுண்ணி யிரியை இலையை நோக்கி ஒருதிசையாக ஈர்ப்பதை ஒரு நவீன தொழில் நுட்பம் மூலமாக விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளோம் எனக் கூறுகின்றனர். எல்.எஸ்.எம் 510 டி.யு.ஓ (LSM 510 DUO) என்னும் லேசர் சாதனம் இதற்காக பயன்படுத்தப்பட்டது. டிலாவேர் பல்கலைக்கழகத்தில் உள்ள இந்தச் சாதனம் பல மில்லியன் டொலர்கள் மதிப்பு வாய்ந்தது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

ஒரு தாவரத்தின் அரைவாசிப் பகுதி மண்ணுக்குள் புதையுண்டு-இருப்பதால் வேரினுள் ஏற்படும் மாற்றங்களை படமெடுப்பது என்பது மிகப் பெரிய சவாலாக காணப்படுகிறது. ஆனாலும் டிலாவேர் பல்கலைக்கழகம் இதற்கான வசதிகளைப்பெற்றிருப்பதாக சொல்லப்படுகிறது. உண்மையில் ஒளிஊடுருவும் அறைகளில் ஒளியியல் கருவிகளை இவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

தவிர,தாவரங்கள் உதவிகோரி எழுப்பும் எச்சரிக்கைகளை அறியவும் தாவர நுண்ணியிரிகளின் உதவியால் எவ்வாறு தாவரங்கள் நோய்களை எதிர்கொள்கின்றன என்பதையும் இந்த ஆய்வுகள் எமக்குத் தெளிவூட்ட எத்தனிக்கின்றது. இன்னமும் தெளிவுபடுத்த வேண்டிய புரிதல்களை எம் சார்பில் வேண்டிநிற்கின்றது.


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 13.08.1962 இறப்பு 15.04.2017

எமது பக்கவாத பராமரிப்பு இல்லத்தின் தலைவர் **செ. அருளானந்தசிவம்** அவர்களின் அன்புச் சகோதரனான

**செல்வநாயகம் அகிலேஸ்வரன்**

அவர்கள் 15.04.2017 அன்று இறையடி சேர்ந்ததையிட்டு எமது இல்லம் சார்ந்த ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நிர்வாகிகள், பயனாளிகள், பணியாளர்கள், பக்கவாத பராமரிப்பு இல்லம், கிளிநொச்சி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மயில்வாகனம் ஞானானந்தம்**

தோற்றம் 10.11.1943

மறைவு 28.04.2016

காலனே வந்ததேனோ ! காலமே சென்றதேனோ !
உலகத்தின் நியதி தன்னில் ! துயரம் தான் மிச்சமன்றோ !
சென்றாலும் வாழ்வீரே எம்மோடு !
நெஞ்சத்தால் அழியாத நினைவோடு !
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவோடு துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**திருமதி பவளக்கண்மணி குணரட்ணம்**



யாழ். தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும், அழகொல்லை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளக்கண்மணி குணரட்ணம் நேற்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - தங்கத்திரவியம் தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - உமையாத்தைப் பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற குணரட்ணத்தின் அன்பு மனைவியும் விமலநாதன் (கனடா), சந்திரகாந்தா, உலகநாதன் (கனடா), உமாகாந்தா (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயும் வித்தியாபதி (கனடா), கமலநாதன், தயாநந்தினி (கனடா), குகதாஸ் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியும் பாக்கியரத்தினக்கண்மணி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் டினேஷ், சுரேகா, ஜானி, அரோலின், நியோமி, கவினா, கபில், குகர்ஷா, வைசிகா, விநோ, ரதிஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் தும்பு தொழிற்சாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அழகொல்லை, அளவெட்டி.
021 300 1041

தகவல்: குடும்பத்தினர்

## தேவை

வெல்டர்கள் தேவை.
பழகவிரும்புபவர்களும் அழைக்கலாம்.
**தொடர்பு - 077 123 2669**

## கணித வகுப்புகள்

தரம் 6 முதல் 11 (O/L) வரை கணித பாடம் இருப்பிடம் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு - **077 2627 890**

## காணி விற்பனைக்கு

வசாவிளான் கிழக்கு பிரிவில் கலப்பனாவுடை என்னும் பெயருடைய கற்காணி 26 பரப்பு விற்பனைக்குண்டு. போக்குவரத்து, மின்சார வசதிகள் உண்டு.
**தொடர்பு - 071 856 2098**

## தவறிவிட்டது

கடந்த 13.04.2017 ஆம் திகதி மாலை 6.15 மணி யாழ். மன்னார் பஸ்சில் குணரத்தினம் சீலன் - சீலன் சுகந்தி என்பவர்களின் தேசிய அடையாள அட்டைகள், மோட்டார் வாகன காப்புறுதி வரிஅட்டை, திணைக்கள அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வங்கி ATM அட்டை(2) என்பன தவறிவிட்டன. இதனைக் கண்டு எடுத்தோர் T.P: 077 782 5569, 071 609 1497 என்பதனுடன் அல்லது முழங்காவில் வைத்திய சாலை அல்லது தெல்லிப்பளை வைத்தியசாலையில் கையளிக்க வேண்டப்படுகின்றீர்கள். இதற்கு உரிய சன்மானம் வழங்கப்படும்.


# ஓர்க்கிட் செடி...!

## பச்சையம் இன்றி ஒளிச்சேர்க்கை செய்யும் கடன் வாங்கி

பச்சைஎடுத்ததாம்பெருமாள் அதைப்பிடுங்கியதாம் அனுமார் என்பதான கதைவெளியின் பரம்பலை செவிவழியாக கேட்டிருக்கிறோம்.அதன் அர்த்தங்களை ஆராய்ந்து அறிந்து கொண்டுவாய் மொழிய வாடையாய் முகிழ்ந்திருக்கிறோம். அந்தவகையிலே ஒரு ஓர்க்கிட் செடி தனக்குத் தேவையான சக்கரை உணவை பூஞ்சானக் கிருமிகளிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்கின்றது. அந்தப் பூஞ்சணங்களோபக்கத்தில்வளரும்மரங்களின்வேர்களிலிருந்துதிருடுகின்றன. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் மண்ணுக்கடியிலே வெளித்தெரியாமல் இடம் பெறுவதாகச் சொல்லப்படுகிறது.

உயிரியல்வல்லுநர்கள் தாய்லாந்தில் அண்மிதமாக பச்சையம் இல்லாத மூன்று ஓர்க்கிட் செடிகளைக் கண்டனர். பச்சை நிறம் இன்றி எப்படி இந்தச் செடிகள் ஒளிச்சேர்க்கை செய்து தப்பிப் பிழைக்கிறது என்பது தொடர்பில் ஆராய்ந்தனர். இந்த ஆய்வின் தொடர்ச்சித் தன்மைகளும் ஓர்க்கிட் செடிகள் பூஞ்சணங்களின் உதவியுடன் பக்கத்தில் இருக்கும் மரங்களின் வேர்களிலிருந்து உணவைத் திருடி வாழ்க்கை நடத்துவதான தகவலளிப்பை வெளித்தந்தது.



அடர்ந்த கானகத்தில் வாழும் இவ்வகை ஓர்க்கிட் செடிகள் மிகவும் அபூர்வமானவை எனவும் அவற்றின் வாழ்க்கைமுறைமை என்பது அதிசயமானதாக இருப்பதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்தவகையிலே பூஞ்சணங்கள் பொதுவாக மண்ணில்வாழும்கிருமிகள் என்பதுடன் காளான்கள் கூடப் பூஞ்சணங்கள்தான் என்கின்றனர் அறிவியல்நிபுணர்கள். ஆக, ஓர்க்கிட் செடிகளின் சாதுரியமான செயற்பாடுகளும் பூஞ்சணங்களிடம் இருந்து உணவைப் பெற்று உயிர்வாழும்முறைமையும் ஆச்சரியமாக இருக்கிறது.


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் துர்முகி வருடம் பங்குனி மாதம் 26 ஆம் நாள் (08.04.2017) சனிக்கிழமை மாலை பூர்வபக்க திரயோதசி திதியில் அமரத்துவமடைந்த எமது குலவிளக்கு

**ஸ்ரீமதி சாரதாம்பாள் தியாகராசக் குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

17.04.2017 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் தசாகம் (கல்லெடுப்பு).

18.04.2017 செவ்வாய்க்கிழமை காலை ஏகோதிஷ்டம் மாசிகம்.

19.04.2017 புதன்கிழமை காலை சபிண்டீகரணம்.

20.04.2017 வியாழக்கிழமை காலை கிருஹயக்ஞமும் மதியபோசனமும்.

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

இணைந்த உறவுகளுடன்
சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
[ஆசிரியர்,விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்]
077 325 2442

முதலாம் கட்டை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.



# பேரீச்சை மரங்கள்!

## நுண்ணூட்டச்சத்தின் உவப்பான வரப்பிரசாதங்கள்

மனிதன் முதன் முதலாகப் பயிரிட ஆரம்பித்த தாவரங்களுள் முதன்மையானதாக பேரீச்ச மரங்கள் சொல்லப்படுகின்றன. ஏறத்தாழ 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக மொசப்பத்தேமியா பகுதியில் வாழ்ந்து வந்த மனிதன் முதலில் பேரீச்சமரங்களைபயிரிடஆரம்பித்தான் என ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இதற்கு ஆதாரமாக அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுகொள்ளப்பட்ட பாறைப் படிவங்களில் பேரீச்ச மரம், இலை, காய்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் மொசப்பத்தேமியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் பயிரிடப்பட்டு வந்த பேரீச்ச மரங்கள் பின்னதாக பல நாடுகளுக்கு பரவியுள்ளது. குறிப்பாக 1765 ஆம் ஆண்டுக்கு பின்னர் தான் அமெரிக்க தீவுகளில் பயிரிடப்பட்டு உள்ளது எனவும் அதற்கு முன்பதான பல ஆயிரம் ஆண்டுகளாக அரேபிய பாலைவனங்களில் பயிரடப்பட்டு வந்துள்ளது எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அந்தவகையிலே பேரீச்ச மரங்கள் மிகவும் பசுமையானவை. மிகக் குறைந்த நீரின் ஆகாரம் இருந்தாலே உயிர் வாழக் கூடியவை. அதே வேளை ஒரு ஹெக்ரேயருக்கு அதிக விளைச்சலைத்தரக்கூடிய மரங்களுள் முதன்மையானதாக பேரீச்ச மரங்கள் விளங்குகின்றன. ஓர் ஆண்டில் உலக பேரீச்சம்பழ உற்பத்தியை நோக்கினால் அண்ணளவாக முப்பது லட்சம் தொன்களாக இருக்குமெனகூறப்படுகிறது. பேரீச்சம் பழங்களை பொறுத்தவரையிலே அவை மிகவும் சத்தானவை, உடலுக்கு அதிக சக்தியையும் ஆரோக்கியத்தையும் அளிப்பவை. ஒரு கிலோ பேரீச்சம் பழமானது அண்ணளவாக 3 ஆயிரம் கலோரிக்கும் அதிகமானஎரிசக்தியைதரக்கூடியதெனவும் இந்த தொகையானது பிற உணவுகளையும்பழங்களையும் விடப் பல மடங்கு அதிகமானதாக இருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்களால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.



பேரீச்சம் பழங்களில் மாச்சத்து பல விதமான சக்கரை ரகங்களாகக் காணப்படுகிறது. குளுக்கோசினை பிரக்டோஸ்களாக பிரிக்கக் கூடிய மாச்சத்துக்கள் அதிகம் அடங்கியுள்ளது. சில சக்கரை வகைகள் முழுவதுமே மாப்பொருள்களாக உடல் எளிமையாகவே எடுத்துக் கொள்ளக் கூடியதான விதத்தில் கிடைக்கின்றது. இத்தகைய பழங்களை உட்கொள்வதன் மூலம் உடலுக்கான அதிக சக்தியை இலகுவாகப் பெறமுடியுமென சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

மேலும் பேரீச்சம்பழத்தில் அதிக அளவில் மக்னீசியம் காணப்படுகின்றது. (1 கிலோ பேரீச்சம்பழத்தில் 600 மில்லி கிராம் காணப்படுகிறது) இது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்தது.

பேரீச்சம்பழத்தை எரித்து சாம்பலாக மாற்றும் போது அதில் 50 வீதமான பொட்டாசியம், 15 வீதமான குளோரின் , 8 வீதமான பொஸ்பரஸ், 5 வீதமான கல்சியம், 0.25 விதமான இரும்பு, 12 வீதமான மக்னீசியம் மற்றும் 10 வீதமான சல்பர் காணப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆக, நன்கு பழுத்த உலர்ந்த பழங்களை சுத்தம் செய்து விதை நீக்கி உண்ணுங்கள்! இது தவிர பழங்களை பாலில் கொதிக்க வைத்து மசித்து உண்ணுங்கள்! பழங்களை இரண்டாக நறுக்கித் தேனில் ஊற வைத்து தினமும் இரவு வேளைகளில் உண்ணுங்கள்! ஏனெனில் அதில் எண்ணற்ற நுண்ணூட்டச்சத்துக்களும், தாதுப்பொருள்களும் காணப்படுகிறது. இந்தநிலையிலே பேரீச்சம்பழத்தை நாம் ஒரு நுண்ணூட்டச்சத்துச் சுரங்கம் என்றே அழைக்க முடிகிறது....!

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 . 12 . 1928 | 16 . 04 . 2017 |

### திருமதி முத்தம்மா கணபதிப்பிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கண்ணாபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது 44, மாட்டின்வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி முத்தம்மா கணபதிப்பிள்ளை நேற்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஜீவஜோதி, கானஜோதி, லோகஜோதி, வரதஜோதி, புனிதா ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வச்சிரவேல் மற்றும் பாலசுந்தரம்(ஜேர்மனி), பாஸ்கரன்(கண்ணாபுரம்) ஆகியோரின் அன்பு மாமியும் நவராணி(ஆஸ்திரேலியா), நர்மதா (அமெரிக்கா), வசந்தகுமார் (லண்டன்), ஜேந்தகுமார், பாலகுமார் (பிரான்ஸ்), அசோக்குமார் (ஆஸ்திரேலியா), ராணி, கேதாரணி (ஜேர்மனி), வினோ, புவி, ஆரணி, அகிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஷ்வினி, அட்ஷயன், மாறா, ஹனிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (17.04.2017) திங்கட்கிழமை எஸ் இன்பம் மலர்ச்சாலையில் (கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு அருகில்) இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2.00 மணியளவில் இறுதிக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : ஜீவஜோதி (மகள்)
077 842 8156, 077 078 4453

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை சுப்பிரமணியம்

**(ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார்)**



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், மாங்குளம் மற்றும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சுப்பிரமணியம் நேற்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ண பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (புறாக்கூட்டுமணியம்) பொற்கொடி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகம் அவர்களின் அன்புக்கணவரும் யோகராணி, லில்லிராணி, கிமாலராணி, நேசராஜன் (நேயின் பல்பொருள் வாணிபம் சித்தன்கேணி), பிறேமராணி, மகாராஜன், சண்முகராஜன் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்புத் தந்தையும் விசாகப்பெருமாள், ஜெயரட்ணம், விமலநாதன், மனோராணி, பரமலிங்கம், கலாவதி, உமையாள் ஆகியோரின் அன்புமாமனாரும் கிருஸ்ணகுமரன் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயகௌரி (ஆஸ்திரேலியா), ராகுலன் (கட்டார்), ஜெயலக்ஷ்மி (கனடா), ஜெயறஞ்சினி, கோகுலன், கௌசல்யா (முகாமைத்துவ உதவியாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை), பார்த்தீபன் (லண்டன்), மேனன் (கட்டார்), மிதிலா (ஆசிரியை, மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்) சிவானுஜா, தனுசியா நிவேதா, உமா (சங்கானை பிரதேச குடும்ப நலஉத்தியோகத்தர்), ரதி ( முகாமைத்துவ உதவியாளர், விலை மதிப்பீட்டு திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவகாமி (முகிழ் நிலை ஆசிரியர், கோப்பாய் கல்வியியற்கல்லூரி), மயூரா, சங்கவி (முகாமைத்துவ பீடம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), சுபாசினி, தாரகா ஆகியோரின் அன்புப்பேரனும் விஷ்வா, பானுஜன், டினோஜன், யாகவி, விவாஷ், நதிலன் ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2017) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னகம், சித்தன்கேணி
021 320 5348

தகவல்:
குடும்பத்தினர்

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## போரில்...

தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து பெருமளவு தங்கம் மீட்கப்பட்டிருந்தது. இராணுவத்தால் மீட்கப்பட்ட தங்க நகைகள் இரண்டு கட்டமாக உரியவர்களிடம் மீளளிக்கப்பட்டன.

இந்த நிலையில் மத்திய வங்கியிடம் எவ்வளவு தங்க நகைகள் தற்போது கையிருப்பில் உள்ளன என்று தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

‘2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதியிலிருந்து 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 28 தடவைகளில் தங்க நகைகள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன. அதில் 37.7 கிலோக் கிராம் தற்போது கையிருப்பில் உள்ளது. தங்க நகைகள் இராணுவத்தால் ஒப்படைக்கப்படும்போது, அவற்றை தேசிய இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையினர் பரிசோதனை செய்தே ஒப்படைத்தனர். கடந்த ஆண்டு இராணுவத்தால் 6 கிலோ நிறையுடைய பொதி தங்கம் என்று கூறி ஒப்படைக்கப்பட்டது. அதனை இன்னமும் ஆபரணங்கள் அதிகார சபையினர் சோதனை செய்யவில்லை’ என்று மத்திய வங்கியால் தெரிவிக்கப்பட்டது. (வ-5,101)

## மோட்டார்...

பொலிஸார் தெரிவித்தனர். மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த துரைரெட்ணம் றெட்னகுமார் (வயது32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார். அவர் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்றார்.

“ அவர் சனிக்கிழமை இரவு அடம்பன் பகுதியிலிருந்து மன்னாரில் உள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே அடம்பன் பகுதியில் மரம் ஒன்றுடன் மோதி விபத்து நிகழ்ந்துள்ளது. எனினும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அந்தப் பகுதியால் பயணித்தவர்களே உடலம் ஒன்று வீதியில் கிடப்பதாக அடம்பன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற அடம்பன் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். சம்பவம் தொடர்பில் நேரில் சென்று மன்னார் பதில் நீதிவான் விசாரணைகளை நடத்தினார். சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்” என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, அடம்பன் பகுதியில் இடம்பெற்ற புது வருடக் கொண்டாட்டத்தில் இளம் குடும்பத்தலைவர் பங்கேற்றிருந்தார். அதனை முடித்து அவர் வீடு திரும்பிய போதே விபத்து இடம்பெற்றது என்று விசாரணைகளின் போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-56)

## சூரியனின்...

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணப் பிராந்திய வளிமண்டலவியல் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன். “யாழ்ப்பாண மாவட்டத்தின் அதியுச்ச வெப்பநிலை கடந்த 13ஆம் திகதி 34.9 செல்சியசாகவும், 14ஆம் திகதி 34.3 செல்சியசாகவும், நேற்றுமுன்தினம் 34.4 செல்சியசாகவும், நேற்று 34.3 செல்சியசாகவும் பதிவாகியுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ஒரு செல்சியஸ் அல்லது அதற்கும் குறைந்தளவான வேறுபாடே உள்ளது.

காற்று தற்போது ஓரளவேனும் ஆதிக்கம் செலுத்துகின்றது. ஆனால் எதிர்வரும் 25ஆம் திகதிக்குப் பின்னர் காற்றின் ஆதிக்கம் குறைவடையும். இதனால் இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெப்பநிலை 36 செல்சியஸை எட்டும் சாத்தியமுள்ளது” என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-ம-10)

## மீதொட்டமுல்ல...

இவ்வாறு அழைப்பு விடுக்கிறார் எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

இது தொடர்பில் எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தால் நேற்று அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மீதொட்டமுல்ல பிரதேசத்தில் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற துயரச் சம்பவத்தால் உயிரிழந்தவர்களின் குடும்ப உறவுகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தச் சம்பவமானது நூற்றுக் கணக்கான குடும்பங்களின் வாழ்க்கையைப் பாதித்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து அரசு முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்யவும் வேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கிறேன்.

இந்த இக்கட்டான நிலமையில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பாடுபடும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தச் சம்பவத்தில் காயமுற்றோருக்காக நான் வேண்டுவதுடன் அவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தனை செய்கிறேன்.

இந்த துர்ப்பாக்கிய நிலைமைக்கு முகம்கொடுத்திருக்கும் எமது சகோதர சகோதரிகளுக்கு எமது ஒற்றுமையை வெளிக்காட்ட முன்வருமாறு நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன் - என்றுள்ளது. (வ-5)

## பாதிக்கப்பட்ட...

நடவடிக்கைகளின் போது பணத்தை ஒரு தடையாக கருத வேண்டாம். சேத மதிப்பீட்டு அறிக்கைகளும் எனக்கு விரைந்து வழங்கப்பட வேண்டும்”

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பான அவசர கலந்துரையாடல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில், இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

குப்பை மேட்டை அந்தப் பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கான செயற்றிட்டங்கள் குறித்து இதன்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. தற்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மக்களை அந்தப் பிரதேசத்திலிருந்து அகற்றி அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் அரச தலைவர் மைத்திரி ஆலோசனை வழங்கினார்.

மீதொட்டமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள நெல் விற்பனை சபைக்கு சொந்தமான 3 களஞ்சிய சாலைகளை தற்காலிகமாக உபயோகித்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. மக்களுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் தற்காலிக இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அரச தலைவர் மைத்திரிபால அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மக்களது வீடுகளில் காணப்படும் பெறுமதி மிக்க பொருள்களின் பாதுகாப்புத் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அவை தொடர்பில் உரிய மதிப்பீடுகளை பெற்றுக் கொள்வதற்கும், பாதுகாப்பை வழங்குவதற்கு முறையான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அரச தலைவர் ஆலோசனை வழங்கினார்.

இடருக்கு உள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் சேதமடைந்த சொத்துக்கள் பற்றிய கணிப்பீடுகளையும், மதிப்பீடுகளையும் மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை 5 தினங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் அரச தலைவர் கேட்டுக்கொண்டார்.

தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து இதன்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன், மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கும், அவர்களை மீள குடியமர்த்துவதற்கும் அரசால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மக்களின் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகாத வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அரச தலைவர் மைத்திரிபால அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இது தொடர்பான கூட்டங்களை மூன்று தினங்களுக்கு ஒரு தடவையாவது நடத்த வேண்டும் என்று குறிப்பிட்ட அரச தலைவர் மைத்திரிபால, எதிர்வரும் புதன்கிழமை மு.ப. 8.30க்கு இடர் முகாமைத்துவ அமைச்சில் மீண்டும் கலந்துரையாடல் நடைபெறும் என்றும் அறிவித்தார் என்று செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## யாழ்ப்பாண...

அமைக்கப்படவுள்ள வணிக வளாகத்தை யாழ்ப்பாண நகரின் மத்தியில் அமைப்பது தொடர்பில் ஆராய மாகாண சபையினர் முன்வர வேண்டும். யாழ்ப்பாணம் நகரச் சந்தை மற்றும் அதனுடன் தொடர்புபட்டதான வெற்றிலைக்கடை, பழக்கடை, சந்தை, புடவைக் கடையென சுமார் 100 கடைகள் அமைந்துள்ள ஒரு ஏக்கர் நிலப்பரப்பிலும் அதிகமான பகுதி யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலம். இந்தப் பகுதி முக்கிய இடமாக விளங்குகின்றது.

அந்தப் பகுதியில் ஓர் 4 அடுக்கு மாடியை அமைத்து அதன் கீழ்ப் பகுதியில் வாகனத் தரிப்பிடத்தையும் ஏற்படுத்தினால் அது மிகவும் பயனுள்ள பிரதேசமாக மாற்றமடையும். இந்தப் பகுதியில் அந்தக் கட்டடத்தை அமைப்பது தொடர்பில் ஆராயுமாறு நாம் ஏற்கனவே வடக்கு மாகாண முதலமைச்சருக்கு கடிதம் வழங்கியுள்ளோம். இது தொடர்பில் ஆராய்வதாக முதலமைச்சரும் பதிலளித்திருந்தார்.

வணிக வளாகத்தை யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியில் அமைப்பது தொடர்பில் கரிசனை கொண்டால் அங்கே தற்போது வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை தற்காலிகமாக பண்ணைப்பகுதிக்கு மாற்றும் நடவடிக்கைக்கு வணிகர் கழகம் சார்பில் அனுசரணை வழங்கப்படும் - என்றார். (வ-5,101)

## பாதுகாப்புத்...

தெரிவித்தார். காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டவரைவு கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில், குறிப்பாக இராணுவ முகாம்களுக்குள் தேடுதல் நடத்துதல் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக, பாதுகாப்புத் தரப்பினர் ஆட்சேபனை எழுப்பியிருந்தனர். காணமற்போனோர் அலுவலக சட்டத்தில் எந்த விடயங்களில் தமக்கு ஆட்சேபனைகள் உள்ளன என்பதைக் குறிப்பிட்டு 15 பக்கத்திலான ஆவணத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், பாதுகாப்பு அமைச்சின் செயலர் கையளித்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் கையளிக்கப்பட்ட ஆவணத்தை அவர்களின் ஆட்சேபனைகளை அரச தலைவர் நிராகரித்து விட்டார் என்று தெரியவருகின்றது.

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் அமைச்சரவைத் தீர்மானம் முன்வைக்கப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள திருத்தத்தில், மக்கள் விடுதலை முன்னணியின் திருத்தம் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது. வேறு திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்புத் தரப்பினரின் ஆட்சேபனைகளை அரசதலைவர் நிராகரித்திருந்தமையாலேயே அந்தத் திருத்தங்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என்று அரச தலைவருக்கு நெருக்கமான வட்டாரங்களிருந்து தெரியவந்தது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியிடம் கேட்டபோது, அவ்வாறு நிராகரிக்கப்படவில்லை. விரைவில் பதில் வழங்குவதாக அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்துள்ளார் - என்றார். (வ-5)

## அடுத்த...

தருகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் மூன்றாவது தடவையாக அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

திருகோணமலையில் எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு குத்தகைக்கு விடுதல் உள்ளிட்ட முக்கியமான சில விடயங்கள் குறித்து பேச்சு நடத்தும் நோக்கிலேயே அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறார் என்று கூறப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவது தொடர்பில் இந்தியா இராஜதந்திர ரீதியில் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளதாகக் கூறப்படும் நிலையிலேயே, அயலுறவுத்துறைச் செயலரின் தற்போதைய பயணம் அமைந்துள்ளது. (வ-5)

## மத்திய...

தயாரிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட திட்டம் தொடர்பில் அனைத்துத் தரப்புக்களையும் உள்ளடக்கிய உயர்மட்டக் கலந்துரையாடல் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. மத்திய வங்கி அதிகாரிகள், இராணுவத்தினர், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை, பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இதன் பின்னர் தங்க நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதேவேளை, இராணுவத்தினரிடம் இன்னமும் தங்க நகைகள் உள்ளிட்ட பல்வேறு ஆபரணங்கள் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் குறிப்பிட்டார்” என்று கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## முப்படைத்...

இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவமோகன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் முப்படையினர் ஆக்கிரமித்துள்ள இடங்களின் விவரங்களை காண்பித்து, அவற்றை விடுவிப்பது தொடர்பில் கூட்டமைப்புக் கோரவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இந்தச் சந்திப்புக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சந்திப்பு இடம்பெறவுள்ளது. அதில் முப்படைத் தளபதிகளுடனான சந்திப்பில் முன்வைக்கப்படும் விடையங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## இரண்டாம்...

“பாடசாலை மாணவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படுவார்கள். மாணவர்களுக்கான காப்புறுதிப் பணம் தினமும் ஒரு ரூபா செலுத்தப்பட வேண்டும். இவ்வாறு செலுத்தும் ஒரு ரூபா பாடசாலை நாள்களுக்கு மட்டுமா? அல்லது தினம்தோறுமா? என்பது போன்ற விவரங்கள் எதிர்வரும் வாரம் அமைச்சால் முழுமையான சுற்றறிக்கை மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்” என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ-5,101)

## நயினாதீவு...

அவர் யாழ்ப்பாணம் வருகை தருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்படை முகாமுக்கு இன்று முற்பகல் 11 மணிக்கு உலங்கு வானூர்தியில் வருகை தரும் அரச தலைவர் உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் படகில் நயினாதீவுக்குச் சென்று நாகவிகாரையில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபடுவர். அதன் பின்னர் மீண்டும் காரைநகருக்குப் படகில் சென்று கொழும்புக்குத் திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. அவரது பயணத்தையடுத்து கடற்படைத்தளபதி நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4, 101)

## ஒரே...

இந்த விபத்து பூநகரி முக்கொம்பனில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

“மோட்டார் சைக்கிளில் 3 பேர் பயணித்துள்ளனர். அவர்களில் பூநகரி வெட்டுக்காடு பகுதியைச் சேர்ந்த சிவகுருநாதன் (வயது-52) என்பவரே உயிரிழந்தார். அவர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பணிப்பாளருடன் சென்றுகொண்டிருந்தபோதே அவரது வாகனம் விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. காயப்பட்டவர்களில் ஒருவருக்குக் கால் முறிந்துள்ளது. அவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பணிப்பாளரின் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார். விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன” என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4, 101)

## தென்பகுதி...

மைல்கள் தூரத்தில் இந்து சமுத்திரத்தில் உணரப்பட்டுள்ளது. நேற்றுப் பிற்பகலே பூமியதிர்ச்சி ஏற்பட்டது. அது தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன” என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. (வ-4)



# மாடி வீட்டு ஏழைகள்

ஒரு ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவருக்கு ஒரு மகன். அவன் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டான். அவன் இளைஞனானபோது தந்தை அவனுக்கு தொழில் மற்றும் குடும்பப் பொறுப்புக்களையும் கொடுக்க எண்ணினார். ஆனால் பொறுப்புக்களை ஏற்று நடத்துவதற்குரிய பக்குவம் தனது மகனுக்கு ஏற்படவில்லை என்பதைப் புரிந்து கொண்ட தந்தை, அவன் உலகத்தைத் தெரிந்து கொண்டு அனுபவம் பெற்ற பின்னரே பொறுப்புக்களை ஒப்படைக்க எண்ணினார். அதன்படி மகனை மிகவும் வசதிகள் குறைந்த ஏழை மக்கள் வாழும் குடியிருப்புக்களில் சிலகாலம் தங்கி வாழ்ந்து வரும்படி அனுப்பி வைத்தார்.

ஒரு வருடகாலம் அவர்களுடன் வாழ்ந்த மகன் வீட்டுக்கு வந்தான். "மகனே! இந்த ஒரு வருட காலத்தில் நீ வாழ்ந்த இடத்தில் என்ன விடயங்களைக் கற்றுக் கொண்டாய்" என்று கேட்டார். மகனோ "தந்தையே! ஒன்றல்ல இரண்டல்ல. நிறைய விடயங்களைக் கற்றுக் கொண்டேன்" என்றான். "அப்படியா? மிகவும் நல்லது என்றார் தந்தை மகிழ்வுடன். மகன் "தந்தையே அவர்கள் தரன் பணக்காரர்கள் அது மட்டுமல்ல சுகதேகி களாகவும் சுதந்திரமாகவும் வாழ்கிறார்கள்" என்றான். "நாம் நிறையப் பணம் வைத்திருக்கிறோமென்பதால் பணக்காரர்கள் என்று அர்த்தமல்ல. பணத்தை வைத்துக் கொண்டு அந்த எவராவது கொள்ளையடித்து விடுவார்கள் என்ற அச்சத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கி றோம். நிறையப் பணம் உள்ளதென்பதற்காக வயிறு புடைக்க 4 அல்லது 5 வேளை என கண்ட கண்ட உணவுகளை உண்ணுகிறோம். இதனால் எல்லா நோய்க ளும் உடம்பில் குடிகொள்ள பின்னர் வைத்தியரைத் தேடி அலைகிறோம். உப்பு, உறைப்பு, இனிப்பு, கொழுப்பு என்று தவிர்க்கிறோம். இறுதியில் கூழைக் கூடக் குடிக்க வேண்டிய உணவுக் கட்டுப்பாடு ஏற்பட்டு விடு கிறது. அறுசுவை உண்டியை அறவே நீக்கி உண்ண வேண்டிய நிலை எமக்கு இப்போது கூறுங்கள் பணமிருந்தும் நாம் பணக்காரர்களா? அங்கு வாழும் மக்களிடம் மேலதிக பணமும் இல்லை. அச்சப்பட வேண்டிய தேவையுமில்லை. தமக்குத் தேவையான உணவைத் தாங்களே பயிரிட்டு உண்ணுகிறார்கள். அளவோடு உண்ணுகிறார்கள். சிலவேளைகளில் மூன்று வேளைக்கு ஒரு வேளையாகவும் உண்டு வயிற்றைக் காயப் போடுகிறார்கள். எந்த வித நோய்களும் அவர்களை அணுகுவதில்லை சுகதேகிகளாக வாழ்கிறார்கள்.

நாம் இங்கே அலங்கார செயற்கை விளக்குகளை ஏற்ற, நிலா மற்றும் நட்சத்திரங்களில் ஒளியில் அவர்கள் விளக்கேற்றுகிறார்கள். நாம் அறைகளுக்குள் முடங்கி குளிரூட்டிகள் மூலம் குளிர்ச்சியையும் மின் விசிறிகள் மூலம் செயற்கைக் காற்றையும் பெற்று வாழ அவர்கள் திறந்த வெளிகளில் இயற்கைக் காற்றை சுவாசித்து மகிழ்கிறார்கள். இப்படி அச்சமின்றி நோய் நொடியின்றி சுதந்திரமாக உலாவி உறவுகளோடு ஒட்டி உறவாடி மகிழும் இவர்களை ஏழைகள் என்று பலரும் எப்படி கூறமுடியும்? அவர்களுக்கு கிடைக்கும் மன அமைதியும் மகிழ்வும் எமக்குண்டா? பணக்காரன் என்பவனுக்கு உறவுகள் எல்லாம் எட்டத்தில் தானே! நான் இது வரையில் எமது உறவினரோடு பழகியதே கிடையாதே. மேலும் ஏழ்மை என்பது நம் எண்ணத் திலே குடிகொண்டால் என்னதான் வசதி கிடைத்த போதிலும் ஏழ்மை என்ற கூட்டுக்குள் இருந்து விடு தலை பெற முடியாது. எனவே வாழ்க்கை என்பது பணம் மட் டுமே அல்ல. நோயற்ற வாழ்வு அச்சமற்ற சுதந்திரமான நிலை. உறவுகளோடு சேர்ந்த மகிழ்ச்சியான மலர்ந்த வாழ்வு என்பவையாகும். இவையே நான் அங்கு கற்றுக் கொண்ட பாடங்கள்" என்றான் மகன்.

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்"
பணமிருந்தும் அதனை மனச்
சுத்தியோடு
அனுபவிக்க முடியாதவனே ஏழை.



## பிரமிட்டுக்கள்

எகிப்திய நைல் நதிக்கரை நாகரிகத்தின் எச்சமாக விளங்குபவை பிரமிட்டுக்களாகும். எகிப்திய மன்னர்கள், அரசியர்களின் பிரமாண்டமான கல்லறைகளே இந்தப் பிரமிட்டுக்கள். லிபியன், பாலை நிலத்தின் எல்லைப் பிரதேசமான கீஸா என்னுமிடத்தில் மிக முக்கிய பிரமிட்டுக்கள் உள்ளன. இவை சதுர வடிவான அடித்தளத்தில் நான்கு பக்கங்களும் முக்கோணங்களாக உச்சியில் ஒன்று சேரும் வடிவின. கீஸாவில் கி.மு 2900ஆம் ஆண்டில் கூபு என்னும் எகிப்திய மன்னனால் கட்டடப்பட்ட மிகப் பெரிய பிரமிட் உள்ளது.

இதன் அடித்தளம் 13 ஏக்கர் பரப்புடையது. இதன் உச்சி தரையிலிருந்து 451 அடி உயரத்தில் உள்ளது. இதனைக் கட்டி முடிக்க 2300000 கற்கள் பயன்படுத்தப்பட்டன. பிரமிட்டினுள்ளே மன்னனதும், அரசியினதும் கல்லறைகள் உள்ளன. இங்கு இருவரினதும் உடல்கள் பதப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பதப்படுத்திய உடல்களே மம்மிகள் எனப்படும்.

பண்டைய எகிப்தியர்அ மனிதன், இறந்தாலும் அவனுடைய ஆன்மா அவனது உடலை நாடிவரும் என்று நம்பியதாலேயே உடல்களை மருந்தூட்டி பாதுகாத்து வைத்தனர். இந்த மம்மிகளுடன் அவர்கள் பயன்படுத்திய உடை, உணவு, ஆபரணங்கள் முதலானவையும் பிரமிட்டுக்குள் வைக்கப்படும். எகிப்தில் இன்று 75 பிரமிட்டுக்கள் வரை உள்ளன. இப்பிரமிட்டுக்களைக் கட்டிமுடிக்க ஒரு லட்சம் மக்கள் 20 ஆண்டுகள் வரை வேலை செய்திருப்பர் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இப்பிரமிட்டுக்கள் உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றன.



## நேரத்தின் மதிப்பு

நேரத்தின் மதிப்பு என்ன வென்று தெரிய எட்டு வழிகள்

1. ஓர் ஆண்டின் மதிப்பு என்ன வென்று பரீட்சையில் தோல்வி அடைந்த மாணவனைக் கேளுங்கள்.
2. ஒரு மாதத்தின் மதிப்பு என்ன வென்று குறைப்பிரசவத்துக்கு ஆழான ஒரு தாயைக்கேளுங்கள் .
3. ஒரு வாரத்தின் மதிப்பை ஒரு வாரப்பத்திரிகையின் ஆசிரியரைக் கேளுங்கள்.
4. ஒரு நாளின் மதிப்பு என்னவென்பதை அன்றைய தினம் வேலை கிடைக்காமல் போன தினக்கூலித் தொழிலாளியிடம் கேளுங்கள். '
5. ஒரு மணி நேரத்தின் மதிப்பை ரயில் நிலை யத்தில் சுற்றத்தாருக்காக காத்திருக்கும் ஒரு மனி தனைக் கேளுங்கள்.

6. ஒரு நிமிடத்தின் மதிப்பை தான் செல்ல வேண்டிய புகைவண்டியைத்தவறவிட்டபயணியிடம்கேளுங்கள்.

6. ஒருவிநாடியின் மதிப்பை ஒரு விபத்தில் உயிர்தப்பிய ஒருவரைக் கேளுங்கள்.

8. ஒருமில்லிவிநாடியின்மதிப்பைஒலிம்பிக்போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவரைக் கேளுங்கள்.

## மனதை மயக்கும் கப்பல்

அலை கடலின் மேலே
அசைந்து வரும் கப்பல்
தொலைவில் நின்று பார்த்தால்
இலைபோல் சிறிதாய் மிதக்கும்!
அருகில் சென்று பார்த்தால்
ஆனையைப் போல் முறைக்கும்!

ஆளை ஏற்றிப் போகும்
ஊரைச் சுற்றிக் காட்டும்
பனையளவு உயரும் அலைக்கும்
பயப்படாது செல்லும்!
கலையால் நம்மைக் கவரும்!
மலைப்பாய் மனதை மயக்கும்!

மகிழினி காந்தன்



## கொடுக்கப்பட்ட எழுத்துக்கள் கொண்டு சொற்களை ஆக்கி எழுதுவோம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ந | டி | ம் | வ | டு | கா | ம | வ |
| மா | லை | க | ண | ப | ட் | க | ணி |
| ண் | த | ட | த | சி | ல் | பி | சை |
| அ | கை | மா | இ | ம் | கை | ம | பா |

உ+ம் படம்

1. ......................
2. ......................
3. ......................
4. ......................
5. ......................

6 ......................
7......................
8 ......................
9......................
10 ......................





வடக்கு மாகாண 23 வயதுப் பிரிவு பெண்கள் அணி

# கடினப்பந்து கிரிக்கெட் விளையாட பெண்கள் முன்வருதல் அவசியம்

## இளநிலை தேசிய அணித் தேர்வாளர் ஏ.எஸ். நிசாந்தன் வலியுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 17

"பாடசாலை மட்டத்தில் பெண்கள் கடினப் பந்து கிரிக்கெட்டில் விளையாடுவோரின் எண்ணிக்கையை அதிகரித்தால் வடமாகாண அணி தேசிய மட்டத்தில் சாதிக்க முடியும்" இவ்வாறு தெரிவித்தார் இளநிலை தேசிய அணி தேர்வாளர் ஏ.எஸ். நிசாந்தன்.

கடினப்பந்து கிரிக்கெட்டை விளையாடும் பெண்கள்பிரிவு அணிகள் தொடர்பில் அவருடன்மேற்கொண்ட பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் பெண்கள்பிரிவில் ஒரு சில பாடசாலைகளே கடினப் பந்து கிரிக்கெட்டை விளையாடி வருகின்றன. அண்மையில் நடைபெற்ற தேசிய மட்டத் தொடர் ஒன்றில் வடமாகாண அணியில்விளையாடும் பதினொருவர் குழாமில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையிலிருந்து 7 வீராங்கனைகளும், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலிருந்து ஒரு வீராங்கனையும், மன்னார், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 3 வீராங்கனைகளும் உள்வாங்கப்பட்டிருந்தனர். இந்த நிலை மாற்றம்பெற்று அனேகமான பாடசாலைகள் பெண்கள் கிரிக்கெட்டில் ஈடுபட வேண்டும்.

கடினப் பந்து கிரிக்கெட்டை பாடசாலைகளில் ஆரம்பிப்பதற்கு அதிகளவான பணம் தேவைப்படுகிறது. இதனால் பல பாடசாலைகள் இந்த விளையாட்டை ஆரம்பிப்பதில் தயக்கம் காட்டி வருகின்றன. இதனை நிவர்த்தி செய்வதற்கு யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கம், வடமாகாண கிரிக்கெட் சங்கம் போன்றவற்றினூடாக இலங்கை கிரிக்கெட் சங்கத்திடம் உதவி பெற்று கொள்ள முடியும்.

அண்மையில் நடைபெற்ற 23 வயது பெண்கள் பிரிவு தேசிய மட்டத் தொடரில் வடக்கு அணி அரையிறுதிவரை முன்னேறியிருந்தது. வடக்கில் பெண்கள் பிரிவு கடினப்பந்து கிரிக்கெட் அணி இந்த வருடமே உருவாக்கப்பட்டது. முதல் தொடரிலேயே அரையிறுதிவரை சென்றமை சிறந்த அடைவு என்றே கருதுகிறேன். அரையிறுதியில் பலம்வாய்ந்த மேல் மாகாண அணியுடனான ஆட்டத்தில் வடக்கு தோல்வி அடைந்தது. எனினும் அடுத்தடுத்த தொடர்களில் முன்னேற முடியும் என நிசாந்தன் மேலும் தெரிவித்தார். (ம-422)

## மருதநிலாவை தோற்கடித்தது ஈஸ்வரன் அணி

யாழ்ப்பாணம், ஏப். 17

வவுனியா நியூபைட் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வவுனியா ஈஸ்வரன் அணி வெற்றி பெற்றது.

நியூபைட் விளையாட்டுக் கழகத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து மருதநிலா பி அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் ஈஸ்வரன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## யாழ். மாவட்ட பிரதேச செயலக துடுப்பாட்ட அரையிறுதி, இறுதி

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்கள் பிரிவு மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியுடன் மோதவுள்ளது. (ம-23)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பன்னாலை கணேசன் இளைஞர் கழகத்தால் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் வைத்து, கோலூன்றிப் பாய்தலில் தேசியச் சாதனையாளராக வலம்வரும் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனை அனித்தா கௌரவிக்கப்பட்டார். (ம-23)

## பளுதூக்கல்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் மாவட்ட பளுதூக்குச் சங்கம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தத் திட்டமிட்ட இருபாலாருக்குமான திறந்த மட்ட பளுதூக்கல் தொடர் எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான பங்குபற்றல் உள்ளிட்ட மேலதிக விவரங்களை யாழ்ப்பாண மாவட்ட பளுதூக்குச் சங்கத் தலைவருடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)



அக்கினிச் சிறகுகள் அமைப்பு நடத்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில், பருத்தித்துறை லீக்கில் இருந்து வல்வை ஆதிசக்தி அணி மாகாண மட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே ஆதிசக்தி அணி மாகாணமட்டச் சுற்றுக்குத் தகுதிபெற்றது. (ம-108)

## ஆதாரங்கள் சிக்கின

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்கள் சார்ஜில்கான், காலித் லத்தீப் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் சிக்கின என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடர் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது. இந்தத் தொடரில் சார்ஜில் கான் மற்றும் காலித் லத்தீப் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து வந்தன. இந்த நிலையில் இவர்கள் இருவரும் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டது என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண நூல்நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்திலேயே அடுத்த இரு ஆண்டுகளுக்கான நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. இதன்படி தலைவராக சட்டத்தரணி வி.மணிவண்ணன், செயலாளராக கா.சசிகரன், பொருளாளராக எஸ்.கிருபாகரன், உபதலைவர்களாக ஜி.டி.மதியழகன், கே.ஜெயபாலசிங்கம், எஸ்.திலகராஜ், உபசெயலாளராக பி.லவேந்திரா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ம)







# மீண்டும் மலிங்க



ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணிக்கெதிரான நேற்றைய ஆட்டத்துக்காக மீண்டும் மும்பை அணியில் உள்வாங்கப்பட்டார் மலிங்க. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் மலிங்க சொல்லிக் கொள்ளும் படியான பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை. இதனால் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை அணியில் இருந்து மலிங்க நீக்கப்பட்டு பதில் வீரராக சவுத்தி உள்வாங்கப்பட்டார். ஆனால் அந்த ஆட்டத்தில் சவுத்தி பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. இதனால் சவுத்தி நீக்கப்பட்டு மலிங்க மீண்டும் உள்வாங்கப்பட்டார். நேற்று அவர் மக்கலத்தை வீழ்த்தினார். (ம)

# குஜராத்தை வென்றது மும்பை இந்தியன்ஸ்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் லயன்ஸை வென்றது மும்பை இந்தியன்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் 4 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மக்கலம் 64 ஓட்டங்களையும், டினேஸ் கார்த்திக் 48 ஓட்டங்களையும், ரெய்னா 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மக்கலினகன் 2 இலக்குகளையும், மலிங்க, ஹர்பஜன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை ரணா, பொலார்ட்டின் அதிரடியால் 4 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ரணா 53 ஓட்டங்களையும், ரோகித் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும், பொலார்ட் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரை 2 இலக்குகளையும், பிரவீன் குமார், முனாப் பட்டேல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)





# விமர்சனங்களை எதிர்கொள்ள கற்றிருத்தல் மிகவும் அவசியம்

## சானியா மிர்சா கருத்து

பன்னாட்டு அரங்குக்கு வந்துவிட்டால் விமர்சனங்களை எதிர்கொள்ள கற்றிருத்தல் அவசியம் என்று இந்திய ரென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா தெரிவித்தார்.

சென்னையில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

என்னைச் சுற்றி ஏராளமான எதிர்மறைத் தன்மை உள்ளது. சமூகவலை தளங்களால் பல ஏற்றங்கள் இருந்தாலும் சில இறங்கங்களும் உள்ளன. காலத்துக்குத் தகுந்தபடி விமர்சனங்களை எதிர்கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் த்னிநபர் மீதான அவதூறுகளைக் கூறுவதை தவிர்க்க வேண்டும். விமர்சனங்களை எதிர்கொள்ளக் கற்றதால்தான் இரு ஆண்டுகளாக தொடர்ந்து முதலிடத்தில் இருந்துள்ளேன் என சானியா மேலும் தெரிவித்தார். (ம)

# பஞ்சாப்பை கட்டுப்படுத்தியது டெல்லி

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணியை தனது வேகப்பந்து வீச்சுப் பலத்தால் கட்டுப்படுத்தியது டெல்லி அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக சாம்சன் மற்றும் பில்லிங்ஸ். அணி 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சாம்சன். அரைச்சதம் கடந்தார் பில்லிங்ஸ். மத்திய வரிசையில் அண்டர்சன் 39 ஓட்டங்களைக் குவித்தார். 6 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களைக் குவித்தது டெல்லி.

பந்துவீச்சில் ஆரோன் 2 இலக்குகளையும், சன்டீப் சர்மா, மொகிற் சர்மா, அக்சர் பட்டேல், கறிப்பா நால்வரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப்புக்கு முன்வரிசை வீரர்களாக வோக்ரா, அம்லா, சகா முறையே 3, 19, 7 என ஏமாற்றிச் சென்றனர். மில்லர், தான் சேர்த்த 24 ஓட்டங்களுக்காக 28 பந்துகளை எடுத்துக்கொண்டார். அக்சர் பட்டேல் 44 ஓட்டங்களைக் குவித்ததே அதிகபட்சம். 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 137 ஓட்டங்களை மட்டுமே பஞ்சாப்பால் எடுக்க இயன்றது.

வேகப்பந்து வீச்சாளர்களான மொறிஸ், கும்மின்ஸ் இருவரும் தலா 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 23 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தனர். (ம)



# கால்பந்து அரங்கக் கட்டுமானத்தில் பெருந்தொகைப் பணம் சுருட்டல்

## பிரேசில் மீது குற்றச்சாட்டு



பிரேசிலில் கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்துக்காகக் கட்டப்பட்ட அரங்குகளின் கட்டுமானத்தில் பெருந்தொகைப் பண மோசடி இடம்பெற்றுள்ளது என்று பிரேசில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ரியோடிஜெனிரோநகரில் அமைக்கப்பட்ட மரகனா கால்பந்தாட்ட அரங்கு, பிரேசிலியாவில் உள்ள மான் கரிஞ்சா கால்பந்தாட்ட அரங்கு, ரெசிபேயில் உள்ள ஏரெனா கால்பந்து அரங்கு ஆகியவற்றின் கட்டுமானத்தில் பெருந்தொகைப் பணம் சுருட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக ரியோவில் அமைக்கப்பட்ட மரகனா அரங்குக்கு திட்டமிட்ட செலவைக் காட்டிலும் 75 சதவீதமான தொகை கூடுதலாகப் பிடித்துள்ளது. பிரேசிலின் மிகப்பெரிய கட்டுமான நிறுவனமான ஓடெபிரகெட் நிறுவனத்தின் 77 முன்னாள் அதிகாரிகள் இந்த முறைகேட்டை ஊடகங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வெற்றியுடன் விடைபெறுவாரா மிஸ்பா

மிஸ்பாவின் பன்னாட்டு கிரிக்கெட் வாழ்வு வெற்றியுடன் முடிவுக்கு வருமா என்பது கிரிக்கெட் ரசிகர்கள் பலரின் கேள்வியாகவுள்ளது.
பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. எதிர்வரும் 21ஆம் திகதி இந்த இரு அணிகளுக்குமான டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ளது.
மிஸ்பா, யுனிஸ்கான் இருவரும் இந்தத் தொடருடன் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற வுள்ளனர். அவர்களை வெற்றியுடன் வழியனுப்ப அந்த அணி தற்போது கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டுவருகிறதுஎன்று தெரிவிக்கப்படுகிறது. (ம)




# ரியல் சொசைற்ரெட்டை வென்றது பார்சிலோனா



லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் சொசைற்ரெட்டை வென்றது பார்சிலோனா.
ஆட்டம் ஆரம்பித்து 16 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. அடுத்த பத்தாவது நிமிடத்தில் பார்சிலோனாவின் இரண்டாவது கோலும் மெஸ்ஸியால் பதிவானது. 42 ஆவது நிமிடத்தில் மரினோ ரியல் சொசைற்ரெட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த நிமிடத்திலேயே அதற்கும் பதிலடி கொடுத்தார் பாசோ. முதல் பாதியின் முடிவில் பார்சிலோனா 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் ரியல் சொசைற்ரெட்டின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார் ஸ்கேவி. வேறெந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றிபெற்றது. (ம)

## ஸ்போர்டிங்கை தோற்கடித்தது ரியல் மட்ரிட்

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்போர்டிங்கை வென்றது ரியல் மட்ரிட்.
ஆட்டத்தின் ஆரம்பம் ஸ்போர்டிங்குக்குச் சாதகமான விதத்திலேயே அமைந்தது. அந்த அணியின் சார்பாக 14 ஆவது நிமிடத்தில் முதல் கோல் பதிவானது. 17 ஆவது நிமிடத்தில் இஸ்கோ பதிலடி கொடுத்து மட்ரிட்டின் கோலைப் பதிவுசெய்தார். 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியின் 50 ஆவது நிமிடத்தில் விசாகா கோலொன்றைப் பதிவுசெய்து ஸ்போர்டிங்கின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். 59 ஆவது நிமிடத்தில் மொறாட்டா, 90 ஆவது நிமிடத்தில் இஸ்கோ கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது. (ம)



## கோக்லியை வென்றார் டோனி

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரை வென்றது புனே.
நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தீர்மானித்தது பெங்களூர். புனேயின் ஆரம்ப வீரர்களான ரகானே - திரிபதி இணை அடித்தாடியது. அணி 63 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 30 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் ரகானே. 31 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் திரிபதி. டோனி, சிமித் இருவரும் மத்திய வரிசையை ஓரளவு பலப்படுத்தினர். சாஹலின் பந்துவீச்சில் அரங்குக்கு வெளியே சிக்சரொன்றை அனுப்பினார் டோனி. அவர் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிமித்தால் முடிந்தது 27 ஓட்டங்கள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைச் சேர்த்தது புனே.
பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூருக்கு ஆரம்ப வீரரான மன்டீப் சிங் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். கோக்லி 28 ஓட்டங்களைச் சேர்த்தார். வில்லியர்ஸ், தான் சேர்த்த 29 ஓட்டங்களுக்காக 30 பந்துகளை எடுத்துக்கொண்டார். அதிகப்படியான பந்து விரயமும் பெங்களூருக்கு பாதகமாக வந்தமைந்தது. 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 134 ஓட்டங்களையே பெங்களூரால் எடுக்க இயன்றது. 27 ஓட்டங்களால் வெற்றிபெற்றது புனே. (ம)



**பணிப்பெண் தேவை**
யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீட்டிற்கு வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
077 220 8284

**விற்பனையாளர் தேவை**
யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. (யாழ். நகரத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) மேலும் சிட்டை எழுதுனர்.
ஆண் 40-55.பெண் 20-30
தொடர்புகளுக்கு.
021 321 3117/ 071 261 4743

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை**
யாழ். நகரில் உள்ள
பிரபல தனியார் நிறுவனத்துக்கு
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.



வயது : 30 - 50
பகல் / இரவு வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
திறமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் இன்று (17.04.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை கீழ் உள்ள முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.
**ES பிரிண்டர்ஸ்**
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.